# மலை முகடுகளில் மதுரத் தமிழ் முழக்கம்




மலையகத் தமிழ் ஆராய்ச்சி பற்றிய பத்திரிக்கை செய்தி திரட்டு

# மலை முகடுகளில் மதுரத் தமிழ் முழக்கம்

*அருள் சத்தியநாதன்*

கடந்த ஜனவரி மாதம் முதல் எப்போது நடந்தேறும், எனப் பலராலும் எதிர்பார்க்கப் பட்டு வந்த அந்த மலையக தமிழராய்ச்சி மாநாடு இறுதியாகக் கடந்த மாதம் 17ம் திகதி பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் ஆரம்பமாகி மூன்று நாட்களுக்குத் தொடர்ச்சியாக நடைபெற்று முடிந்தது.

ஏற்கனவே முன்வைக்கப்பட்ட அறிவித்தல்கள் மற்றும் யோசனைகள் ஏற்படுத்தியிருந்த எதிர்பார்ப்பு மட்டத்தில் பார்க்கும் போது ஏற்பாடுகள் திருப்தி அளிப்பதாக இருக்கவில்லை. என்பதை ஒத்துக் கொள்ளத் தான் வேண்டும்.

மாநாடு நிகழ்ச்சிகள் வெவ்வேறு நகரங்களில் நடைபெறும் மலையக வரலாற்றைத் தொட்டுக் காண்பிக்கும் பிரசுரங்கள் மற்றும் புகைப்படங்கள் அடங்கிய ஆவண கண்காட்சி நடைபெறும்: மலையக இலக்கிய கருத்தரங்கு நடைபெறும் : கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றெல்லாம் முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவை அனைத்தும் மிஸ்ஸிங்.

நேரம் இல்லை: இறுதி நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவு இதனால் தான் எதிர்பார்த்த மாதிரி காரியங்கள் நடக்கவில்லை என்றெல்லாம் சமாதானங்கள் கூறப்பட்ட போதிலும், அவை போதுமானவையாக இல்லை என்பது அங்கு சென்றிருந்தவர்களுக்கு பளிச்சென தெரிந்தது.

மாநாட்டுக்கான இறுதி ஏற்பாடுகள் வேகவேகமாக நடத்தியிருக்கலாம். அப்படிச் செய்யப்படும் போது தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். இல்லை என்று சொல்வதற்கில்லை. ஆனால் மாநாட்டுக்கான மதியுரைக் குழு பல மாதங்களுக்கு முன்னலே அமைக்கப் பட்டுவிட்டது. இப்படி இப்படித்தான் காரியங்கள் நடக்க வேண்டும் என அக்குழு திட்டமிட்டு தமது உத்தேச திட்டத்தை பத்திரிகைகளுக்கு அறிக்கைகளாகக் கொடுத்துமிருந்தது. மாநாடு நடைபெறும் தினம் பல தடவைகள் தள்ளிப் போடப்பட்டதற்குக் காரணமும் திட்டமிட்டவாறு காரியங்கள் நடந்தேறவில்லை என்பதாகத் தான் இருக்க வேண்டும்.

அப்படியும் கூட, திட்டமிட்டவாறு ஒழுங்குகளைச் செய்து முடிக்க மதியுரைக் குழுவிற்கு அல்லது ஏற்பாட்டாளர்களுக்கு காலம் போதுமானதாக இருக்கவில்லை என்று காரணம் காட்டப்படுமானால் அவற்றை அப்படியே ஏற்றுத்தான் கொள்ள வேண்டுமா?

திட்டமிட்டவாறு ஏற்பாடுகள் நடந்தேறாமற் போனதற்கு மதியுரைக் குழுவினர் போதிய மதியுரைகள் வழங்காமற் போனது தான் காரணமா நடைமுறை சாத்தியங்களைக் கொண்டிருக்கவில்லையா? என்ற கேள்விகள் அங்கு சென்றிருந்தவர்களிடையே எழுந்தன.

இல்லையேல், மதியுரைக் குழுவினர் அல்லது ஏற்பாட்டாளர்கள் தமது வேலைப்

பளுவைப் பகிர்ந்து அளித்திடும் வகையில் மலர்க்கமிட்டி, மீடியா கமிட்டி, வரவேற்பு உபசாரக் கமிட்டி, கண் காட்சிக் கமிட்டி என உப குழுக்களை அமைத்திருக்கலாம். அது தான் வழக்கம். ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி அதிபர் திரு. தர்மலிங்கம் போன்ற தொழிலாண்மையும், அனுபவமும் செயற் பாட்டுத் திறனும் கொண்டவர்களை அட்டன், நுவரெலியா, கண்டி போன்ற பகுதிகளில் தேடிப்பிடித்து அவர்களிடம் பொறுப்புகளை அளிததிருக்கலாம். அவ்வாறு செய்திருந்தால் தமக்கு அளிக்கப்பட்டிருந்த குறிப்பிட்ட வரையறைகளைக் கொண்ட பணியை அவர்களாலே செவ்வனே செய்து முடித்திருக் கலாம். அவரவர் தத்தமது பணிகளைச் செய்ய, குறைகள் எதுவுமின்றி இந்த ஆராய்ச்சி மாநாடு வெகுசிறப்பாக நடந்தேறி யிருக்கும்.

விழா மலர் வெளியீடு இம்மாநாட்டின் ஆரம்பத் தினத்தன்றோ அல்லது இறுதி நாளன்றோ நடை பெற்றிருக்க வேண்டும். மாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவம் என்றாலேயே மலர் வெளியிடும் இக் காலத்தில் மலையக தமிழாராய்ச்சி மாநாடு தொடர்பாக ஒரு விழா மலர் வெளியிடப் படாதது பெருங்குறையே. இது பற்றி மதியுரைக் குழு தகுந்த காரணம் எதுவும் சொல்லாததோடு, அலட்சிய பாவத்துடன் நடந்து கொண்டது வேதனைக்குரியது.

பத்தனையில் நடந்தேறிய மாநாடு வெகு முக்கியமான ஒரு நிகழ்வு நூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிந்தியாவில் இருந்து பெருந் தொகையான மக்கள் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியரினால் தமது ஆதிக்கத்தின் கீழ் இருந்த நாடுகளுக்கு பெருந்தோட்ட வேலை களுக்காக அழைத்தும் செல்லப்பட்டனர். இலங்கையைத் தவிர, தென்னாபிரிக்கா, பிஜி, மலேசியா, பர்மா, மொரிஷியஸ், சீஷெல்ஸ் என்று பல நாடுகளில் தென்னிந் தியர்கள் இப்படிக் குடியேறினர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்பது தான் விசேஷம்.

இப்போது இந்நாடுகளை எடுத்துக் கொண்டால், இலங்கையைத் தவிர ஏனைய நாடுகளின் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தமது பெருந்தோட்ட வாழ்க்கையைக் கை விட்டு, வர்த்தகம், கல்வி, நிர்வாகம், சுயதொழில் என்ற பல துறைகளில் ஈடுபட்டு சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் பலர் செல்வந்தர்களாகவும் தொழிலாண்மை கொண்டவர்களாகவும் திகழ்கிறார்கள். இந்நாடுகளில் எல்லாம் இந்து மதம் தழைத்தோங்கவும் செய்கிறது.

ஆனால், மலேசியாவைத் தவிர ஏனைய நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு தமிழ்பேச வருவதில்லை. தமிழ் கலாசாரம் அருகி, மேற்கத்திய அல்லது தாம் சார்ந்த நாட்டு கலாசார பாரம்பரியங்களைத்தான் இவர்கள் பின் பற்றி வருகிறார்கள். இந்நாடுகளில் வாழும் இளைய தலைமுறையினரின் பெயர்களில் தான் தமிழ் மணம் வீசுகிறதே தவிர அவர்களின் வாய்களில் இருந்தல்ல. வாழ்க்கை முறைகளிலும் தமிழ் கலாசாரம் அருகி வருகிறது. சரியாகச் சொல்வதனால்,

இன்னும் இருபது வருடங்களில் பெயரளவில் மட்டுமே இவர்கள் தமிழர் களாக இருப்பார்கள். அதன் பின்னர் இந்த ஒரு அம்சமும் இவர்களிடையே மங்கி மறந்து விடும்.

ஆனால் இலங்கையில் வித்தியாசமான நிலை காணப்படுகிறது.

# தென்னிந்தியர் புலம் பெயர்ந்த நாடுகளையும் உள்ளடக்கியதாக மலையக தமிழாராய்ச்சி உலகத் தரம் பெற வேண்டும்




மலையக தமிழாராய்ச்சி மாநாடு தொடர்ந்தும வெற்றி கரமாக செயற்பட வேண்டும் என்ற நோக்கத்தை மட்டுமே மனதில் கொண்டு எழுதப்படும் கட்டுரைத் தொடர் இது. ஆகவே, உள்ளது உள்ளபடி எழுதப்பட இருப்பதால், சம்பந்தப்பட்டவர்கள் மனவருததம் கொள்ளக்கூடாது. ஏனெனில் குறை நிறைகள் உள்நோக்கங்களுடன் இங்கு எடுத்து வைக்கப்படவில்லை. இனி நடக்கவிருக்கும் மாநாடுகள், ஆய்வரங்குகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்பதற்காகவே குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு ஆலோசனைகள் முன்வைக்கப் படுகின்றன. இத்தொடரை Constryctive Criticism ஆக வாசகர்கள் நோக்க வேண்டும்.

இக்கட்டுரைகள் பற்றி வாசகர்களும் இம்மாநாட்டுடன் சம்பந்தப்பட்டவர்களும் கலந்து கொண்டவர்களும் தமது அபிப்பிராயங்கள், கருத்துக்களைத் தெரிவிக்கலாம். மாநாட்டு அமைப்பாளர்கள் இம்மாநாடு தொடர்பான தகவல்களை மற்றும் நிகழ்ச்சிகள் பற்றி அறியத் தருவார்களானால் அவையும் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும். நன்றி.

தொழிற்சங்கங்கள் மலையக மக்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்து விட்ட இந் நிலையில், முதல் நாள் விழாவில் தொழிற்சங்கத் தலைவர்களும், மலையகத்தின் முக்கிய அரசியல் பிரமுகர்களும் விழா மேடைக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டடிருக்க வேண்டும்.

அறிஞர் அண்ணாதுரை இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை சென்னையில் சிறப்பாக நடத்திய போது காங்கிரஸ், சுதந்திரா கம்யூனிஸ்ட் முஸ்லிம் லீக், திராவிட கழகம் என சகல கட்சிகளின் ஒத்துழைப்பையும் அவர் பெற்றிருந்தார். கட்சித் தலைவர்களும் மாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர். கண்ண தாசன், சிவாஜி கணேசன் போன்ற தி.மு.க. வை விட்டுப் பிரிந்து சென்றவர்களுமட் கூட தமது பங்களிப்பைச் செய்திருந்தனர்.

அது ஒரு காலம் பின்னர் எம்.ஜிஆரும் சமீபத்தில் ஜெயலலிதாவும் இதே மாநாடு களை நடத்திய போது அவை அண்ணா வின் விசாலத் தன்மையை விட்டு விலகிப் போய் வெறும் அ.தி.மு.க. மகாநாடுகளாகிப் போனதை நாம் பார்த்தோம்.

ஆகவே, ஏற்பாட்டாளர்கள், சில முக்கிய மாற்றுக்கட்சி அமைப்புகளைச் சேர்ந்த பிரமுகர்களையாவது அழைத்திருக்க வேண்டும். இ.தொ.கா. காரர்கள் நடத்துகின்ற மாநாடு தானே! என்ற பேச்சு எழாமலிருக்கும் வகையில் அவர்கள் செயலாற்றியிருக்க வேண்டும். இம் மகாநாட்டுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் தொழிற்சங்க கட்சிச் சாயங்கள் முழுமையாகத் துடைத்தெறியப் பட்டிருக்க வேண்டும். அப்போது தான் பரவ லான, காத்திரமான பங்களிப்பை எதிர்பார்க்க முடியும். சுருக்கமாகச் சொன்னால்,

மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டை வெற்றிகரமாகவும், இலக்குகள் உணரப்பட்ட நிலையிலும் வளர்த்தெடுப்பதற்கு,

கட்சி, தொழிற்சங்க, அரசியல் மற்றும் சித்தாந்த பேதங்கள் எவையுமே தடையாக இருக்கக் கூடாது. இத்தடைகளை முறியடித்து, இப்பேதங்களுக்கு அப்பால் மலையகத் தமிழர்களின் வரலாறு ஆய்வுக்குட்படுத்தப் பட்டு அது முழுமையாக எழுதப்பட வேண்டும் என்ற இலட்சியத்தில் சகலரையும் இணைக்கும் வகையிலேயே மலையக தமிழாராய்ச்சி மாநாட்டு செயலகம் அமைக் கப்பட வேண்டும்.

இப்படி வேறுபாடுகளுக்கு அப்பால் அமையும் ஒரு செயலகமே தமிழாராய்ச்சி மாநாட்டின் இலக்குகளை நோக்கி வழி நடத்தும் சக்தியைப் பெற்றிருக்கும் அப்போது தான் இச் செயலகமே தமிழா ராய்ச்சிப் பணிகளை நடத்த ஒரு செயலகமும் அச்செயலகத்தைப் பொறுப்புணர்வுடன் நடத்திச் செல்ல பொருத்தமான உறுப்பினர் களும் அவசியம்.

இச் செயலகத்துக்கான உறுப்பினர் களை நியமனம் செய்யும் போது ஏற்கனவே விழா ஏற்பாடுகளில் விடப்பட்ட தவறுகள் மீண்டும் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்ளப்பட வேண்டியது அவசியம். மாநாடு ஏற்பாடுகள் என்பது வருடங்களுக்கு ஒரு தடவை நடை பெறும் ஒன்று. ஆனால் செயலகப் பணிகள் தொடர்ச்சியாக நடை பெற வேண்டும். விசால பார்வையும், தொலைநோக்கு சிந்தனையும் கொண்டதாக, நடவடிக்கைகள் திட்டமிடப் பட்டவையாக இருக்க வேண்டும்.

மலையக ஆய்வுகளில்,

மலையக இலக்கியத்தில்,

மலையக கலாசாரம், பண்பாடு பாரம் பரியங்களில்.

நல்ல அறிவும், அனுபவமும், விஸ் தாரமான பார்வையும், நிர்வாகத்திறனும்

கொண்டவர்கள் இச் செயலகத்தில் கட்சி, பிரதேச, சித்தாந்த பேதங்களுக்கு அப்பாற் பட்ட வகையில் நியமனம் பெற வேண்டியது அவசியம்.

இவர் நண்பர், இவர் நல்லவர், இவர் எவ்வளவோ செய்திருக்கிறார். இவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம் என்ற ரீதியில் மட்டும். செயலக உறுப்பினர் நியமனம் நடைபெற்று விடக்கூடாது.

பொது நிர்வாகத்திறன், நிதி நிர்வாகத் திறன், அமைப்புத் திறன், செயலாற்றுத் திறன் கொண்டவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

இச் செயலகத்தின் தலைவராக மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் புத்தரசிகாமணியே இருக்க வேண்டும். ஏனெனில் எவரது மனதில் மலையகத் தமிழர் வரலாறு ஆய்வு செய்யப்பட வேண்டு மென்றே எண்ணம் தோன்றியதோ அவர் தான் இச் செயலகத்தை வழி நடத்து வதற்கு தகுதியானவர் என்பது எமது அபிப்பிராயம்.

ஆகவே அமைச்சர் புத்திரசிகாமணி, செயலக சட்ட திட்டங்களை அமைக்கும் வகையில் ஒரு யாப்பு அமைப்பு குழுவொன்றை உடனடியாகக் கூட்ட வேண்டும். இங்கே உருவாக்கப்படும் சட்ட திட்ட விதிகளின் பிரகாரமே உறுப்பினர் நியமனங்கள் அமைய வேண்டும். சட்ட திட்டங்கள் உருவாக்கப் படவிருக்கும் இக்குழுவில், சட்டத் தரணி, வர்த்தகர், கல்விமான், இலக்கிய பத்திரிகைத் துறைகளைச் சார்ந்தோர், நிர்வாக அனுபவம் கொண்டோர் என பல தரப்பட்டவர்களும் இடம் பெற வேண்டும்.

செயலகத்துக்கான யாப்பு உருவாக்கப் பட்ட பின்னர், செயலக உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும் இச் செயலக, உறுப்பினர்கள் தகைமை, அனுபவம், செயற் திறன் அடிப்படையில் பரந்துபட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட வேண்டும். வேறு எவையுமே கருத்திற் கொள்ளப்படக் கூடாது.

பேராசிரியர்கள், மலையக இலக்கிய கர்த்தாக்கள், கல்விமான்கள், தொழி லாண்மைமிக்கோர், தமிழ் அறிஞர்கள் என்று பலதரப்பட்டோர் இச் செயலகத்துக்கு உறுப் பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதோடு, நடவடிக்கைகளுக்கான ஆலோசனைக் குழு வொன்றும் உருவாக்கப்பட வேண்டும். நிதி, வளங்கள், செயற்பாடுகள் தொடர்பாக இக்குழு ஆலோசனைகள் தெரிவிக்கலாம்.

இவ்வாறாக செயலக அமைப்பு, சட்ட ரீதியானதாகவும், அதிகபட்ச பலன்களைக் கொண்டு வரக்கூடிய செயற்பாடுகளைக் கொண்டதாகவும் அமைய வேண்டியது அவசியம்.

இந்தப் பின்னணி உண்மைகளை அமைச்சர் புரிந்து கொண்டு அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்பதே எமது எதிர்பார்ப்பு மட்டுமின்றி மலையகத் தினரின் எதிர்பார்ப்புமாகவுள்ளது.

ஏனெனில் இம் மாநாடு சாதிக்க வேண்டியவை இன்னும் எவ்வளவோ உள்ளன. அடித்தளம் ஸ்திரமானதாக இருந்தால் தான் சவால்களைச் சமாளித்து சாதிக்கலாம்.

(தொடரும்)

தினகரன் வாரமலர் டிசெம்பர் 22, 1996

# மாநாட்டு செயலகம் எவ்வாறானதாக இருக்க வேண்டும்?



மாநாட்டில் திரு. புத்திரசிகாமணி உரையாற்றுகிறார்.

முதலாவது
மலையக
தமிழாராய்ச்சி
மாநாடு
1996 நவம்பர் 17
முதல் 19 வரை
பத்தனை

யாரால் வேண்டுமானாலும் குற்றம் குறை கண்டு பிடித்துவிடலாம். ஆனால் வேலைகளை இழுத்துப் போட்டுச் செய்து முடிப்பது சுலபமான பணி அல்ல. இந்தப் பத்திரிகைக் காரர்களுக்கும் குறை கண்டு பிடிக்கத்தான் தெரியும். இதை ஒரு ''பெஷன்'' என்று கூட நினைக்கிறார்களோ தெரியவில்லை என்று வாசகர்கள் கருதலாம்.

ஆனால் இக் கட்டுரைத் தொடரின் நோக்கம், குறைகள் கண்டு பிடித்து ஏளனப் பார்வை வீசி, இம் மகா நாட்டையும் மாநாட்டு ஏற்பாட்டாளர்களின் செயற்பாடு களையும் மலினப்படுத்துவது அல்ல. இம் மாநாடு ஆலமரமாக கிளை பரப்பி விழுதுகள் விட்டு பெரு விருட்சகமாக வளர்ச்சிபெற வேண்டும். என்ற ஒரே நோக்கத்தை மட்டும் இலக்காகக் கொண்டே இத் தொடர் எழுதப் படுகிறது. ஒரு காவல் நாயின் பணியைத் தான் செய்கிறது.


இன்னும் சிறப்பான வகையில் ஏற்பாடுகள் செய்திருக்கலாம்தான். ஆனால் அதற்கான நிதி வசதி இருக்கவில்லை என்ற காரணம் காட்டப்படலாம். மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் மத்திய மாகாண தமிழ் செல்வந்தர்களை அணுகியிருக்கலாம். ஏற்பாட்டுக் கமிட்டிகளில் செல்வாக்கும் செயலார்வமும் கொண்ட தனவந்தர்கள் ஒரு சிலரை சேர்த்து கொண்டிருந்தால்.

உணவு, தங்குமிட வசதி, மலர் வெளியீட்டுக்கான செலவு, விருதுகளுக்கான செலவு, ஆரம்ப தின விழா செலவு போக்கு வரத்துச் செலவு எனப் பல்வேறுபட்ட செலவு களை அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருப்பார்கள்.

இது வர்த்தகர்களின் யுகம் அவர்களது ஆதரவின்றி இது போன்ற கலாசார, ஆய்வு நிகழ்ச்சிகளை கோலாகலமாக அல்லது அர்த்த பூர்வமாக நடத்திவிட முடியாது. இந்த உண்மை உணர்ந்து கொள்ளப் படாதது. துரதிர்ஷ்டமாக அமைந்துவிட்டது.

இம் மாநாட்டில் வர்த்தக துரையினரைக் காண்பது அரிதாக இருந்தது இவர்களது பங்களிப்பு இருந்திருக்குமானால். மத்திய ஊவா மற்றும் சப்பிரகமுவா மாகாணங் களையும் கொழும்பையும் சேர்ந்த பல அறிஞர்களும், கல்விமான்களும், இலக்கியக் கர்த்தாக்களும் ஆய்வரங்குகளில் கலந்து கொண்டிருப்பார்கள் பங்களிப்பு பரந்துபட்ட தாக இருந்திருக்கும்.

இந்த மூன்று நாள் மாநாட்டில் கல்வியியல் கல்லூரி மாணவ, மாணவி யரும், ஆசிரியர்களும், பாடசாலை பிள்ளை களும் கலந்து கொண்டு பயன் பெற்றார்க ளென்பது உண்மை, ஆனால் நம்முடைய நோக்கம் அதுவல்ல, பார்வையாளர் அந்தஸ்தில் எவர் வேண்டுமானாலும் கலந்து கொண்டு பயன்பெறுவது ஒரு புறமிருக்க, ஆய்வரங்குகளோடும், மகாநாட்டின் தொனிப் பொருளை உணர்ந்து ஆலோசனைகள் வழங்கக் கூடியவர்களும் தமது பங்களிப்பை வழங்கினார்களா என்பதே இங்கே கேள்வி யாகிறது.



நாட்டை நடத்த முன்வந்த அவரிடம் பல விடயங்கள் எடுத்துச் சொல்லப்பட வில்லை என்று தெரிகிறது.

நடைபெற்ற மாநாட்டில் பல மலையகக் கல்விமான்களும் அறிஞர்களும், எழுத்தாளர் களும் கலந்து கொள்ளவில்லை. பல பிரமுகர்கள் வருகை தரவில்லை. முதல் நாள் அழைப்பின் பேரில் வந்தவர்கள் இரண்டாம் மூன்றாம் நாட்களில் இடம் பெற்ற ஆய்வரங்குகளில் கலந்து கொள்ளவில்லை. தங்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டிருந் தால் பல அறிஞர்கள் அமர்வுகளில் கலந்து கொண்டிருப்பார்கள். பத்திரிகை மற்றும் எழுத்துத்துறையைச் சேர்ந்தோரின் பங்களிப்பு மிகக் குறைவாகவே இருந்தது. வந்து ''ரிப்போர்டிங்'' செய்து விட்டு போனால் போதும் என்ற அளவில் மட்டுமே அவர்களது பங்களிப்பு எதிர்பார்க்கப்பட்ட மாதிரி தெரிந்தது. உடனடியாக செய்தி களை அனுப்பும் வகையில் தொலைபேசி

வசதியும் கூட செய்து கொடுக்கப்பட வில்லை. மாநாடு முடிவடைந்ததும் கொட்ட கலை அல்லது ஹட்டனுக்கு சென்றுதான் தொலைபேசி அல்லது பெக்ஸ் மூலம் செய்தி அனுப்ப வேண்டியிருந்தது. இதனால் எதிர்பார்க்கப்பட்ட அளவு செய்திகள் பத்திரி கைகளில் சுடச் சுட வெளியக வில்லை.

(தொடரும்)

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் தமது பாட்டனார் அல்லது முப்பாட்டனார் செய்த தொழிலையே இன்னும் அதே லயகாம்பரா பின்னணியில் செய்து வருகிறார்கள் என்பதும் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் செறிவாக ஆனால் பொருளாதாரத்தில் பின்னடைந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் (கூட) மலையகத் தமிழர்கள்.




தமது மொழி, கலாசாரம், பண்பாடு சமயம் ஆகிய ஒரு மனிதனின் ஜீவ அம்சங் களை அடையாளங்களை இன்னும் அப்படியே காப்பாற்றி வருகிறார்கள் என்பதும்,

விசேஷமாக கவனிக்கத் தக்கது இவர்கள் மட்டும் தமது மதம், மொழி, கலாசாரம் ஆகியவற்றை விட்டுகொடுக்கச் சம்மதித் திருந்தால், மலையகத் தமிழ் சமூகம் தமது தோட்ட வாழ்க்கையை விட்டு வெளியேறி, கல்வியில் சிறந்தவர்களாகவும் பொருளாதார மேன்மை கொண்டவர்களாகவும் எப்போதோ மாறி இருப்பார்கள். ஆனால் தமது ''ஜீவனை'' அவர்கள் விட்டுக் கொடுக்க முன் வராததால் தான்.

இவர்களில் பெரும்பாலானோர் இன்னும் வறுமையோடும் பாமரத்தனத்தோடும் போராடிக் கொண்டும் சில ரூபாய் சம்பள உயர்வுகளுக்கு எல்லாம் வேலை நிறுத்தங் களை நடாத்திக் கொண்டும், இலங்கையின் ஆக பிற்பட்ட சமூகம் என்ற பெருமையுடன வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.

நூறு ஆண்டுகளுக்கு முன் புலம் பெயர்ந்த தமிழர்களில் மிகமோசமான வாழ்க்கைத் தரத்தைக் கொண்டவர்களாக இருப்பது இலங்கைக்கு புலம் பெயர்ந்த மலையகத் தமிழர்களே என்ற அவப் பெயரைக் கொண்டவர்களாக இவர்கள் இருந்தாலும் கூட, இன்னும் தமது அடிப் படைகளை, பின்னணியை அப்படியே பாதுகாத்து வருபவர்கள் மற்றும் தமது

உண்மை முகத்தை இன்னும் தொலைக்காத வர்கள் என்ற பெருமை கொண்டவர்களும் இவர்கள் தான் என்பது ஆறுதல் அளிப்பதாக உள்ளது.

இந்த பின்னணியில், நடைபெற்று முடிந்த மலையக தமிழாராய்ச்சி மாநாடு விசேஷ மானது. முன்னோடியும் கூட, ஆங்கிலேயர் காலத்தில் பல நாடுகளுக்கு புலம் பெயர்ந்த தமிழர்களை எடுத்துக் கொண்டால் இலங்கையில் தான் முதன்முதலாக தமது வேர்களைத் தேடும் முயற்சி ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இந்தத் தேடல், மத்திய மாகாணத்தோடு நின்று விடவே கூடாது. இந்த எல்லையைவிட்டு வெளியேறி, இலங்கையெங்கும் வாழும் சகல இந்திய வம்சாவளியினரையும் இந்த மாநாடு மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் புத்திர சிகாமணி பதவியில் இருக்கும் வரைதான் உயிர்வாழும். அவருக்கு பின் "அம்புட்டுத் தான்" என்றாகிவிடும் என்ற சிலரது அபிப்பிராயத்தை உதறித் தள்ளி, தேசிய மட்டத்தில் சிறப்பாக தனது பணிகளைத் தொடர வேண்டும்.

ஆனால் அங்கேயும் கூட இந்த ஆய்வு மாநாடு எல்லை வகுத்து விடக்கூடாது. சர்வதேச மட்டத்துக்கு உயர்ந்து, புலம் பெயர்ந்த இந்திய வம்சாவளியினர் வாழும் நாடுகளை உள்ளடக்கியதாக,

உலக இந்திய வம்சாவளித் தமிழா ராய்ச்சி மாநாடு என்ற அளவில் சர்வதேச ரீதியாகக் கிளை பரப்பி அருந்தொண்டு ஆற்ற வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு, அவா அனைத்தும்.

இதுதான் இம்மாநாட்டின் இறுதி இலட்சிய மாக இருக்க வேண்டும். இத்தகைய ஒரு அடிப்படையை ஆதாரமாக் கொண்டே முதலாவது மலையக தமிழாராய்ச்சி மாநாட்டு ஏற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டும்.

ஆனால் நடைபெற்று முடிந்த மாநாட்டு ஏற்பாடுகளை மனதில் இருத்தி பார்க்கும் போது, ஏற்பாட்டாளர்கள் இந்த அளவுக்கு சிந்தித்துச் செயலாற்றியிருப்பதாகத் தெரிய வில்லை.

மலர் வெளியீட்டை நடத்தாமற் போனது, கண்காட்சிக்கான ஏற்பாடுகள் செய்யாதது, கட்சி தொழிற்சங்கம், கொள்கை, தனிப்பட்ட கோபதாபங்களுக்கு அப்பால் மலையகப் பிரமுகர்களையும், தொழிலாண்மை கொண்ட வர்களையும், கல்விமான்களையும் அனைத்துச் செல்லத் தவறியது, பத்திரிகை விளம்பரச் அறிவித்தல் மூலம் மக்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்தாதது.

எனப் பல தவறிவிடப்பட்ட அம்சங்களை உதாரணங்களாகச் சுட்டிக்காட்ட முடியும்.

மாகாண அமைச்சர் தனது வளங் களையும் வசதிகளையும் பயன்படுத்தி நடத்தி முடித்த மாநாடு, இது ஆகவே சிறிய அளவில் தான் நடத்த முடிந்தது என்று காரணம் கூறப்படலாம்.

மலையகத் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்புவது எப்படி? கடலில் தள்ளுவது எப்படி? என்ற ரீதியாகத் தான் கடந்த காலங்களில் சிந்தனை செய்யப்பட்டிருக் கின்றதே தவிர, இத்தமிழர்களின் பின்னணியை ஆராய வேண்டும். இவர்களது சரித்திரத்தை ஆதார பூர்வ வரலாறாக முறைப்படி எழுத வேண்டும் என்ற ரீதியாக எவரும் சிந்திக்க வில்லை.

இந்த வகையில் சிந்தித்து அதற்கு


சாயல் வடிவம் கொடுத்தவர் தான் அமைச்சர் புத்திரசிகாமணி. இப்படி முதலடி எடுத்து கொடுத்து, ஒரு பெரும் திருப் பத்தையே ஏற்படுத்திக் கொடுத்த அவருக்கு பாராட்டுக்கள். அவருக்கு மலையக மக்கள் நன்றியுடைவர்களாக இருப்பார்கள். ஆனால் இம்மக்களுக்கான வீட்டுக் கூறுகளின் எண்ணிக்கையோ ஒரு லட்சத்து 78 ஆயிரம் மட்டுமே. ஐயாயிரம் கூறுகள் குறைவு என்பதோடு மேலதிக குடியிருப்பாளர் களையும் சேர்த்துக்கொள்ளப்படும் போது தேவைப்படும் வீட்டுக் கூறுகளின் தொகை பத்தாயிரமாக அதிகரிக்கிறது. இந்தக் கணிப் பீட்டில் சிறு தோட்டங்கள் உள்ளடக்கபட வில்லை.

மேலும், கணக்கில் எடுத்துக் கொள்ளப் பட்ட வீட்டுக் கூறுகளை எந்த அளவுக்கு வீடுகளாகக் கணிக்க முடியும். என்பது கேள்விக்குரிய பாரம்பரிய குடியிருப்புக்கள் காற்றோட்டமற்ற, மழை குளிருக்கு பாதுகாப்பு வழங்காத, புகை நிரம்பிய மற்றும் பெரும்பாலும் மலசலகூட வசதியற்ற வைகளே. தற்போது தோட்டப் பகுதிகளில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள வீடமைப்புத் திட்டங்கள் கூட இம்மக்களின் எதிர்கால சந்ததியினரை மனதிற் கொண்டனவாக இல்லை.

திரு.பெ. முத்துலிங்கத்தின் ஆய்வுக் கட்டுரையில் மேற்கண்ட அம்சங்கள் குறிப்பிடப் பட்டிருந்தன. அடிப்படை உரிமைகள் விடயத்தில் இந்திய வம்சாளியினரின் நிலை என்ன என்பதை வெளிக்காட்டுவதாகவே இக்கட்டுரை அமைந்திருந்தது. இந்திய வம்சாவளி மக்களைப் பொறுத்தவரை அனைத்து அடிப்படை உரிமைகளும் குறைவுபடவே வழங்கப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரை கூட்டிக் காட்டுகிறது.

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வீட்டுக்கான காணி ஒதுக்கீடு 6.6 பேர்ச்சஸ் ஆக இருக்கும் போது தோட்டத் தொழி லாளர்க்கான காணி ஒதுக்கீடு பெரும்பாலும் ஐந்து பேர்ச்சஸ் ஆகவே இருந்து வருகிறது என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

1981ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின் பிரகாரம் இந்திய வம்சாவளி யினரிடையே எழுதப்படிக்கத் தெரிந்தோரின்




எண்ணிக்கை 66.9 சதவீதமென்றும், இத்தொகையில் பெண்களின் தொகை 55.2 சதவீதம் என்றும் ஆண்களின் தொகை 78.6 சதவீதமென்றும் தெரியவந்தது. இத்தொகை கடந்த 15 ஆண்டு காலப் பகுதியில் இரண்டு சதவீதமாக வேண்டுமானால் அதிகரித்திருக் கலாம் என்று சுட்டிக் காட்டும் கட்டுரை யாளர், கல்வி விடயத்திலும் உரிமை வழங்கப்படவில்லை என்கிறார்.

இந்திய வம்சாவளியினர் பெருமளவு வாழும் நுவரெலியா மாவட்டத்தில் ஒரு லட்சத்து 87 ஆயிரம் சிங்கள மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கான 220 சிங்கள



மொழிப் பாடசாலைகள் உள்ளன. இம் மாவட்டத்தில் தமிழ் பேசுவோர் தொகை மூன்று லட்சத்து 17 ஆயிரம் இவர்களுக்கான தமிழ் மொழி பாடசாலைக்கான எண்ணிக் கைக்கே 258 மட்டுமே.

இதுமட்டுமல்ல, மூன்று லட்சம் தமிழ் பேசுவோர் வசிக்கும் இம்மாவட்டத்தில் அவர்களது கல்வி வளர்ச்சிக்கு உதவ பூரணத்துவமான ஒரு மத்திய தமிழ் வித்தி யாலயம் கூட இல்லை.

இப்படி சொல்லும் கட்டுரையாளர், சுகாதாரம் பற்றியும் குறிப்பிடுகிறார். இந்திய வம்சாவளியினர் மத்தியில் இன்னும் சிசு, சிறுவர், தாய் மரண வீதம் அதிகமாக காணப்படுவதாக சுட்டிக் காட்டுகிறார்.

சரி, இவ்வளவு உரிமை மறுப்புக்கள், உரிமை வழங்குவதில் அலட்சிய மனோ பாவம், அல்லது அரைகுறை வழங்கள் இடம்பெற்று வருகின்ற போதிலும் இம்மக்கள் ஏன் இன்னும் எதிர்ப்பு எதுவும் தெரிவிக் காமல் வெறுமனே கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். என்ற கேள்வி பிறக்கின்றது அல்லவா?

பாமரத்தனம், எழுத்தறிவுயின்மை தான் காரணம் என்கிறார் கட்டுரையாளர்.

அப்படியானால், பிரச்சினைகள் நீறு பூத்த நெருப்பாக உள்ளன என்றுதான் பொருளா கின்றது. கல்வியறிவு வளர்ந்து எதிர்கால சந்ததியினரிடையே விழிப்புணர்வு ஏற்பட்டு அவர்கள் தட்டிக் கேட்கும் வரை நாட்களை கடத்திக்கொண்டு இருக்கலாகாது என்ற பொருளும் யோசித்து பார்க்கும் போது பிறக்கிறது.

மலையக மக்கள் எப்படி எப்படி யெல்லாம் பிற்படுத்தப் பட்டிருக்கிறார்கள். என்பதை திரு. முத்துலிங்கம் எடுத்துக் காட்டியதன் மூலம் ஒரு கால எல்லைக்குள்

இம்மக்கள் முன்னணிக்கு கொண்டுவரப் படாவிட்டால் ஏற்படக்கூடிய பின்விளைவு களையும் சூசகமாக குறிப்பிட்டிருக்கிறார்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டதோடு இரண்டு நாள் ஆய்வரங்கத்தை நடத்தி சென்ற பேராசிரியர். சோ. சந்திரசேகரன் அனைவர் கவனத்தையும் கவர்ந்தவர். இவ்வாறான கருத்தரங்குகளை நடத்தி முடிப்பது சாதாரண வேளையல்ல. ஏனெனில் எவரையும் புண்படுத்தாத வகையில் பேசி சமாளிக்கவும் வேண்டும். நேரத்தை எப்போதும் மனதில் இருத்தி காரியத்தை பார்க்கவும் வேண்டும். வள வள என பேசி அறுப்பவர்களை சமாளித்து அனுப்பவும் வேண்டும். ஆத்திரம் மேலிட்டு வார்த்தை களை கொட்டுபவர்களை அடக்கி வைக்க தெரிந்திருக்கவும் வேண்டும்.

இப்படி பல சபை சங்கடங்களை சமாளிக்கத் தெரிந்தவராக பேராசிரியர் சந்திரசேகரன் விளங்கினார்.

மலையக மக்கள் ஏனைய சமூகங்களை விட பின்னடைந்த நிலையில் காணப்படு வதற்கான பிரதான காரணியாக விளங்குவது மலையக கல்வியே என்பதில் எவருக்குமே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆகவே இந்த பிரச்சினையை முன்வைத்து மலையக மக்களின் கல்வி பிரச்சனைகளும் எதிர்ப்பார்ப்புகளும் என்ற தலைப்பிலான ஆய்வு கட்டுரையை சமர்ப்பித்திருந்தார். பேராசியர் சந்திரசேகரன் இக்கட்டுரையின் சிறப்பம்சங்களை அடுத்த வாரம் பார்ப்போம்

(தொடரும்)




தினகரன் வாரமஞ்சரி ஜனவரி 12 1997

# மலையகத்தவருக்குக் கிடைத்திருக்கும் அரையும் குறையுமான அடிப்படை உரிமைகள்

மாநாட்டின் இரண்டாவது கருத்தரங்கு அமர்வின் போது, வருகை தந்திருந்தோரில் சிலர் இம்மாநாட்டுக்கு மலையக தமிழா ராய்ச்சி மாநாடு என்ற பெயர் பொருத்தம் தனா? என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள்.

மலையக தமிழ் என்பது தென்னிந்தி யாவில் இருந்து புலம்பெயர்ந்து வந்த மக்களின் பேச்சு தமிழை தான் குறிக்கும். ஒரு பேச்சு தமிழை அல்லது பிரதேச வழக்கை ஆராய்வதில் என்ன பிரயோசனம் இருக்க முடியும்? நாம் இங்கு ஆராய புகுந்திருப்பதோ புலம்பெயர்ந்து வந்த மக்களின் வரலாறு, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றின் சிறப்புகளையே ஆகவே இந்த பொருளை தரும் வகையில் மலையக தமிழர் ஆய்வு மாநாடு என்று இம் மாநாட்டை அழைப்பதே பொருத்தம். அப்படியே பெயர் மாற்றம் செய்வது தான் சரி என்பது அவர்களின் அபிப்பிராயமாக இருந்தது.

இப்படியொரு அபிப்பிராயம் நிலவுவது பற்றி பேராசிரியர் சோ. சந்திரசேகரனிடம் பேச்சுவாக்கில் தெரிவித்தேன்.



**பெ. முத்துலிங்கம்**
சமர்பித்த ஆய்வுக் கட்டுரை

அவரோ, மலையக தமிழாராய்ச்சி மாநாடு என்ற பெயர் சரிதான் என்கிறார்.

உலக தமிராய்ச்சி மாநாடு என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகின்ற போதிலும், தமிழ் மொழியை மட்டுமே ஆய்வு செய்யும் ஒரு அமைப்பாக அதனை எவருமே கருதவில்லை. இம்மாநாட்டின் இலட்சியம், தமிழ் மொழியை ஆய்வு செய்வது மட்டுமன்றி மொழி என்று சொல்லும் போது அது வெறும் அ∴றிணைப் பொருளாகிவிட்டது. அம்மொழியை பேசு வோரையே அது குறிக்கின்றது. தமிழ் மொழியை பேசுவோர் என்றதும் அம்மக்களின் பண்பாடு, கலாச்சார பின்னணி, வரலாறு அவர்கள் வளர்த்துள்ள கலைகள் என பல விடயங்கள் அவற்றுள் அடங்கி விடுகின்றன. இதுபோலவே மலையக தமிழாராய்ச்சி என்றதும் அது மலையக மக்களையும் அவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்களையுமே குறிப்பாகவே நாம் கொள்ள வேண்டும். ஆகவே மாநாட்டு பெயரில தவறு எதுவும் இல்லை. என்று அவர் விளக்கமளித்தார்.

அது ஏற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது.

இரண்டாவது திரு. பெ. முத்துலிங்கம், இந்திய வம்சாவளி மக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய ஆய்வு கட்டுரையை சமர்ப்பித்தார். இதன் பிரதியை தந்த அவர், இது ஒரு வரைவு மட்டுமே என்று சொன்ன தோடு விரிவான வகையில் பின்னர் இக் கட்டுரையை வெளியிட இருப்பதாக குறிப்பிட்டார்.

ஏன் பின்னர்? விரிவாகவே தயாரித்து முதலாவது மாநாட்டில் சமர்ப்பித்திருந்தால் நன்றாக இருந்திருக்குமே! என்ற கேள்வி இயல்பாகவே மேலிட்டது.

மாநாடு நடைபெற இருதினங்கள் இருக்கும் போதே இவ்விடயம் பற்றி கட்டுரை சமர்ப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்பட்ட தாகவும் கால அவகாசம் இல்லாத காரணத் தால் விரிவாக கட்டுரை தயார் செய்ய முடியாது போனதாகவும் என்னிடம் தந்த பிரதியிலேயே அவர் குறிப்பிட்டிருந்தார். ஆரம்பத்தில் கருத்துரை வழங்கும்படி மட்டுமே அவரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு இருந்ததாம்.

ஆகவே, திரு. முத்துலிங்கத்தை குறை சொல்வதில் பிரயோசனம் இல்லை. இது ஏற்பாட்டாளர்கள் விட்ட இன்னோரு தவறு.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சாசனத்தில் அமுல்படுத்தும் பொருட்டு இந்நாடு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கின்ற போதிலும் இந்திய வம்சாவழி மக்களை அவை எவ்வளவு தூரம் சென்றடைந்துள்ளன என்பது கேள்விக்குறியே என்பது தான் கட்டுரையின் பொருள்.

மனித உரிமைகள் சாசனம் ஐ.நா பிரகடனப்படுத்தப்பட்ட அதே 1948ம் ஆண்டு காலப்பகுதியில் தான் இலங்கையில் பிரஜா வுரிமை சட்டம் கொண்டுவரப்பட்டு, லட்சக் கணக்கான இந்திய வம்சாவழியினர் நாடற்றோர் ஆக்கப்பட்டனர். இந்த அடிப்படை உரிமை மறுப்பு, அவர்களது ஏனைய உரிமைகளான கல்வி, சுகாதரம், வீடு, வேலை வாய்ப்பு கலாச்சாரம் போன்றவற்றையும் பாதித்தது. ஆனால் அனைத்து தனிமனிதர்களும் இன, மத, பால், மொழி, அரசியல் வேறுபாடு களுக்கு அப்பால் அனைத்து உரிமை களையும் அடிப்படை சுகந்திரத்தையும் அனுபவிக்க உரித்துடையவர் என்பதே ஐ.நா. வின் மனித உரிமைகள் சாசனத்தின் அடிப்படை தத்துவமாகும் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஆனால் 1948 முதல் ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தம் கைச்சாத்தான 1964ம் ஆண்டு வருடகால இடைவெளியில் தமிழ் அரசியல் கட்சிகளோ அல்லது முற்போக்கு கட்சிகளோ, பாராளுமன்றத்தின் அங்கத்துவம் வகித்த, அரசுடன் இணைந்து இருந்த சிறுபான்மை கட்சிகளோ இந்த நாடற்றோர் பிரச்சினைக்கு எதிராக குரல் எழுப்பி போராட்டங்களை நடத்த முன்வரவில்லை.

அக்கால கட்டத்தில் போராட்ட உணர் வுடன் இயங்கி வந்த இலங்கை தி.மு.க. மட்டுமே நாடற்றோர் நிலைக்கு எதிராக குரல் எழுப்பி 1963ம் ஆண்டில் வீதி ஆர்ப் பாட்டங்களையும் நடத்தியது.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தமும் இப்பிரச்சினையை முழுமையாக தீர்க்க வில்லை. இந்த ஒப்பந்தத்தை நடைமுறை படுத்துவதில் ஏற்பட்ட சிக்கலில் இந்தியா செல்ல வேண்டிய 83 ஆயிரம் பேர் இலங்கை யிலேயே தங்கி விட, அவர்களது சந்ததியினர் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகி இருக்கின்றது.

1988ம் ஆண்டு நாடற்றோருக்கு பிரஜா வுரிமை வழங்கல் (சிறப்பேற்பாடு) சட்டத்தின் கீழ் நாடற்றோர் பிரச்சினை கணிசமான அளவு தீர்க்கப்பட்டிருக்கின்ற போதிலும், அவர்கள் தாம் பெற்றிருக்கும் பதிவு பத்திரத்தை இழந்தால், தமது பிரஜாவுரிமையை இழக்கும் அபாயம் உள்ளது.

அடுத்தது, உறைவிட வசதி அண்மைய தரவுகளின் பிரகாரம் ஒரு லட்சத்து எண்பத்து மூவாயிரம் தொழிலாளர் குடும்பங்கள் தோட்டப் பகுதிகளில் காணப்படுகின்றனர். இக்குடும்பங் களில் மொத்த எண்ணிக்கை ஏழு லட்சத்து எண்பத்து எட்டாயிரம். ஆனால் (இவர்கள்)

# மலர் வெளியிடாதது பெருங் குறை

"மலைமுகடுகளில் மதுரத் தமிழ் முழக்கம்" என்ற தலைப்பில் சென்ற வாரம் மலையக தமிழாராய்ச்சி மாநாடு சம்பந்த மாக மஞ்சரியில் வெளிவந்த கட்டுரை தொடர்பாக இதை எழுதுகின்றேன். ஆரம்ப காலங்களில் அத்திப்பூத்தாற்போல் அங் கொன்றும் இங்கொன்றும் நிகழ்ந்த மலையக இலக்கிய நிகழ்வுகள், இன்று ஒரு பெரும் மாநாடாக வியாபித் துள்ளமையை இட்டு புளகாங்கிதம் அடைகின்றேன். இவ்வாறான ஒரு அறிய, மறக்கமுடியாத இலக்கிய நிகழ்வுக்கு காரணகர்த்தாவாக இருந்த மத்திய மாகாண கல்வி அமைச்சர் வி. புத்திரசிகாமணி அவர் களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

- நடந்து முடிந்த முதலாவது தமிழா ராய்ச்சி மாநாட்டு ஒழுங்கமைப்பில் ஏற்பட்ட சில தவறுகளையும் சுட்டிக் காட்டுவதோடு, இனி வரும் ம.த. மாநாடுகளுக்கான சில வழிகாட்டல் களையும் ஆலோசனைகளையும் கூற நினைக்கின்றேன்.
- இம்மாநாடு மலையக தமிழாராய்ச்சி மாநாடு என்பதால் மலையக பிரதேச புத்தி ஜீவிகளை இனங்கண்டு அவர் களின் மூலம் ஆய்வுகட்டுரைகளை சமர்ப்பித் திருக்கலாம். ஏனெனில் ஒரு சமூகத்திற்கு இலக்கியத்தின் உள் நிலையான அச்சமூகத்தோடு ஒன்றிய வர்களுக்குத் தான் உண்மையாக தெரிந்திருக்க நியாயம் உண்டு. இவ் வாறானவர்களை கொண்டு செய்யும் ஆய்வுதான் உயிரோட்டமாக இருக்கும்.
- வயதின் அடிப்படையில் மலையக எழுத்தாளர்களை இனங்காணாமல் திறமையின் அடிப்படையில் மலையக எழுத்தாளர்களை இனங்கண்டு அவர் களையும் மலையக தமிழாராய்ச்சி மாநாட்டு ஏற்பாட்டு குழுவுடன் சேர்ந்து பங்காற்ற வேண்டும்.
- நடந்து முடிந்த மாநாட்டில் அவை யோர்களாக குறிப்பிட்ட சிலர் மாத்திரமே கலந்து கொண்டதை காண முடிந்தது. மலையக தமிழாய்வு என்பது தனியே மலையக எழுத்தாளர்களுக்கு மாத்திரமான ஒன்று அல்ல. இத்தகைய ஆய்வுகள் ஒரு சமூகத்தின் அடிமட்டம் வரை சென்று ஒரு இலக்கிய தெளிவை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும்.
- மலையக தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக மலையக தமிழ் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையோர்களுக்கு தமிழ் திறன் போட்டிகளை நடாத்தி அதன் மூலம் சிறந்த ஆக்கத்தினை சமர்ப்பித்த எழுத் தாளர்களை தெரிவுசெய்து அவர் களுக்கு பாராட்டு களையும் பரிசில் களையும் இம் மாநாட்டிலேயே வழங்கி இருந்தால் இம்மாநாடு இன்னும் சிறப்பாய் இருந்திருக்கும்.
- தமிழ் இலக்கியம் என்னும்போது அது இயல், இசை, நாடகம் மூன்றினையும் உள்ளடக்கியதாகும். இவ்வகையில் மலையக தமிழாராய்ச்சி மாநாடுகளில் மலையக தமிழ் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு கலைகளோடு தொடர்பு கொண்ட கலைஞர்களையும் இணங் கண்டு கௌரவிக்க வேண்டும்.

- நடந்து முடிந்த மலையக தமிழா ராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப நாள் வைபவங்களை நோக்கும் போது ஏதோ ஒரு குறிப்பிட்ட தொழிற் சங்கத்தின் அரசியல்வாதிகளை காணமுடிய வில்லை. மாநாடு ஒரு குறிப்பிட்ட சங்க சார்பானதாக காணப்பட்டதும் ஏனைய தொழிற்சங்க அரசியல் பிரமுகர்கள் கலந்துகொள்ளததும். ஒரு வெறுமையை காட்டியது. எனவே இனிவரும் மாநாடு களில் இத்தகைய குறைகளை கட்டாயம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.
- மலையக தமிழாராய்ச்சி மாநாடுகளின் போது மலையக தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு துணை புரிந்தவர்களுக்கும் பட்டங்களையும் பரிசில்களையும் வழங்கி கௌரவிக்க வேண்டும். அதற்காக அன்று தொடக்கம் இன்று வரை குறிப் பிட்ட ஒரு சிலரை மாத்திரம் கௌர விக்கும் பண்பை விட்டு விட்டு மலையக இலக்கியத்தோடு சம்பந்தப் பட்ட இளைஞர்களையும் பட்டியலில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
- நடந்து முடிந்த மாநாட்டில் பெரும் குறையாக தென்படுவது ஒரு சிறப்பு மலர் வெளியிடாமையாகும். மாநாட்டின் ஞாபகச் சின்னமாக ஒரு சிறப்பு மலரை வெளியிட்டிருக்க வேண்டும். ஏனெனில் பிற்காலத்தில் இது ஒரு பெருமதியான ஆவணமாக மதிக்கப்படக் கூடிய ஒன்று. "முகமும் முகவரியும்" என்ற நூலொன்றை வெளியிடுவதாக முன்னர் செய்திகள் வெளியாயின. குறைந்த பட்சம் இந்நூலையாவது இம் மாநாட்டில் வெளியிட்டிருக்கலாம்.
- இவை போன்ற குறைகளையும் ஆலோ சனையும் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் ஒன்றைச் சொல்வது சுலபம். செயலாக்கிக் காட்டுவது அத்தனை சுலபம் அல்ல. அந்த வகையில் முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு பல விமர்சனங்களுக்கு உட்பட்டிருந்தாலும், இனி வரும் மலையக தமிழாராய்ச்சி மாநாடுகளுக்கெல்லாம் இம் மாநாடு ஒரு வழிகாட்டியாகும் என்பதில் சந்தேக மில்லை. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இம் மாநாட்டை நடத்திக் காட்டிய மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சருக்கும் மாநாட்டு மதி யுரை குழுவினருக்கும் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- சோ. ஸ்ரீதரன் பொகவந்தலாவ**



**மாநாட்டுச் செயலாளர் T. V. மாரிமுத்து உரையாற்றுகையில்**

பேராசிரியர் சந்திரசேகரனின் ஆய்வுக் கட்டுரை இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் கல்வித் துறையில் எவ்வாறெல்லாம் பிற் படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக இருக்கிறது.

மலையக மக்களின் தலைவர்கள் என்றும் அவர்களின் எதிர்கால நலனுக்காக பாடுபடுபவர்கள் என்றும் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் உண்மையாகவே தம்மை அவ்வாறு கருதுவார்களானால் அவர்கள் உடனடியாக போர்க்கால அடிப் படையில் செயற்பட வேண்டிய ஒரு துறை இந்தக் கல்வித் துறை தான் என்பதை அவரது கட்டுரை வலியுறுத்துகிறது.

அரசாங்க, தனியார், வேலைவாய்ப்புகள், வெளிநாட்டு கல்வி வாய்ப்பு, வெளிநாடுகளில் உயர் அந்தஸ்து தொழில்கள் என்பவற்றை நோக்காகக் கொண்டதாக ஏனைய சமூகங் களின் கல்விச் செயற்பாடுகள் வேகம் பெற்று வருகின்றன. இதனால் இச்சமூகங்களின் எதிர்கால முன்னேற்றம் மேலும் துரித மடையும்.

ஆனால், மலையக மக்களின் இன்றையக் கல்வி நிலையையும், அதன் ஆமை வேக வளர்ச்சியையும் ஏனைய சமூகங்களின் வளர்ச்சி வேகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது எதிர்காலத்தில் கல்வி, பொருளாதாரம், பண்பாடு ஆகிய துறைகளில் மலையக சமூகத்துக்கும் ஏனைய சமூகங்களுக்கும் இடையே காணப் படும் இடைவெளி மேலும் விரிவடையபட போகிறது.

மலையக மக்கள் தொடர்ந்து பெருந் தோட்டங்களைச் சார்ந்த ஒரு சமூகமாகவே வாழும் நிலையையே இது தோற்றுவிக்கும். ஆகவே.

மலையக சமூகத்தைச் சார்ந்த பிரமுகர் களும், அதன் தலைமைப் பீடங்களும் அரசியல் அதிகார பீடமும் இந்த உண்மை யைக் கருத்திற் கொண்டு செயலாற்ற வேண்டியது அவசியம் என்பதே இக் கட்டுரை தரும் செய்தியாகும்.

இதை இன்னொரு வகையிலும் சொல்ல லாம்.

மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களை சப்ளை செய்யும் நாடாக இலங்கை விளங்கி வருவதைப் போலவே அடுத்த நூற்றாண்டின் முற்பகுதியிலும், இலங்கையின் ஏனைய சமூகங்களின் எடுபிடி வேலைகளையும் சைவ ஹோட்டல்களின் வெயிட்டர், கிளீனர் பையன் தேவைகளையும் தொடர்ந்தும் மலையக சமூகம் தான் தங்கி வரப் போகிறதா? இல்லையா? என்பதே இக்கட்டுரை எழுப்பும் கேள்வியாகும்.

கடந்த ஐம்பது ஆண்டு காலப் பகுதியில் மலையகம் அடைந்திருக்கும் சமூக பொரு ளாதார முன்னேற்றங்கள் மிகக் கொஞ்சமே. கல்வித் துறையில் நமது வேகம் ஆமை தான்.

மலையகம் முன்னேறவில்லை. கல்வித் துறைச் செயற்பாடுகளில் வளர்ச்சி யில்லை

என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. மலையகத்திலே மாபெரும் மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என சொல்லப்படுகிறது.

உண்மை, முன்பைவிட பாடசாலை செல்பவர்கள் இங்கே இப்போது அதிகம் தான். பல்வேறு துறைகளில் மலையக இளைஞர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் தான்.

ஆனால் இது ஏனைய சமூகங்களோடு ஒப்பிடும் போது திருப்திபடும் வகையில் உள்ளதா? அதிகரித்து வரும் மலையக சனத்தொகை வளர்ச்சியோடு ஒப்பிடும் போது இதனை வளர்ச்சி என்று ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறதா? இந்திய வம்சாவளியினரின் கல்வி வளர்ச்சி தொடர்பாக பொதுப் படையான வேலைத்திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டிருக்கிறதா? இரண்டாயிரம் அல்லது பத்தாம் ஆண்டுகளில் இலங்கையின் கல்வித்தரம் எவ்வகையில் இருக்கும் என்பதை ஊகித்து அதற்கு ஈடாக மலையகக் கல்வித்துறை எந்தெந்த இலக்குகளை அச்சமயம் நாம் அடைந்திருக்க வேண்டும். என்பது பற்றி கொள்கை ஏதேனும் வகுக்கப்பட்டிருக்கிறதா?

இக் கேள்விகளுக்கு எல்லாம் இல்லை என்பதே பதிலாக இருக்குமானால் மலையகக் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்று நாம் சொல்லிக் கொண்டிருப்பது காக்கை தன் குஞ்சைப் பற்றி நினைப்பதைப் போலத்தான்.

மலையகக் கல்வி பற்றி சோ.சந்திரசேகரன் விவரமாக தமது ஆய்வுக் கட்டுரையில் உரைத்திருப்பதால் இக்கட்டுரையைப் படித்து முடிந்ததும் பல கேள்விகள் நம்மிடையே பிறப்பதை தவிர்ப்பதற்கு இல்லை.

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மலையக கல்வி வளர்ச்சிக்கு நம்பிக்கை தரும் இடமாக உள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள் இன்டர்நெட் வசதியும் வந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்காலத்தில் மலையகத்திற்கு என பல்கலைகழகமோ இணைப்பு கல்லூரியோ ஏற்படுத்தப் படுமானால் அவற்றுக்கான அடிப்படை வசதிகளை கொண்டிருக்கும் இடமும் கூட.

இக்கல்யியல் கல்லூரியில் மலையக தமிழ் மக்களுக்கு என ஒதுக்கப்பட்டிருக்கும் 75 சதவீத இடத்தை நம்மால் நிரப்ப முடியவில்லை என்பது நிதர்சனம். இந்த கல்வியாண்டில் அங்கே விஞ்ஞான பிரிவில் 23 வெற்றிடங்களும் கணிதப்பிரிவில் 27 வெற்றிடங்களும் காணப்படுகின்றன. மலையக மாணவர்களின் நன்மைக்காக தகுதிகான் புள்ளிகளை 160 ஆக குறைத்தும் கூட மலையகத்தில் போதிய மாணவ மாணவியரை கணித, விஞ்ஞான பிரிவுகளுக்கு தேடி கொள்ள முடியவில்லை என்பதே உண்மை.


# இரண்டாயிரம் ஆண்டுகளிலும் தவழ்ந்து செல்லப் போகின்ற மலையகக் கல்வி

இந்த லட்சனத்தில் மலையக கல்வியில் பெருத்த மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று பீற்றிக் கொள்வதில் எந்த பெருமையும் இல்லை!

பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையை கொண்ட மலையக தமிழ் சமூகம் தனக்கென ஒரு உயர்கல்வி அமைப் பொன்றை கொண்டிருக்கவில்லை என்கிறார். சோ. சந்திரசேகரன். அது மட்டுமல்ல அவ்வாறான அமைப்பு ஒன்றை ஏற்படுத்து மாறு கோரிக்கை விடுக்கும் நிலையில் மலையக கல்வி இல்லை என்றும் சொல் கிறார். இன்று வருடத்திற்கு ஒன்பதாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். என்றால் அவர் களில் 400 அல்லது 500 மலையக தமிழ் மாணவர்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். ஆனால் இந்த அளவிலும் மாணவர்கள் பல்கலைகழகங்களில் சேர்கின்றார்கள் இல்லை என்பதே உண்மை.

இரண்டாயிரமாம் ஆண்டில் பதினைந் தாயிரம் மாணவர்களை பல்கலைகழகங் களில் சேர்க்க வேண்டும் என அரசு திட்டம் தீட்டி இருக்கின்றது. அப்படி பார்த்தால் இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டளவில் ஐம்பதாயிரம் மாணவர்கள் பல்கலைக்கழகங் களில் பயில்வர். இவர்களில் குறைந்த பட்சம் இரண்டாயிரம் மாணவர்களாவது மலையக தமிழ் மாணவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் பல்துறைகளில் உயர்படிப்பை தொடர்பவர்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் 21 நூற்றாண்டின் வாயில்கள மலையகத்திற்கு கொஞ்சமாவது திறக்கும்

ஆனால் மலையக கல்வியில் காணப்





பட்டிருக்கும் ''பெருமாற்றங்கள்'' எதுவுமே மேற்படி சூழ்நிலையை தோற்றுவிக்கப் போகின்றது இல்லை என்கிறார் பேராசிரியர் சந்திரசேகரன். இன்றைய நிலையில் கொழும்பு, பேராதனை பல்கலைக்கழகங் களில் பயிலும் மாணவர்களின் தொகை 1992 - 93 கணக்குப்படி குறைவானதே.

இந்நிலைக்கு காரணம் மலையக மாணவர்கள் மூளை வளர்ச்சி குன்றியவர் களாக இருக்கின்றார்கள் என்பதல்ல. மலையக மாணவர்களுக்கான ஆரம்ப கல்வி சூழல் அல்லது அஸ்திவாரம் உறுதியாக பொருத்த மானதாக இல்லை என்பதே இதன் பொருள்.

தோட்ட பாடசாலைகள் தேசிய மயமாக் கப்பட்டதன் பின்னர் தான் மலையக கல்வி ஒரு கட்டுக்கோப்புக்குள் வந்து வளர்ச்சி பெற ஆரம்பித்தது என்பது உண்மை யானாலும் அச்சமயம் மலையக தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கக் கூடிய வர்களாக விளங்கிய அரசியல் தலை மைகள் ஏனோ கல்வி விடயத்தில் பெருமளவு அக்கறை காட்டாமல் விட்டுவிட்டன. எண்பதாம் ஆண்டுகளில் தான் மலையகக் கல்வி பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டது.

# கல்விக் கொள்கையோ இலக்குகளோ? இல்லாத மலையகம்



*பேராசிரியர் சந்திரசேகரன்*

இப்போதும் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட, உபகரண குறைபாடுகள், பெற்றோரின் ஊக்கமின்மை, மலையகப் பிரமுகர்களின், செல்வந்தர்களின் வர்த்தக சமூகத்தவர்களின் குறைவான பங்களிப்பு ஆகியவற்றின் மத்தியில் மலையகக் கல்வி தடுமாற்ற நிலையில் தான் உள்ளது.

க.பொ.த. உயர்தர வகுப்புகளை உள்ளடக்கிய உயர்நிலைப் பாடசாலைகள் (தமிழ்) மலையகத்தில் மிகக் குறைவு. நுவரெலியா மாவட்டத்தில் வாழும் ஒரு இலட்சத்து 87 ஆயிரம் பெரும்பான்மை இன மக்களுக்கென இம்மாவட்டத்தில் 38 பாடசாலைகள் உயர்தர வகுப்பு வசதிகளுடன் செயற்பட்டு வருகின்ற அதே சமயம்,

இம் மாவட்டத்தில் வாழும் மூன்று லட்சத்து 17 ஆயிரம் இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் மக்களின் கல்விக்கென,

ஒன்பது பாடசாலைகள் மட்டுமே க.பொ.த. உயர்தர வகுப்புகளுடன் இயங்கி வருகின்றன எனச் சுட்டுகிறார் சந்திர சேகரனார்.

ஆசிரியர் - மாணவர் விகிதம் தேசிய மட்டத்தில் 21:1 என இருக்கும் போது மலையகத்தில் அது 64:1 என்பதாகக் காணப்படுகிறது என்றும்.


1992ம் ஆண்டில் இந்த விகிதம் நுவரெலியாவில் 44:1 என்பதாகவும் பதுளையில் 37:1 என்பதாகவும் இருந்தது என்றும் இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகிறது.

நூறு மாணவர்களையும் இரண்டு மூன்று ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலைகள் சிறிய பாடசாலைகள் என இனங் காணப் படுகின்றன. இந்நாட்டில் இத்தகைய இரண்டாயிரம் பாடசாலைகள் உள்ளனவாம். இவற்றில் 800 பாடசாலைகள் மலையகத் தமிழ் பாடசாலைகளாம்.

மேலும் இந்நாட்டில் காணப்படும் பத்தாயிரத்து 191 பாடசாலைகளில் நான்காயிரத்து 180 பாடசாலைகள் 6-8 ஆண்டு வகுப்புகளைக் கொண்ட மூன்றாந்தரப் பாட சாலைகளாகும்.

மலையகத்தில் உள்ள பெரும்பாலான (79 சத வீதமானவை) தமிழ்ப் பாடசாலைகள் இந்த மூன்றாந் தரப் பாடசாலைகளாகவே உள்ளன. சிங்களப் பாடசாலைகளில் 35 சத வீதமானவையே மூன்றாந்தரப் பாடசாலை களாக விளங்குகின்றன.

மத்திய மாகாணத்தில் க.பொ.த. (உ-த) கல்வி பயிலும் மாணவாட தொகை மூவாயிரத்து 656 என்றும் ஊவாவில் இம் மாணவர் தொகை 401 என்றும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஊவா மாகாணத்தில் 48 ஆயிரத்து 300 மாண



*சிவம்*

வர்கள் கல்வி பயில்கிறார்கள் என்பதை மனதிலே இருத்திக் கொண்டு அவர்களில் 400 பேரே உயர்தர வகுப்புகளில் உள்ளனர் என்பதை எண்ணிப்பாருங்கள்.

இதே சமயம் ஒரு இலட்சத்து 72 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயிலும் மத்திய மாகாணத்தில் மூவாயிரத்து 656 பேரே உயர் நிலைக்குத் தகுதியானவர்களாக இருக்கின்றனர் என்பதும் கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது.

பேராசிரியர் ஆய்வுக் கட்டுரை தந்திருக்கும் இத்தரவுகளை வைத்துச் சிந்திக்கும் போது,

மலையகக் கல்வியில் எங்கோ பெருந் தவறு நேர்ந்திருக்கிறது என்பது புலனாகிறது.

பாடசாலைகளை மலையகப் பகுதிகளில் அதிகரிக்கச் செய்து, ஆசிரியர் பற்றாக் குறையை நீக்கி, மேலும் வசதிகளை உருவாக்கினால் மட்டும் மலையகக் கல்வி சிறந்து விடுமா? மலையக கல்வி தாழ்ந்து காணப்படுவதற்கு கல்விக் கூடங்களுக்கு அப்பால் தென்படும் காரணிகள் யாவை? மலையகத் தமிழ் மாணவர்களை கல்வியில் ஆர்வங் கொள்ளச் செய்யவும், பெற்றோர்களை கல்வியில் அக்கறை காட்டச் செய்யவும் எவ்வாறான சூழல்களை ஏற்படுத்த வேண்டும்? மாணவர் கல்விக்குப் பாதகமாக சமூக, பொருளாதார காரணங்களை எவ்வாறு நீக்கலாம்? மலையத் தமிழ் கல்வி தொடர்பான அரசியல், தொழிற்சங்க மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களில் அணுகு முறைகள் எத்தகையவையாக இருக்க வேண்டும்?

இக் கேள்விகளுக்கு விடை காணும் வகையில் மலையகத் தமிழ் கல்வித் துறை முற்று முழுதாக மீளாய்வு செய்யப்பட்டு புதிய கொள்கைகளையும் இலக்குகளையும் நிர்ணயித்துக் கொள்வது அவசியம் என்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

மலையகத்தில் கல்வி சிறப்பதும், படித்தவர் தொகை அதிகரிப்பதும், மலையகப் பெருந் தோட்டங்களைச் சேர்ந்தவர்கள் தோட்டக் கைத் தொழிலை விட்டு வெளியேறுவதுடன் தொடர்பு கொண்டதாக இருப்பதை நாம் இங்கு கவனிக்க வேண்டும். மலையக அரசியல் மற்றும் தொழிற்சங்க நலன்களும் இங்கே அடங்கியிருக்கின்றன.

ஸ்ரீபாத கல்லூரி ஆய்வரங்கில் மலையகக் கல்வி பற்றி கருத்துரை சொல்லப் புகுந்த பத்திரிகையாளர் சிவம்.

மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதற்கு முன், தோட்டங்களில் முதியோர் கல்விக்கு வகை செய்ய வேண்டும் என்ற அபிப் பிராயத்தை முன் வைத்தார்.

டீ. சாயத்தை மலைக்குக் கொண்டு செல்ல ஆள் இல்லாவிட்டாலும், கடைசி கைக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள

வழி இல்லாவிட்டாலும், பள்ளிக்கூடம் செல்லும் தன் மகனையோ மகளையோ பார்த்து,

''நீ படிச்சு கிழிச்சது போதும். பேசாம சாயத் தண்ணிய மலைக்குக் கொண்டு போ'' என்றோ ''பொட்டக் குட்டிக்கு இந்தப் படிப்பு போதும் வீட்டுல கெட'' என்றோ அதட்டல் போட்டு, தமது பிள்ளைகளின் பள்ளிப் படிப்பை நிறுத்திவிடும் பெற்றோர்கள் மலையகத் தோட்டங்களில் நிறையவே உள்ளனர்.

மலையகத்தில் பரவலாக காணப்படும் மொட்டை வெள்ளாளர் வகுப்பினர் வசதி யானவர்கள். பெரும்பாலும் வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் இவ் வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்கள் தமது மகள்மார் படிப்பில் கெட்டிக் காரியாக இருந்தாலும் கூட, க.பொ.த.வுக்கு அப்பால் செல்வதை விரும்புவது இல்லை என்றும், பெண்கள் வயதுக்கு வந்த சில ஆண்டுகளிலேயே திருமணம் செய்து கொடுத்து விடுவதிலேயே பெற்றோர் அக்கறை காட்டுகிறார்கள் என்றும்,

கல்வித் துறையைச் சார்ந்த சிலர் தெரிவிக்கின்றனர். இவ்வகுப்பினர் இதைப் படித்து தவறாக விளங்கிக் கொள்ளக் கூடாது. கல்விக் கூடங்களுக்கு அப்பால் காணப்படும் மலையகக் கல்வி வளர்ச்சிக்கு பாதகமான அம்சங்களைச் சுட்டிக் காட்டவும், தோட்டங்களில் முதியோர் கல்வி, ஊக்கு விக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக் காட்டவுமே இந்த உதாரணங்கள் இங்கு காட்டப்பட்டன.

கல்வியின் அவசியம் பற்றி பெற்றோருக்கு உணர்த்துவது அவசியம் என்ற வாதத்தில் பிழை எதுவும் இல்லை.

மலையக மக்களின் முன்னேற்றத்தில் கல்வி பெரும் முட்டுக்கட்டையாக விளங்கு வதால், அம்முட்டுக்கட்டையை அகற்றுவதில் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து முனைப் புடன் ஈடுபடுவது, மிக மிக அவசியம்.

இவ்விடயத்தைக் கையாளவென அரசியல், கட்சி, தொழிற்சங்க மற்றும் சித்தாந்த பேதங் களுக்கு அப்பால் ஓர் அமைப்பை ஏற்படுத்துவது பற்றி மலையக பிரமுகர்களும் கல்விமான் களும் சிந்திக்க வேண்டும். இது காலத்தின் தேவை.

ஏனைய சமூகங்கள் கல்வியில் வளர்ச்சி பெற என்னென்ன நடவடிக்கைகளை மேற் கொண்டன என்பதை ஆராய்ந்து கொள்கை வகுக்க இவ்வாறான அமைப்பு ஈடுபடலாம்.

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு,

மலையகத் தமிழ்க் கல்வி வளர்ச்சி யிலும், கல்வி சிறப்புக்கும் பொருத்தமான சூழல்களை ஏற்படுத்துவதிலும் எத்தகைய பங்களிப்பை ஆற்றலாம் என்பது பற்றி தீர்மானிக்க வேண்டும் என்பது எமது தாழ்மையான அபிப்பிராயம்,

ஏனெனில் இது தலைபோகிற விஷயம்!

(தொடரும்)

# வீ. புத்திரசிகாமணி எழுதுகிறார்

அன்புடையீர்,


மலையக தமிழாராய்ச்சி மாநாடு சம்பந்தமாகக் கடந்த 3 வாரங்களாகத் தங்களுடைய பத்திரிகையில் சில ஆக்கபூர்வமான விடயங்களைக் கூறி வருவதும் பாராட்டுக்குரியதும், வரவேற்கத் தக்கதுமாகும். இவ்வாறான ஆக்க பூர்வமான கருத்துகளை தொடர்ந்தும் வரவேற்கிறேன். நடந்த குறைகளை சுட்டி காட்டுவதற்கும் களம் அமைத்துக் கொடுத்திருப்பதை வாசகர்களும், பயன்படுத்திக் கொள்வார்களென நம்புகிறேன்.

ஒரேயொரு விடயத்தை மாத்திரம் நான் உங்களுக்கு இப்போதே கூறி வைப்பது நல்லதெனக் கருதுகிறேன். இந்த மாநாட்டில் மத்திய மாகாண சபையிலுள்ள சகல துறைச் சங்கப் பிரமுகர்களையும் அழைத்து, வெவ்வேறு தொழிற்சங்கம் சார்ந்தவர்களுக்கு உரையாற்றுவதற்கும் சந்தர்ப்பம் அளித்தோம். அதேபோல் மாநாட்டில் கலந்து கொள்ளாதவர்களின் விடயத்தைப் பற்றியும் எதிர்காலத்தில் கவனம் செலுத்துவோம் எனினும் ஆய்வாளர்களையும் ஆய்வரங்கில் பங்குபற்றத் தெரிவு செய்தவர்களையும் அரசியல், தொழிற்சங்க, சித்தாந்த பேதங்களுக்கு இடமளியோம் என்ற உறுதியைக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

எமது குறைகளை, குற்றங்களை நீங்கள் சுட்டிக் காட்டுவது அடுத்த வருடத்தில் தொடர்ந்து நடாத்தும் மலையகத் தமிழாராய்ச்சி ஆய்வரங்குகளுக்கும் சாகித்திய விழாவிற்கும் உறுதுணை புரியுமென நம்புகின்றேன்.

என்றும் உங்கள்
வீ.புத்திரசிகாமணி ஜே.பி.,
மத்திய மாகாண கல்வி (தமிழ்), இந்து
கலாசார அமைச்சர்





*இடமிருந்து வலமாக பத்திரிகையாளர் ஜெஸ்கோடி, பேராசிரியர் சிவத்தம்பி, திரு. மாரிமுத்து மற்றும் பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா ஆகியோர் மாநாட்டு மண்டபத்தில் அமர்ந்துள்ளனர்.*
*(பகைப்படம் :– எஸ். பொன்னுத்துரை நாவலப்பிட்டி தினகரன் நிரூபர்)*


# மலை முகடுகளில் மதுரத் தமிழ் முழக்கம்

*அருள் சத்தியநாதன்*

பத்தனை ஸ்ரீபாத கல்லூரி தமிழாராய்ச்சி மாநாட்டு மண்டபத்தில் ஒலிப்பெருக்கிகள் அமைக்கப்பட்டிருந்த கோணங்கள் பொருத்த மானவையாக இருக்காததினாலோ என்னவோ, உரையாற்றுவோரின் குரல் எதிரொலியுடன் கலந்து காதுகளுக்கு புரியாத மொழியாக எட்டியது. ஓரமாக அமர்ந்திருந்தவர்கள் இதனால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். உரை யாற்றுவோரும், தாம் ஆய்வரங்கொன்றில் உரையாற்று கின்றோம் என்பதை மறந்து, நின்று நிதானித்து உச்சரிப்புக்கு அழுத்தம் கொடுத்து வசனங்களை உடைத்துப் பேசாமல், சும்மா கதைக்கின்ற மாதிரி வேக மாகப் பேசி கொண்டு போனதால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பது பலருக்கும் சிதம்பர ரகசியமாக இருந்தது.

பேராசிரியர் கா. சிவதம்பி நின்று, நிதானித்து உரையாற்றுபவர். கேட்போரால் எளிதாகக் கிரகிக்கக் கூடியதாக இருக்கும். இதே போல் இங்கே கருத்துரை வழங்க முன்வந்த திருமதி லலிதா நடராஜன் (நல்லாயன் மகளிர் கல்லூரி, கண்டி) எளிய நடையில், புரியும் வகையில் தெளிவாகப் பேசினார். ஒலிபெருக்கி செய்த சதியின் மத்தியிலும் இவர்கள் ஆற்றிய உரை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

தொலைப்பேசியிலும் இப்படித்தான் பலர் வளவளவென பேசிக் கொண்டே போவார் கள். எதிர் முனையில் இருப்போருக்கு எதுவுமே புரியாது. அவர் என்ன சொன்னார் என்பதை குறுக்கு கேள்விகள் போட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கும்.




*எண்ணத்துக்கு செயல் வடிவம் தந்து வீ. புத்திரசிகாமணி இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமானுடன் மேடையில் ஏனைய பிரமுகர்களுடன் அமர்ந்திருப்பிறார்.*

பேச்சுத் தமிழ், எழுதும் தமிழில் இருந்து எப்படி வேறுபடுகிறதோ அப்படியே மேடைப் பேச்சுத் தமிழும் தோலைப்பேச்சுத் தமிழும் பேச்சுத் தமிழில் இருந்து வேறுபடுகின்றன. மேடையில் பேசும் வன்மை கொண்டவர்கள் தயவு செய்து நிறுத்தி நிதானித்து பேச வேண்டும். அதே மாதிரி, ஒலி பெருக்கி அமைப்பும் வந்து அமரும் அப்பாவிகளை வதம் செய்யாமல் இருக்கும் படி பார்த்துக் கொள்வது அவசியம்.

இவை இரண்டும் சின்ன விடயங்கள். ஆனால் ஆக்கங்களையே நாசம் செய்யக் கூடியவை.

மாநாட்டுக்கு பார்வையாளராக வந்திருந்த அன்பர்களில் ஒருவர்,


''ஆய்வு, மாநாடு என்று சொல்லிக் கொண்டு பல்வேறு கட்டுரைகளை கொண்டு வந்து படிக்கிறார்களே, இவற்றால் என்னய்யா பலன் ஏற்படப் போகிறது அவர்கள் கட்டுரை களைப் படிக்கிறார்கள் பாதி விளங்க வில்லை, எழுந்து போனதும் மிகுதியும் மறந்து விடும் அப்புறம் இதில் கண்ட பிரயோசனம் என்ன?''




என்று கேட்டு வைத்தார். அவர் கூற்றில் நியாயம் இல்லாமல் இல்லை.



மாநாட்டில் திரு. புத்திரசிகாமணி உரையாற்றுகிறார்



மலையக தமிழாராய்ச்சி மாநாடு நாவலப்பிட்டி - 96



மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா நுவரெலியா 24.12.97



மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - 95
ஹட்டன் 23.12.95



மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - 95
நுவரெலியா 24.12.95



மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - 95
நுவரெலியா



மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - 95

நுவரெலியா விருது பெறுவோர் 24.12.95



மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா - 95

நுவரெலியா 24.12.95

# ஆய்வுக் கட்டுரைகள் அச்சில் வர வேண்டாமா? மாநாடு அமைப்பு ரீதியாக செயற்பட வேண்டும்!

கொழும்பில் மட்டும் தினம் ஒன்றுக்கு எத்தனையோ ஆய்வரங்குகள், ''கொன்பரன்சுகள்'' நிகழ்கின்றன. கூட்டங்கள், ஆய்வுகள் என்று சொல்லிக்கொண்டு கண்டி, நுவரெலியா போன்ற மலையக பகுதி ஹோட்டல்களில் பெரும் பண செலவுக்கு மத்தியில் அதிகாரிகள் கூடி பேசுகின்றார்கள். கட்டுகட்டாக எழுதி பிரதிகளும், அறிக்கைகளும் விநியோகிக்கப்படுகின்றன.

இந்த ஆய்வரங்குகளிலும் கூடி கூடி பேசுவதிலும் எடுக்கப்படும் பல முடிவுகள் நடைமுறைக்கு ஒவ்வாதவைகளாகவும், இறுதியில் கிடப்பில் போடப்படுப வையாகவும் சில சமயம் இருந்து விடுகின்றன. பல மீட்டிங்குகளை நடத்திய பின்னரும் ஒரு முடிவு கூட எடுக்கப்படாமல் போய்விடுவதும் உண்டு. பெரும் பணசெலவில் நடத்தப்படும் கூட்டங்கள் ஆய்வரங்கங்கள் அதன் பின்னர் அப்படியே மறந்து போய் விடுவது உண்டு.

கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது எப்படி? என்ற பொருளில் இதுவரை எத்தனை கூட்டங்கள், மாநாடுகள் ஆய்வரங்குகள் நடத்தப்பட்டிருக்கும் என்பதையும் எத்தனை தொன் எழுத்து பிரதிகள் மற்றும் அறிக்கைகள் வெளியிடப்பட்டிருக்கும் என்பதையும் கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். இன்று வரை கண்ட பலன் ஏதுமில்லை.

ஆனால் விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், அமுலாக்குவதற்கும், கருத்து பரிமாற்றங்களை ஏற்படுத்து வதற்கும், புரிந்துணர்வை உருவாக்கு வதற்கும், ஒத்தக்கருத்தொன்றை ஏற்படுத்தவும் இன்னும் உலகெங்கும் கடைப்பிடிக்கப்படுகின்ற நடைமுறையாக கூடிப்பேசுவது விளங்கி வருகின்றது.

ஒரு ஆய்வரங்கோ, கூடி பேசும் கூட்டமோ வெற்றிகரமாக நடைபெற்று அதன் இலக்குகளை எட்ட வேண்டுமானால் அவை திறம்பட ஏற்பாடு செய்யப்பட்டு நிர்வகிக்கப் பட்டிருக்க வேண்டும். ஏற்பாடுகளும் நிகழ்ச்சி நிரல் அமைப்பும் வெகு திறமையாக திட்டமிடப்பட்டிருக்க வேண்டும். கூடி பேசுகிறவர்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் உண்மையான அக்கறை கொண்டவர்களாக இருக்க வேண்டும். கூட்டமோ, ஆய்வரங்கமோ கலைந்து சென்ற பின், அது தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் அப்போதே ஆரம்பிக்கப்பட வேண்டும். அடுத்த கட்டம் பற்றி சிந்தனை தெளிவு கொண்டவர்களாக ஏற்பாட்டாளர்கள் இருக்க வேண்டும்.

அப்போது தான் இந்த ஆய்வரங்குகள் அர்த்தமுள்ளவையாக இருக்க முடியும்.

இப்போது மலையக தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஆய்வரங்குக்கு வருவோம்.

மலையக கல்விமான்களையும் பேராசிரியர்களையும் அழைத்து வந்து ஆய்வு கட்டுரைகளை படிக்க செய்தாயிற்று இனி காரியம் முடிந்தது என்று ஏற்பாட்டாளர்கள் எண்ணுவார்களானால் இதுவரை செலவழிக்கப்பட்ட அத்தனை பணமும், நேரமும் வீண் என்பதே அதன் பொருளாக இருக்கும்.

ஆய்வரங்கில் படிக்கப்பட்ட கட்டுரைகளை என்ன செய்வது என்பதை பற்றி இதுவரை எந்தவொரு முடிவும் எடுக்கப்பட்டதாக தெரிய

வில்லை. மலையக வரலாற்றை முறையாக பதிவு செய்வதற்கான ஆரம்ப பணியே இம்மாநாடு என்ற கருத்தை பேராசிரியர் சிவதம்பி இங்கு முன்வைத்தார். அது சரியான ஒரு பார்வை இம்மாநாட்டின் தலையான நோக்கம் அதுவாக தான் இருக்க வேண்டும். வரலாற்றை ஆராய்ந்து ஆவணப்படுத்துவது என்பது சுவர் ஒன்றை கட்டி எழுப்புகின்ற மாதிரி சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்!

ஆகவே இந்த ஆய்வரங்கில் முன் வைக்கப்பட்ட சகல ஆய்வு கட்டுரை களும் தொகுக்கப்பட்டு நூல்வடிவில் வெளி யிடப்பட வேண்டும். கட்டுரைகள் தமிழில் இருப்பது எவ்வளவு அவசியமோ அவ்வாறே உலக பொது மொழியான ஆங்கிலத்திலும் நூலாக வெளியிடப்பட வேண்டியது மிக அவசியம்

அப்போது தான் தமிழர் அல்லா தோரையும் வெளிநாட்டினரையும் இவை சென்றடைய முடியும். புதிய அபிப்பிராயங் களையும் ஆய்வுகளையும் உருவாக்கும் அடித்தளமாக இவை செயலாற்றவும் முடியும்.

இதுபற்றி உத்தியோக பூர்வமான முடிவு எதுவும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. ஆனால் முடிவு எடுக்கப்பட்டே ஆக வேண்டிய விடயம் இது.

மாநாடு ஒன்று கூடப்பட்டு, கருத்தரங்கு நடத்தப்பட்டு மூன்றாம் நாள் அது கலைந்து சென்றதோடு சரி அடுத்ததாக என்ன செய்ய லாம் என்பது பற்றி இறுதி நாளோ அல்லது அதன் பின்னரோ கூடி விவாதிக்கப்பட வில்லை அதனால் முடிவு எடுக்கப்படவும் இல்லை.

தலைவர், செயல்குழு, உபக்குழுக்கள் என்ற ஒரு அமைப்பு ஒரு வடிவம் இல்லாத தால் தான் இந்த நிலை.

பேராசிரியர் சிவதம்பி, ''இது ஓர் ஆரம்பத்தின் ஆரம்பம்'' என்றார். ஆகவே பத்தனை மாநாட்டை கண்டபடி விமர்சிப்பதில் அர்த்தம் இல்லை தவறுகள் ஏற்படுவது இயல்பு, இம்மாநாடு ஒரு கட்டுக்கோப்புக்குள் வந்து செம்மையாக இயங்க வேண்டும் என்பதற்காகவே இக்கட்டுரை தொடர் எழுதப் படுகிறதே தவிர புழுதி வாரி தூற்றுவதற் கல்ல.

ஆகவே, வெகுசீக்கிரமே ஆலோசனை கூட்டமொன்று கூடப்பட்டு செயலகம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் வி. புத்திரசிகாமணி விரைவிலேயே ஒரு முடிவு எடுப்பார். என்பது எமது நம்பிக்கை யாகும்.

முன்னர் குறிப்பிட்டதை போன்று முதலில் சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டு இச்செயலகம் பதிவு செய்யப்பட வேண்டும். பின்னர் ஒவ்வொரு நடவடிக்கை பிரிவிற்கும் தனித் தனி குழுக்கள் அமைக்கப்பட்டு பொறுப்புகள் அவற்றிடம் விடுபட வேண்டும். மாநாட்டுக்கு ஒரு இலட்சினையும் உருவாக்கப்பட வேண்டும்.

இம்மாநாட்டின் இயக்கத்திற்கு பணம் மிக முக்கியம். அமைச்சரின் நிதியை மட்டும் நம்பி, தொடர்ந்து நடைபெற்றுக் கொண் டிருக்க வேண்டிய காரியத்தை நடத்த முடியாது. தொழில் அதிபர்கள், வர்த்தகர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் பங்களிப்பு மிகவும் அவசியம். அதே சமயம் நிதி திரட்டும் பிரிவு எப்போதுமே பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தக்கூடிய கரங்கள் கறைபட்டுவிடக் கூடிய ஒன்றாக இருப்பதால்,

அமைச்சரின் நேரடிக் கண்கானிப்பில் கீழ் மிகவும் பொறுப்பானவர்களிடம் இப்பிரிவு கையளிக்கப்பட வேண்டும்.

இப்படியான அமைப்பு முறைகளோ, பூர்வாங்கக் கட்டமைப்போ இன்றி, வெறும் மாநாடு ஒன்றே இப்போது நடைபெற்று முடிந்திருக்கிறது. உண்மையைச் சொல்வ தானால்

இம் மாநாடு நிச்சயமற்ற நிலையில் தான் இன்னும் இருந்து வருகிறது. ஒரு தலைமையின் கீழ், செயலகம் ஒன்றின் செயற்பாட்டின் கீழ் தனக்கென ஒரு அடை யாள முத்திரையுடன் இம்மாநாடு செயற்பட முன்வருகையில் தான்.

பேராசிரியர் சொன்ன அந்த ஆரம்பம் ஆரம்பமாகிவிட்டது என்று கொள்ள முடியும்.

ஆகவே விரைவிலேயே ஆலோசனைக் கூட்டமும், செயலகத்துக்கான கட்டமைப்புப் பணிகளும் ஆரம்பிக்கப்பட வேண்டும். என்றும் ஏற்கனவே நடத்தி முடிக்கப்பட்ட வற்றை இனி மேலே எடுத்துச் செல்வது பற்றி திட்டம் வகுக்கப் பெற வேண்டும். என்றும் ஒரு பணிவான வேண்கோளை இங்கே முன் வைக்கிறோம்.

தமிழ் ஆய்வு மாநாடு எனப்படும் போது, அங்கே இலக்கியம் நிச்சயமாக சம்பந்தப் படுகிறது. இலக்கியம் எப்போதுமே சமூகங் களின் வரலாற்றை ஆவணப்படுத்தி வந்துள்ளன. சமூகம் ஒன்றின் மொழி, கலை, பண்பாட்டு வளர்ச்சியையும் பரிமாணங் களையும் வெளிப்படுத்தும் ஆற்றல் இலக்கியத்துக்கு உண்டு. ஆனால்,

நடைபெற்று முடிந்த மலையக தமிழா ராய்ச்சி மாநாடு மலையக இலக்கியத்தைப் பற்றி கொஞ்சமும் அலட்டிக்கொள்ள வில்லை. மலையக இலக்கியம் பற்றி ஒரு கட்டுரை தானும் சமர்ப்பிக்கப்பட இல்லை. மலையக எழுத்தாளர்களோ அன்றி கவிஞர்களோ அங்கே ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்து அல்லது கருத்துரை வழங்க முன் வரவில்லை.

இது ஒரு பெரும் குறைபாடாகத் தெரிந்தது.

அமைப்பு ரீதியாக இயங்காததும், செயற்பாட்டுக் குழுவில் இலக்கியக் கர்த் தாக்கள் சேர்த்துக் கொள்ளப்படாததும் தான் இதற்குக் காரணம், அவர்களுக்கு இட மளிக்கப்பட்டு இருந்தால் விழா மலரை எப்படியேனும் கொண்டு வர முயற்சித்திருப் பார்கள்!

இரண்டு நாள் ஆய்வரங்கில் அவ்வப் போது கருத்து மோதல்கள் நிகழ்ந்தன. ஆய்வுரைகளும் கருத்துரைகளும் இப்படி இருந்திருக்க வேண்டும் என்றும் இவற்றைச் சொல்லத் தவறிவிட்டன. என்றும் சிலர் சுட்டிக் காட்டினர்.

இலங்கை திறந்த பல்கலைக்கழக சமூகக் கல்விப் பிரிவைச் சேர்ந்த திரு. ஏ.எஸ். சந்திரபோஸ் மலையகத் தமிழரின் சமூகப் படையாக்கம் என்ற பொருள் பற்றி கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றினார்.

மலையகத்தின் சாதி அமைப்பு, தொழில் ரீதியான சமூகக் கட்டமைப்பு பற்றியதாக இருந்தது இந்தக் கட்டுரை. சாதி அமைப்பு, தொழில் ரீதியான ''சாதி'' அமைப்பு.

மிக முக்கியமான அம்சம்

அடுத்த வாரம் அலசுவோம்.

(தொடரும்)

*அருள் சத்தியநாதன்*

# ஶ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தமும் இனக் கலவரங்களும் சாதி அமைப்பைத் தகர்த்தன!

தமிழ் மக்களின் சமூகக் கட்டமைப்பு இரண்டு வகைப்படுகிறது. ஒன்று சாதி ரீதியானது. இரண்டாவது பொருளாதார ரீதியானது.

சாதி என்றதுமே தமிழ் நாடு ஞாபகத் துக்கு வரும். அங்கே நடக்கின்ற சாதிக் கலவரங்கள், சாதி பாகுபாடு, அதற்கு எதிரான இயக்கங்கள், கீழ் சாதிக் காரர்கள் தீ வைத்துக் கொளுத்தப்படும் சம்பவங்கள்...

அன்றைய யாழ்ப்பாணமும் ஞாபகமும் வரும். தீண்டத் தகாதவர்கள் என ஒரு பகுதியினர் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். இந்து கோவில்களில் அவர்கள் அனுமதிக்கப் படாமல் இருந்தனர். ஆலய பிரவேச போராட்டங்கள் நடைபெற்றது.

தொடர்ந்து பல ஆண்டுகளாக யுத்தம் நடைபெற்று வருவதால், வட பகுதி தமிழ் மக்களிடையே சாதிகள் மீதான பற்று இப்போது அருகி இருப்பதாக மேலோட்ட மாக பார்க்கும் போது தெரிகிறது. ஆனால் ஒரு மனிதனை சாதி ரீதியாக பிரித்துப் பார்க்கும் அந்த அடிப்படை சமூகப்பண்பு அங்கு முற்றிலும் அடையாளம் இழந்து விடவில்லை என்பது, நெருங்கிப் பார்ப்பவர் களுக்குத் தான் தெரியும்!

இதே மாதிரி மலையக சமூகத்தில் சாதியைப் பெரிது படுத்திப் பார்க்கும் வழக்கம் இல்லை என்றுதான் மேலோட்ட மாகப் பார்ப்பவர்களுக்குத் தெரியும். ஏனெனில் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தோர் இங்கே தமக்கு சம உரிமை வேண்டும் என்று இயக்கங்கள் நடத்தவில்லை. சாதி காரணமாக பிரச்சினைகள் எழும்பவில்லை. சாதியைக் காரணம் காட்டி பாராபட்சம் காட்டுவதாக புகார்கள் எழும்பவில்லை.

இதனால், மலையக மக்களிடையே சாதி பார்க்கும் பழக்கம் இல்லை என்று முடிவு கட்டிவிட முடியாது. சாதி அமைப்பு தென் இந்தியாவில் இருப்பது போலவே தான் மலையகத்திலும் வேர் விட்டிருக்கிறது. இங்கு சத்தமில்லாமல் பல சாதிச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. ஒரு சாதியைச் சேர்ந்தோர் தமது சாதியிலேயே தான் பெண் எடுக்கின்றார்கள். முக்கியமான காரியங் களை சாதிக்குள்ளேயே நடத்திக்கொள் கிறார்கள். புதியவர்கள் அறிமுகமாகும் போதும்,

முதலாவது
மலையக
தமிழாராய்ச்சி
மாநாடு
1996 நவம்பர் 17
முதல் 19 வரை
பத்தனை

06

அவர் என்ன சாதியை சேர்ந்தவர் என்று விசாரித்து தெரிந்துகொண்ட பின்னர் தான் சம்பந்தம் வைத்துக்கொள்கிறார்கள். புதிய வீட்டில் தண்ணீர் குடிப்பது கூட சாதி என்ன என்பதை தெரிந்து கொண்ட பின்னர் தான்!

150 ஆண்டுகளுக்கு முன்னர் தேயிலை இறப்பர் தோட்டங்களுக்கு தென்னிந்தியர்கள் பெருவாரியாக அழைத்து வரப்பட்ட போது அவர்கள் பெரும்பாலானோர் கீழ் சாதிகாரர் களாகவே இருந்தனர் என்று 1925ம் ஆண்டு வெளியான **(Hhe Planters Nllk of Caste and Custom by Lewis B. Green)** துரைமார் வழிகாட்டி என்ற நூல் குறிப்பிடுகின்றது.

தென்னிந்திய தொழிலாளர்களை புரிந்து கொள்வதற்கு முன் அவர்களது சாதி அமைப்பை புரிந்து கொள்வது மிகவும் அவசியம் என வெள்ளை தோட்ட துரை மாருக்கு என வெளியிடப்பட்ட நூல்களில் வலியுறுத்தப்பட்டிருந்தன. இந்த நூல்களில் தென்னிந்திய தமிழரின் சாதி அமைப்பு விலாவாரியாக விவரிக்கப்பட்டுள்ளது.

நான்காவது வர்ணத்தை சேர்ந்த சூத்திரர் களே இங்கு அழைத்து வரப்பட்டனர் என்றும் இப்பிரிவிலும் உயர் சாதி, தாழ்ந்த சாதி என 16 உட்பிரிவுகள் இருந்தன என்றும் இந்நூல்கள் வெள்ளையருக்கு எடுத்துரைத் துள்ளன.

ஒவ்வொரு சாதியினரின் இயல்புகள் யாவை? அவர்களை எப்படி கையாள வேண்டும்? எப்படி நடத்தினால் வேலை வாங்கலாம்? எப்படியெல்லாம் இவர்களை நடத்த கூடாது, என்ன செய்தால் இவர் களுக்கு கோபம் வரும் என்பது போன்ற தகவல்கள் இந்நூல்களில் தரப்பட்டுள்ளன.

லயங்களில் எந்த எந்த சாதிகாரர்களை ஒன்றாக தங்க வைக்கலாம் எந்த எந்த சாதிகாரர்களை ஒன்றாக வைக்க கூடாது என்பதையும் தோட்ட துரைமார்களுக்கு அன்றைய காலனி அரசு சொல்லிக் கொடுத்து இருக்கிறார்கள்.

தோட்ட தொழிலாளர்கள், தாழ்ந்த சாதியை சேர்ந்தவர்கள் என்றும் அவர்களை மேய்க்க வந்தவர்கள் உயர்ந்த சாதியினர் என்றும் சொல்லப்படுகின்றது. இவர்களுடன் கூடவே வந்த வர்த்தகர்கள், பணத்தை வட்டிக்கு விடுவோர் போன்றோரும், கங்காணி, பெரிய கிளாக்கர், தொழிற்சாலை மேற் பார்வையாளர் போன்றோரும் உயர் சாதி யினராக தம்மை அழைத்துக் கொண்டனர்.

கடல் கடந்து பிழைக்க வந்த இடத்திலும் வெள்ளையர்களின் கீழ் ஏறக்குறைய அடிமை சேவகம் செய்து வந்த நிலையிலும், இந்த உயர் குலத்தினரும் தாழ் குலத் தினரும் வெள்ளையர் முன்னால் ஒட்டு மொத்தமாக கீழ் சாதியினர் ஆகிவிட் டிருந்தனர் ஆனாலும் இந்தியா வம்சா வழியினர் தமது வித்தியாசங்களை கைவிடவே இல்லை. சாதி ரீதியாக இம்மக்கள் பிரிந் திருப்பதில் வெள்ளை துரைமார் அனுகூலம் அடைந்தனர் என்று தான் சொல்ல வேண்டும். கிறிஸ்தவ மதத்தை மக்களிடையே பரப்புவதற்கு சாதி பாகுபாடு சாதகமான நிலையை தோற்று வித்திருந்தது என்று கூட சொல்லலாம். இந்த சாதி அமைப்பு இப்பொழுதும் பூடகமான நிலையில் மலை யகத்தில் வழக்கில் இருந்து வருகின்றது.

சாதி அமைப்பை ஆராய்ந்து பார்த்தால் அதன் பின்னால் பொருளாதார காரணிகள் இருப்பது தெரிய வரும். பொருளாதார கட்டமைப்பின் கீழ் மட்டத்தில் இருப்பவர்கள் வறியவர்களாகவும் தாழ்ந்த வகுப்பை சேர்ந்தவர்களாகவும் இருந்து வந்திருக் கின்றார்கள். சாதியை காரணம் காட்டி

அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த வேலை களும் அவற்றிற்கான வருமானமும் கீழ் மட்டத்தை சேர்ந்ததாக இருந்ததால் அவர்கள் பாமரர்களாகவும் வறிவர்களாகவும் இருக்க நேர்ந்தது. சாதி அமைப்பு காரண மாக அவர்களால் ஒரு மட்டத்திற்கு அப்பால் முன்னேற முடியாமல் இருந்தது.

தாழ்ந்த வகுப்பினரை ஒரு மட்டத்தில் அடக்கி வைப்பதில் உயர் சாதியினர் என தம்மை அழைத்துக்கொண்டோர் கண்ட வெற்றி அவர்களுக்கு பல அனுகூலங்களை பெற்று தந்தது. உயர் மட்டத்தினர் வெள்ளையர்களோடு பழகினர் ஆங்கிலம் கற்றனர். தோட்டங்களில் உத்தியோக தரப் பதவிகளை வகித்தனர். டவுன் பாடசாலை களுக்கு தமது பிள்ளைகளை அனுப்பி வைக்க முடிந்தது. தோட்ட வாழ்க்கைக்கு அப்பாலும் அவர்களால் கிளை பரப்ப முடிந்தது.

ஆனால் சாதி அடிப்படையில் கீழ் மட்டத்தில் இருந்தவர்களால் எந்த நன்மை யையும் பெற்றுகொள்ள முடியவில்லை. திரும்ப திரும்ப அவர்கள் தொழிலாளர் களாகவும் சாதி அடிப்படையிலான தொழில் களை தொடர்ந்து செய்பவர்களாகவும் இருக்க வேண்டிய நிலை.

மலையகத்தில் கடுமையாக கடை பிடிக்கப்பட்ட இச்சாதி அமைப்பு ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தமும் அமுலாகும் வரை தீவிரமாக இருந்தது என்கிறார் சமூக படையாக்கம் என்ற பொருள் பற்றி ஆய்வு கட்டுரை சமர்பித்த திரு. சந்திரபோஸ். இவர் நாவல இலங்கை திறந்த பல்கலைகழக மானிடவியல் சமூக விஞ்ஞான சமூக கல்வி பிரிவில் பணியாற்றி வருபவர். மலை யகத்தை பிறப்பிடமாக கொண்ட இவர் சுய முயற்சியால் கல்வி படிகளில் ஏறி, இன்று சிறந்த ஓர் இடத்தை வகித்து வருவதோடு கல்வியின் உச்சங்களை எட்டிப்பிடிப்பதில் தொடர்ந்தும் அக்கரை காட்டி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.


மலையகத்தில் வசதிகளை கொண்டிருந்த உயர் சாதியினர் தமது பொருளாதார வசதி காரணமாக அடிக்கடி தென்னிந்தியா சென்று வர முடிந்தது. இதனால் தமது சாதி ரீதியாக நம்பிக்கைகளுக்கு உரமேற்றிக்கொள்ள கூடியதாக இருந்தது.

ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் பின்னர் தென்னிந்தியாவில் காணி அல்லது பொரு ளாதார ரீதியான நலன்களைக் கொண்டிருந் தவர்கள் தத்தமது ஊர்களுக்கு திரும்பி போனார்கள் இதனால் அடக்கி வைக்கப் பட்டடிருந்த கீழ் தட்டை சேர்ந்தவர்கள் கொஞ்சம் தலைதூக்கி பார்க்க முடிகிறது என்றும் அவர்கள் விட்டுச் சென்ற இடங்களை நிரப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது என்றும் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்.

அடக்கி வைக்கப்பட்டிருந்தோர் மேலும் தலையெடுக்க 77, 81 மற்றும் 83 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற கலவரங்கள் உதவின என்றும் குறிப்பிடலாம். வசதியுள்ள வர்கள் இந்தியாவுக்கு சென்று விட சாதி அமைப்பு காரணமாக பொருளாதார ரீதியாக ஒதுக்கப்பட்டிருந்தவர்கள் ஏற்பட டிருக்கும் வெற்றிடங்களை நிரப்ப தலைப் பட்டனர்.

அதாவது சமூக பொளாதார சூழல்கள் சமூகத்தின் ஒரு பிரிவினர் சாதி அடிப் படையில் ஒடுக்கப்பட்டிருந்த நிலையை அகற்றி இருந்தாலும் சாதி ரீதியான கண்ணோட்டத்தை மலையகம் இன்னும் முற்றாக இழந்து விடவில்லை.

இப்போதும் கூட கீழ் தட்டை சேர்ந்த



இந்தியா தமிழ் தொழிலாளர்கள் இலங்கைத் தோட்டங்களுக்கு அழைத்து வரப்பட்டு குடியமர்த்தப்பட்ட லயன் அறைகள்

ஆனால் படித்து உத்தியோகம் பார்ப்போரை உயர்சாதி வகுப்பினர் சமமாக நடத்த முன் வருவது இல்லை. பாராளுமன்ற மகாண சபை மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களிலும் போட்டி இட்டவர்கள் சாதி ரீதியாக பிரித்து பார்க்கப்பட்டனர் என்றும் தாழ்ந்த வகுப் பினருக்கு சம அந்தஸ்த்து வழங்கப்பட வில்லை என்றும் தமது கட்டுரையில் திரு. சந்திரபோஸ் குறிப்பிடுகின்றார்.

மலையகத்தில் இவ்வாறான இழிநிலை காணப்படுகின்ற போதிலும் கூட சாதி அமைப்பிற்கு எதிராக குறிப்பிட்டு சொல்லக் கூடிய எதிர் இயக்கங்கள் போராட்டங்கள் எதுவும் நடைபெற்றதாக தெரியவில்லை. இலங்கை தி.மு.க. இளஞ்செழியனின் தலைமையில் 60 களில் வீறுகொண்டு எழுந்தபோது தாழ்ந்த வகுப்பினரின் எழுச்சி இயக்கமாகவே அது வர்ணிக்கப்பட்டிருந்தது. மலையகத்தில் இருந்த இயக்கத்திற்கு எதிர்ப்பு காட்டிய அரசியல் மற்றும் தொழில் சங்க தலைமைகள் அவை எப்படி நடந்து கொள்வதற்கு அவற்றின் சாதி ரீதியான கண்ணோட்டமும் ஒரு பிரதான காரண மாகும்.

இலங்கையில் தி.மு.க. வுக்கு அப்பால் யாழ் மண்ணில் நடைபெற்றது போல் எதிர்வியக்கங்கள் மலையக மண்ணில் வழுபெறாததிற்கு தாழ்ந்த வகுப்பினர் பெரும் பாமரர்களாகவும் தமது நிலையை "கடவுள் விட்ட வழியாக" க் கருதி ஏற்றுக் கொண்ட வர்களாக இருந்ததே பிரதான காரணமாக இருந்திருக்க வேண்டும். வீறு கொண்டெழு வதற்கு கல்வி என்ற கொழு கொம்பு அவர்களுக்கு இருக்கவில்லை. தொழில் சங்கங்கள் சாதி விடயத்தில் மௌனத்தை கடைபிடித்து வந்தன.

இப்போது கல்வி கற்றோர் தொகை மலையகத்தில் கணிசமாக அதிகரித்து விட்ட நிலையில் சாதி பாகுபாடுகளுக்கு அப்பால் அரசியல், தகுதி திறமை அடிப்படையில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் சூழ் நிலையில் சாதி அமைப்பு சிதைந்து விடுமா? மலையகத்தில் சாதி அமைப்பு முற்றாக தகர்த்து எறியப்படும் நாள் அருகில் இல்லை என்றே சொல்ல வேண்டும். ஆனால் இதன் தீவிரம் வேகமாக குறைந்து வருகிறது. உயர் சாதியினர் தமது செல்வாக்கு செலுத்தும் சக்தியை இழந்து வருகின்றனர். மேல் வகுப்பினரால் மட்டும் கையாள பட்டு வந்த வேலைகளையும் சமூக பணிகளையும் ஒடுக்கப்பட்டு இருந்த மக்களும் கையாள ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இதனால் சாதி முறைக்கு அப்பால் சமூக ரீதியான ஏற்ற தாழ்வும் பொருளாதார ரீதியாக ஒதுக்கி வைக்கப்படும் தன்மையும் சாதி பாகுபாட்டிற்கு நிகரான அளவில மேலெழுந்து நிற்பதை காண முடிகிறது.

கல்வி கற்கும், வர்த்தக அல்லது சுய தொழிலில் காள் ஊன்றும் மற்றும் அரசு உத்தியோகம் பெற்று பெரும் வாய்ப்பு கொண்டோர் அவர்கள் என்ன வகுப்பை சேர்ந்தோராக இருந்தாலும் சரி உயர் தட்டை சார்ந்தோராகவும், இந்த வாய்ப்புகள் அற்ற மலையக மக்கள் தொடர்ந்தும் கல்வி பொருளாதார நிலையில் பின் தள்ளப்பட்ட நிலையில் அவர்கள் என்ன வகுப்பினராக இருந்தாலும் சரி ''கீழ் சாதி'' யினராகவே கருதப்படும் புதிய சமூக படைப்பாக்கம் இப்போது தோற்றம் பெற்று வருகிறது. ஒரு சாதிமுறை வலுவிழந்தால் மற்றொரு சாதி முறை வந்து விடுகிறது. மலையக மக்களிடையே சாதி முறை செய்து வரும் சீர்கேடுகளையும் இதை ஒழிப்பதன் அவசி யத்தையும் அடுத்த வாரம் பார்ப்போம்

(தொடரும்)

---

அன்புடையீர்,

''மலையக கல்வி'' பற்றிய எனது ஆய்வு கட்டுரையில் உள்ள இறுக்கத்தை குறைத்து பல மட்டங்களில் உள்ள வாசகர்களுக்கும் பயன்படும் வகையில் இலகுவான தங்கள் நடையில் தங்கள் விமர்சன நோக்கையும் கலந்து கட்டுரையின் கருத்துகளை சென்ற ஞாயிறு தினகரனில் வெளியிட்டு இருந்தீர்கள் அதற்கு பெரிதும் நன்றியுடையேன்.

மலையக தமிழ் ஆராய்ச்சி மாநாடு பற்றிய அலசலும் பார்வையும் அமைப் பாளர்களின் எதிர்கால செயல் திட்டங்களுக்கு நன்கு பயன்படும். மாநாட்டிற்கு வருகை தராதவர்களும் அதில் கலந்து கொண்ட உணர்வை பெறும் வகையில் கட்டுரை அமைந்து வருகிறது. ஆய்வு கட்டுரைகளின் மைய கருத்துக்களை தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் சென்றடைய செய்யும் வல்லமை கொண்டவையாக கட்டுரைகள் அமைந்துள்ளன.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்
கொழும்பு பல்கலைக்கழகம்

அன்புடையீர்

மலையக தமிழாராய்ச்சி மாநாடு பற்றி கட்டுரை தொடரை வாசித்து வருகிறேன். தங்களது துணிச்சலான பார்வைக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் இத்தொடர் இத்துடன் நின்று விடாது தொடர வேண்டுமென வேண்டுகிறேன். ''மெல்ல தமிழினிச் சாகும்'' என்ற வாக்கியங்களை பொய்யாக்கி விட துணிந்த குழுவினருள் நானும் ஒருத்தி

நளாயினி சுப்பையா
கலாச்சார உத்தியோகத்தர் கண்டி

# மாநாட்டில் கம்யூனிஸம் மலையகத்தவருக்கு ஆற்றிய பணிகள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்

ஐந்தாவது கட்டுரை தொடரின் இறுதியில் ஆய்வரங்கில் கருத்து மோதல்கள் நிகழ்ந்த தாக குறிப்பிடப்பட்டு இருந்தது. ஆனால் அது தொடர்பாக ஆறாவது அங்கத்தில் குறிப்பிட மறந்து போய்விட்டது.

ஆய்வு கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு முடிந்ததும் சபையோரின் அபிப்பிராயங்கள் கோரப்பட்டன. அப்போது சபையில் வீற்றிருந்த படித்த இளைஞர்கள் எழுந்து கட்டுரையில் இந்த அம்சம் விடுபட்டு போய் இருக்கிறது இது இடம் பெற்றிருக்கவே வேண்டும். இது வலியுறுத்தபட்டிருக்கவே வேண்டும் என்று சுட்டிக் காட்டினார்கள். சமதர்ம கருத்துக் களையும் முன் வைத்தார்கள். திரு. முத்து லிங்கம் தனது ஆய்வுக் கட்டுரையில் இந்திய வம்சாவலி தோட்ட தொழிலாளர்களை பொது படையாக விவசாய தொழிலாளர்கள் என்று குறிப்பிட்டு விட அது எப்படி தோட்ட தொழி லாளரை விவசாய தொழிலாளர் என்ற அடைமொழிக்குள் அடைக்க முடியும்? தோட்ட தொழிலாளர்கள் தனித்துவம் கொண்டவர்கள். தனி வரலாறு, பாரம்பரியம் உடையவர்கள் ஏனைய விவசாய தொழிலாளர்களை விட மாறுபட்டவர்கள் அவர்களை பொதுபடையாக விவசாய தொழிலாளர்கள் என்று அழைத்து ஏனைய விவசாய தொழிலாளர்களுடன் சமன் படுத்தி விட்டால் இம்மக்களின் பிரச்சனைகளும் பத்தோடு பதினொன்றாகி போய்விடுமே! உரிமைகளுக்கும் அதோ கதி ஏற்பட்டு விடுமே! என்று எதிர்ப்பு குரல் கிளம்பியது.


கருத்துரை நேரம் முடிந்து திரு. முத்து லிங்கம் அவற்றுக்கு பதிலளிக்க வந்த போது மலையக தோட்ட தொழிலாளர்களை ஏனைய விவசாய தொழிலாளர்களுடன் சமன் படுத்தும் எண்ணத்தில் அப்பதத்தை பிரயோ கிக்கவில்லை என்றும் பெருந்தோட்ட பயிர் செய்கையும் ஒரு விவசாய முயற்சி தான் என்ற பொருளிலேயே தோட்ட தொழிலாளர் களை தனது கட்டுரையில் விவசாய தொழி லாளர்கள் என்று குறிப்பிட்டதாகவும் நீண்ட விளக்கம் அளிக்க நேர்ந்தது.

திரு. முத்துலிங்கம் அளித்த விளக்கம் சரியானது தோட்ட தொழிலாளர்கள் விவசாய தொழிலாளர்கள் என்று அழைப் பதில் தவறு இல்லைதான். ஆனால் அதுவல்ல நாம் இங்கு கவனிக்க வேண்டிய விடயம்.

மலையக இளைஞர்கள் இடையே இப்போது காணப்படும் விழிப்புணர்ச்சியையும், உஷார் தன்மையால் வித்தியாசமாக தமக்கு புலப்படும் விடயங்களை உடனடியாக சுட்டிக் காட்டி விளக்கம் கேட்பதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

இங்கே கருத்துரை வழங்க வந்தவர்களில் கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரியின் தமிழ் பிரிவின் அதிபரான திருமதி லலிதா

நடராஜனும் ஒருவர். இவர் கம்பீரமான குரல் வளமும் அழுத்தம் திருத்தமாக பேசக்கூடிய நாவன்மையும் உடையவர் அவரது பேச்சை கேட்ட போது லலிதா நடராஜனின் அறிவையும் ஆற்றலையும் இன்னும் செம்மை யாக இம்மாநாடு பயன்படுத்திக் கொண்டிருக் கலாமே என்ற எண்ணம் மேலோங்கியது.




இதை மாநாட்டு அமைப்பாளர்கள் கவனத்தில் கொள்வார்களா! இவர் தமது கருத் துரையில், ஆய்வரங்கில் ''குழப்பம்'' விளை வித்த இளைஞர்களைப் பற்றி குறிப்பிட்டார். மலையகம் விழித்துக் கொண்டிருக்கிறது என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது என்றும் இது ஒரு நல்ல சகுனம் என்றும் கூறினார்.

எதைச் சொன்னாலும் எறுக்கு மாறாக மோத வருகிறார்களே இவர்கள் என்று சிலருக்கு எரிச்சலாக இருந்தாலும் நெற்றிக் கண்ணை திறந்தாலும் குற்றம் குற்றமே என்று சொல்லக்கூடிய மலையகத்தின் காவல் நாய்களாக செயல்பட்ட ஓர் இளைஞர் பட்டாளம் விழிப்புடன் காத்திருப் பதை எண்ணி சந்தோஷப்படவே வேண்டும். மலையக மக்களை தொடர்ந்தும் ஏமாற்றி பிழைத்துக் கொண்டிருப்பவர்கள் இனியாவது உஷார் அடைய வேண்டும்.

''இவர்கள் விழித்துக் கொண்டிருக் கிறார்கள் ஆகவே நாம் பயப்பட தேவை யில்லை'' என்று திருமதி. நடராஜன் கூறியது மிகவும் சரியானது.

பொது உடைமை கொள்கையை முன்வைத்து இங்கே சிலர் பேச முற்பட்ட தையும் கவனிக்க முடிந்தது. கம்யூனிச கொள் கைக்கு சமீப காலமாக ஏற்பட்ட பின்னடைவுகள் காரணமாக அதனை புறந்தள்ளி விடுவதற்கு இல்லை என்று அது ஒரு வாழும் சித்தாந்தம் என்றும் பொருள் படும் வகையில் சிலரது குறிப்புரைகள் அமைந்திருந்தன.

கம்யூனிசம் தொழிலாளர் வர்க்கத்திற்கு ஆற்றிய தன்னலமற்ற சேவைகள் ஏராளம். பொது உடமை வாரம் தான் தொழிலாளர் களுக்கு இந்நாட்டில் கூலிக்காரன் என்று மட்டுமே இருந்து வந்த இடத்தை மாற்றி தொழிலாளர்களின் முக்கியத்துவத்தையும் தேசிய பொருளாதாரத்தில் அவர்களது பங்களிப்பையும் துலாம் பாரமாக எடுத்துக் காட்டியது என்பதில் மாற்றுக் கருத்து இருக்கவே முடியாது. தொழிலாளர்கள் அரசாங்கத்துடன் அல்லது முதலாளிமார் களுடன் நேரடியாக மோதும் சந்தர்ப்பங் களில் அதிகார வர்க்கத்தினர் இப்போராட்டங் களை இரும்பு கரங் கொண்டு நசுக்கா திருக்கும் வகையில் சூழ்நிலைகளை ஏற் படுத்தியவர்கள் சமதர்ம வாதிகளே. 40, 50, 60களில் அவர்களே தொழிலாளர்களின் நலனுக்கு நடத்திய போராட்டங்களுக்கு நாம் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். இன்று தொழில்புரிவோர் அனைவருமே அனுபவித்து வரும் உரிமை களுக்கு அடித்தளமிட்டவர்கள் இவர்களே.

தொழிலாளர்களுக்காக போராடியவர்கள் அவர்கள். சாதி, சமய, வகுப்பு பேதங்கவாதி

களின் பங்களிப்பு ஆய்வுக்குரியதாகின்றது. தோட்ட தொழிலாளர்கள் உரிமை போராட்ட வரலாற்றில் பொது உடமை ஆனால் நடைபெற்று முடிந்த ஆய்வு மாநாட்டில் இக்கருப்பொருளை கொண்ட எந்த ஆய்வுக் கட்டுரையும் சமர்ப்பிக்கப் படவில்லை என்பது வருத்தத்திற்குரியது. தொழிலாளர் போராட்டங் களில் கம்யூனிசத்தின் பங்கு என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரை என்றில்லா விட்டாலும் கருத்துரையோ அல்லது சொற் பொழிவோ இடம்பெற வகை செய்யப் பட்டிருக்க வேண்டும்.

இதனால் தான் இந்த இடைவெளியை இட்டு நிரப்ப சிலர் முயன்றார்கள். இலங்கையின் மலையக தமிழ் மக்களின் கல்வி நிலை வளர்ச்சியும் போக்கும் என்ற தலைப்பில் இங்கு கொழும்பு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. எம்.எஸ். மூக்கையாவும் ''மலையக தமிழரின் கல்வி வளர்ச்சியில் சவால்களும் எதிர்ப்பார்ப்பு களும்'' என்ற தலைப்பில் பேராசிரியர் சந்திரசேகரனும் இரு ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்திருந்தார். இந்த இரு ஆய்வு கட்டுரைகளுமே மலையக கல்வி, அதன் வளர்ச்சி என்ற ஒரே பொருளையே கருவாக கொண்டு இருந்தன. இங்கு சமர்ப்பிக்கப்பட்ட வேறு சில கட்டுரைகளும் ஒன்றை ஒன்று தொட்டு செல்வதாக அமைந்திருந்தன. இவ்வாறான நிலை தவிர்க்கப்பட்டு வெவ்வேறான கருப்பொருட்களில் ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பிக்க செய்திருக்கலாம். ஒரே மாதிரியான இரு கட்டுரைகளை தவிர்த்து பொது உடமை கோட்பாடு மலையக மக்களின் போராட்டங்களில் வகித்த பங்கு பற்றிய ஆய்வு கட்டுரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கலாம்.

மலையகத்தில் நிலவும் சாதி அமைப்பு தற்போது வலுவிழந்து வந்தாலும் அதை முற்றிலும் ஒழித்து கட்ட முடியும் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் பெரும் பாலான மலையக தமிழ் மக்கள் இந்துக்கள். சாதி அமைப்பு இந்து சமயத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்று. இன்னும் சில இந்து சமய சடங்குகளை நிறைவேற்று வதற்கு சில வகுப்பினரை துணைக்கு அழைக்க வேண்டி இருக்கிறது. இவை சாதி பிரிவுகளின் அவசியத்தையே வலியுறுத்து வதால் தோட்ட தொழிலாளர்கள் தோட்ட கைத்தொழில் துறையில் இருக்கும் வரை இன்றைய சமூக கட்டமைப்பு சிதறாமல் இப்படியே இருக்கும் வரை.

சாதி அமைப்பு முற்றிலும் தகர்க்க படுவது சாத்தியம் அல்ல ஆனால் மொட்டை வெள்ளார் போன்ற ஓரளவு வசதி கொண்ட பிரிவினரை தவிர ஏனைய வகுப்பினரிடையே பொதுபடையான ஒரு தளர்ச்சி காணப்படு கின்றது. காதல் திருமணங்களும், கலப்பு மனங்களும் இம்மக்களின் அன்றாட வாழ்வில் சாதியின் முக்கியத்துவத்தை குறைத்து வருகின்றன. பெருந்தோட்டத்தை விட்டு வெளியேறுவோர் இடையேயும் சாதி உயர்வுகள் மங்கத் தொடங்கி இருக்கின்றன. மலையக தமிழர் தமிழர் அல்லாத சமூகத்தினரிடையே வாழவும் அவர்களோடு பழகவும் வேண்டிய சூழல் இருப்பதாலும் அவர்களிடையே சாதி உயர்வுகள் மழுங் கடிக்கப்பட்டு வருகின்றன.

பண்டைய சமூக அமைப்பின் கீழ் அக்கால சூழ்நிலைக்கேற்ப வடிவமைக்கப் பட்ட தொழில் ரீதியான கட்டமைப்பே சாதி முறையாகும். பண்டைய இலக்கிய நூல்களில் சாதி முறை பற்றிய குறிப்புகள் இல்லாததால் தமிழ் மக்களிடையே சாதி கட்டமைப்பு இடைக்காலத்தில் தான் ஏற்பட்டிருக்க வேண்டும். இக்கட்டமைப்பில் ஆண்டான் அடிமை என்ற ரீதியாக சமூக உறவுகள் அமைவதாலும் வருமானம், வாய்ப்புகள் என்ற வகையில் உயர் தட்டு களில் இருப்பவர்கள் அதிக பயன் பெறுவதினாலும் சாதி முறை உயர் மட்டத்

தினருக்கு வசதியாக இருந்தது இதனால் இது தொடர்ந்து கடுமையாக அமுல் செய்யப்படலாயிற்று.

நூற்றாண்டுகளாக தமிழர்களிடையே சாதி கட்டமைப்பு தொடர்ச்சியாக பேணப் பட்டு வந்ததற்கு இந்த சமூக பொருளாதார பலன்களே காரணமாக இருந்தனவே தவிர வேறு எந்த நியாயமும் காரணமாக இருக்க வில்லை.

அப்படியானால் ''குளத்தேவையாகுமாம் குணம்'' என்று சொல்கிறார்களே அதில் உண்மை இல்லையா? என்று சிலர் கேட்கலாம்.

நீண்ட காலமாக ஒரு மக்கள் கூட்டத் தினரை கீழ்ச் சாதி என்று சொல்லி சமூக பொருளாதார ரீதியாக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்புகளை மறுதலித்து வந்தால், அம்மக்கள் பிறப்பிலேயே உயர் சாதியினராக இருந்தாலும் கூட வறுமைக்கும் பாமரத்தனத்துக்கு தொடர்ந்து முகம் கொடுக்கும் போது, அவர்களிடையே வழக்கங்களும் பண்புகளும் நாளடைவில் மறைந்து போய் விடுவது தவிர்க்க முடியாது. இன்று சாதி கட்டமைப்பு தகர்ந்து தொழில் ரீதியான புதிய கட்டமைப்பு உருவாகி வருகிறது என்று பார்த்தோம். இதை சமூக வகுப்பு முறை என்றும் ஆங்கிலத்தில் SOCIAL CLASS SYSTEM என்று அழைக்கிறார். சந்திரபோஸ் வேலை வழங்குவோர் வேலை செய்வோர் என்பதே புதிய சமூக சாதி அமைப்பு இந்த சாதி அமைப்பின் உயர் சாதி பிராமணர்களாக இருந்து செயற்படுபவர்கள் அரசியல் வாதிகளும் தொழிலதிபர்களும் மதகுருக் களும் தான். பல நூற்றாண்டுகளாக உயர் சாதியினருக்கு எதிராக தாழ்ந்த வகுப்பினர் நடத்தி வந்த அதே போராட்டங்களையும், கயிறிழுப்புகளையும் இப்போது வேலை வழங்குவோருக்கும் அவர்களின் பின்னணியில் சக்தியாக விளங்கும் அரசியல் வாதி களுக்கும் எதிராக தொழில் செய்வோர் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்)

# மஞ்சரிக்கு நன்றி

மணிவிழா கண்ட முற்போக்கு எழுத்தாளர் என். சோமகாந்தனைப் பாராட்டும் வகையில் கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் மலையக கலை இலக்கிய பேரவை ஏற்பாடு செய்திருந்த பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைசசர் வீ. புத்திரசிகாமணி வாரமஞ்சரியில் தொடராக வெளிவந்து கொண்டிருக்கும் மலையகத் தமிழாராய்ச்சி கட்டுரைத் தொடருக்கு பாராட்டு தெரிவித்தார். அவர் ஆற்றிய உரையின் அப்பகுதி கீழே தரப்படுகிறது. மலையக தமிழாராய்ச்சி மாநாடு எப்படி நடந்தது என ''தினகரன்'' பத்திரிகை கட்டுரை எழுதி வருகிறது. நம் மாநாடு நிகழ்வுகள் புத்தகமாக வரவேண்டும் என நினைத்தோம். அதனையே ''தினகரன்'' இவ்வாரம் சுட்டி காட்டுகிறது. ''தினகரன்'' பத்திரிகைக்கு நான் நன்றி கூறுகிறேன். மலையக தமிழாராய்ச்சி நிறுவனம் அமைக்க கட்டிடம் கட்ட நிலம் தேடிவிட்டேன். இனி அத்திவாரம் போடலாம்.

(சபையில் நீண்ட நேர கரகோஷம்)

# சாதி அமைப்பு மலையகத்தில் மறைந்துவிடும்

கடந்த வார கட்டுரையில் குறிப்பிடப் பட்டிருந்ததை போல் மதுரை, திருநெல்வேலி, தஞ்சை, திருச்சி, சென்னை போன்ற பிரதேசங் களில் இருந்து மலையகத் தோட்டங்களுக்கு அழைத்து வரப்பட்ட தமிழர்களின் பெரும் பாலானோர், வர்ணாசிரம தர்மப்படி பார்த்தால், கீழ்ச்சாதியினரே! சூத்திரர் பிரிவின் கீழ்மட்டத்த வரான வலையவர்கள் என்று இவர்களை அழைக்கலாம்.

ஒரு தோட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியினர் கூடுதலாக கூடியிருந்தால் அவர் களில் ஒருவரே தலைமை கங்காணி யாகவும், கணக்குப் பிள்ளையாகவும், ஆங்கிலக் கல்வி கற்றிருந்தால் வாத்தியா ராகவும், கிளாக்கர் மற்றும் கண்டக்டராகவும் பணியாற்ற தோட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்திருந்தது. வேலை ஒழுங்காக நடை பெற வேண்டும் என்பதால் தான் இந்த ஏற்பாடு.

நாடார் இனத்தவர்கள் தோட்ட கிளாக்கர் மாராகவும், ஆசிரியராகவும், தொழிற்சாலை அதிகாரியாகவும் நியமனம் பெற்றனர். கிறிஸ்தவர்களான பரவர்களும் இப் பதவி களை வகித்தனர்.

தொழிலாளர் குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வகையில் தோட்டங்களில் கடைகள் திறக்கப்பட்டன. நாடார்களும் வெள்ளாளர்மாரும் இக் கடை களை ஆரம்பித்தனர்.

இவர்களுக்கு மேலே மொத்தமாக பொருட்களை வழங்க செட்டியார்களும், நாடார்களும் முன் வந்தனர். பெரும்பாலும் நாட்டுக் கோட்டைச் செட்டி பண கொடுக்கல் வாங்கல்களையும் நகை அடவு பிடிக்கும் தொழிலையும் செய்து வந்தனர்.

தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் வெளியே செல்லக் கூடாது என வெள்ளையர் நிர்வாகம் விரும்பியது இதனால் முடி திருத்தும், சலவை செய்யும் சாதியினரும் தோட்ட வேலையில் ஈடுபடுத்தப் பட்டனர். திருமணம், காதணி விழா, பூப்பெய்தல், பிறந்த நாள், மரணம், சாத்திரம் சடங்குகள் என்று மங்கள காரியங்கள் மூலம் இவர்கள் மேலதிக வருமானம் பெற்றதோடு தோட்டத் தொழிலாளர் வாழ்வில் முக்கியத்துவத்தையும் பெற்றனர்.

பறை அடித்தல், குழி வெட்டுதல், கேதஞ் சொல்லல், சுத்திகரிப்பு போன்ற காரியங் களைச் செய்தோரும் இம்மக்கள் வாழ்வில் தவிர்க்க முடியாத வகையில் அங்கம் வகித்தனர்.

தோட்டங்களிலுள்ள முத்துமாரியம்மன், சுப்பிரமணியர் ஆலயங்களில் நித்திய பூசை களை செய்வதற்கு பெரும்பாலும் வள்ளுவர் இனத்தோர் நியமனம் செய்யப்பட்டனர். ஆலயங்களில் பண்டாரங்களாகவும் பணி யாற்றி வந்தனர்.

பெரும்பாலும் தொடர் லயங்களிலும் தோட்டங்களிலும் பெரும் பான்மையாக எந்த வகுப்பைச் சார்ந்தோர் குடியிருக் கிறார்களோ அந்த வகுப்பை சேர்ந்தோரே பூசகர்களாக நியமனம் பெற்றனர். சாதி ரீதியான சுமுக நிலைக்கு இது வழி வகுத்தது.

இதே சமயம் வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருந்த வகுப்பினர் மெல்ல, மெல்ல நகர் புறங்களில் குடியேற ஆரம்பித்தனர். தமிழகத்தில் இருந்து குடிபெயர்ந்து தோட்டங்களில் நிரந்தரமாக வேலை செய்யத் தொடங்கிய காலம் முதல் இச் சாதியமைப்பு அப்படியே கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. 1950ம் ஆண்டுகளின் பின்னர் இந்தக் கட்டமைப்பில் கீறல் விழ ஆரம்பித்தது. கல்வி வளர்ச்சியை இதற்கு பிரதான காரணமாகச் சொல்லலாம். தி.மு.க. வின் பாதிப்பையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

மலையகத்தில் கல்வி வளர்ச்சியைத் தொடர்ந்து குலத் தொழில் செய்து வந்தவர்கள் மத்தியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. படித்த இளைஞர்கள் தமது பெற்றோர் குலத் தொழிலை செய்வதை விரும்பவில்லை.

இதனால் இன்று இந்து மத ஆச்சாரப்படி சடங்குகளை செய்து முடிக்க ஆட்களை தேட வேண்டிய நிலை தோட்டங்களில் ஏற்பட்டுள்ளது.

தொழிற்சங்க அரசியல் துறையில் மேல் சாதி என்று சொல்லப்படுவோரின் ஆதிக்கம் மிக குறைவாகவே உள்ளது. கல்வி ஏற்படுத்திய மறுமலர்ச்சியால் தாழ்ந்த வகுப்புகளைச் சேர்ந்த இளைஞர்கள் இன்று ஆசிரியர்களாகவும் நிர்வாக அதிகாரிகளாகவும் அதிபர்கள், அரச ஊழியர் வர்த்தகர்களாகவும் விளங்கி வருகிறார்கள். வேளாண்மையில் சிறந்தவர்களாகவும் மலையகத்தவர்களை சுட்டிக் காட்டக் கூடியதாக இருக்கிறது. மொத்தத்தில் சொல்வதானால் இன்னும் 10, 12 ஆண்டுகளில் சாதி அமைப்புக்கு முற்றாக சாவு மணி அடிக்கப்பட்டுவிடும். ஏனெனில் இச்சாதி அமைப்பை கட்டிக்காக்கும் வல்லமை கொண்ட ஒரு உயர் சாதி அமைப்பு மலையகத்தில் இல்லை.

- கலைவண்ணன்

ஹட்டன்

*அருள் சத்தியநாதன்*


## கோப்பி யுகத்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்து ஆய்வுகள் ஆரம்பமாக வேண்டும்

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியரான எம். சின்னத்தம்பி ஆய்வரங்கில் சமர்பித்திருந்த கட்டுரையின் தலைப்பு, 19ம் நூற்றாண்டில் புலம் பெயர்ந்த இந்தியர்களும் வெளிநாடுகளில் இந்திய சமூகங்களும் ஓர் ஒப்பிட்டு கண்ணோட்டம் என்பதாகும்.

கடந்த 300 ஆண்டுகளில் ஆபிரிக்கக் கறுப்பினத்தவர் மற்றும் இந்தியர்கள் அளவுக்கு வேறு எந்தவொரு சமூகமும் வெளிநாடுகளில் பெருந்தொகையான அளவில் புலம்பெயர்ந்து குடியமர்ந்தது கிடையாது.

இவ்வாறான குடிபெயர்வுக்குக் காரணமாக அமைந்தது. பெரும்பாலும் அன்றைய பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியே. ஆங்கிலேயர்கள் தாம் கைப்பற்றிய புதிய நாடுகளில் தமது பொளாதார நலன்களை பேணும் பொருட்டு ஆபிரிக்கர்களை கொண்டு சென்று கூடியமர்த்தினர். அமெரிக்க கண்டத்திலும் சுற்றுப் பகுதிகளிலும் ஆபிரிக்கர்கள் பெரும் தொகையான எண்ணிக்கையில் பரவி வாழ்ந்து வருவதற்கு பிரிட்டிஷ் ஆட்சியே காரணம். அதேபோல் மொரிஸியஸ், பி.ஜி., கயானா, ஆபிரிக்க நாடுகள், மலேசியா, பர்மா, சிங்கப்பூர், சூரிநாம், இலங்கை என்று பல நாடுகளில் இந்தியர்கள் பெருந்தொகையினராக காணப்படு வதற்கும் இங்கிலாந்தே காரணம். இலங்கை பர்மா மலேசியா ஆகிய நாடுகளில் இங்கிலாந்து காலணி ஆட்சியினர் பெருந்தோட்டங்களை அமைத்து அங்கெல்லாம் இந்தியர்களை குடியமர்த்துவதற்கு முன்னரே இந்நாடுகளுக்கு இந்தியர்கள் குடியேறி இருந்தனர். இந்திய கலாச்சாரம் பண்பாடு மற்றும் சமய செல்வாக்கு இந்நாடுகளில் காணப்பட்டன என்பது கவனிக்கத்தக்கது. இந்திய செல்வாக்கை இங்கெல்லாம் கொண்டு சென்றவர்கள் பெரும்பாலும் தென்னிந்தியர்களாகவும் குறிப்பாக தமிழர்களாகவும் இருந்தார்கள் என்பது இன்னும் விஷேசம் இவ்வகையில் இலங்கை இன்னும் விஷேட இடத்தை பெறுகிறது.

தென்னிந்தியர்கள் இலங்கையின் சில பகுதிகளை ஆண்டிருக்கிறார்கள். கண்டி இராச்சியமே அவர்கள் கையில் இருந்திருக்கிறது. சீதாவாக்கை இராஜதாணியில் ஆண்ட இராஜசிங்கன் இந்து மதத்தை தழுவி இந்து ஆலயங்களை அமைத்தான். சிவனொலி பாத மலையையும் இந்து தலமாக்கினான். அவன் எழுப்பிய பைராண்டி கோவிலின் சிதைவுகள் இன்னும் சீதாவாக்கையில் காணப்படுகின்றன. அவருடைய பிரதம அமைச்சராக கீவண்டி பெருமாள் என்பவர் இருந்ததாக குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது.

ஆங்கில வருகைக்கு முன்னர் இலங்கை எங்கும் தென்னிந்தியர்களின் குறிப்பாகத் தமிழர்களின் செல்வாக்கு பரவியிருந்தது. இது இப்படி இருக்க, இலங்கையின் வட பகுதியில் பண்டைய காலந்தொட்டே

தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். தனி இராச்சியமும் அவர்களுக்கு இருந்திருக் கிறது.

இந்தியர்கள் குடியேறிய ஏனைய நாடு களில் காணப்படாத இவ்விசேஷத் தன்மை இலங்கையில் மட்டும் காணப் படுகிறது. வடக்கு கிழக்கில் சுதேச குடிகளாகத் தமிழர்கள் வாழ்ந்து வரும் அதே சமயம், தென்னிந்தியர்களின் செல்வாக்கு நாட்டின் ஏனைய பகுதிகளில் நீக்கமற பரவியும் இருக்கிறது. இவற்றுக்கு அப்பால், தமிழர் களை இந்தியாவில் இருந்து அழைத்து வந்த வெள்ளையர்கள் நாட்டின் மத்திய மற்றும் தென்பகுதிகளில் அவர் களைக் குடியேற்றிச் சென்றனர்.

தமிழ் பேசும் மக்கள் முன்பாக சிங்கள பெரும்பான்மையினர் எண்ணிக்கையிலும், மொழி, கலாசார, பண்பாட்டு ரீதியாக இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டு விடலாம் என்ற சிறுபான்மையினருக்கு மட்டுமே ஏற்பட வேண்டிய பாதுகாப்பு உணர்வுடன் கூடிய பயப்பிராந்தியை இத்தகைய பின்னணி சிங்கள மக்களிடையே ஏற்படுத்தி இருக்க வேண்டும். அதையே பிரதான ஆயுதமாக அரசியல் வாதிகள் கைகளில் எடுத்துக் கொண்டார்கள். இந்த ஆயுதம் எதிர்பார்த்த தற்கு அதிகமாகவே உடனடிப் பலன் களை அரசியல்வாதிகளுக்கு அள்ளித் தரவே.

இலங்கையில் இனவாதம் அரசியல் ரீதி யாகக் கால் பதித்தது!

தென்னிலங்கை அரசியல் வாதிகள் பௌத்தத்துறவிகளின் அனுசரனையுடன் இனவாதத்தை ஒருபுறம் இவ்வாறு வளர்த் தெடுக்க, அதை எதிர்த்து வட பகுதி அரசியல்வாதிகள் வியூகம் அமைக்க.

அவற்றின் பலன்களும் பிரதிபலன்களும் நாடெங்கும் கடைவிரிக்க இன்று முழுநாடே, அனுமார்வால் தீ லங்காபுரியை எரித்தது போல இனப்பிரச்சினை என்ற தீயால் பொசுங்கிக் கொண்டிருக்கிறது.

சரி, புலம் பெயர்ந்த தமிழர்களைப் பற்றி ஆராய முற்படப் போய், வேறெங்கோ போய் விட்டோம். 1843 க்கும் 1850 க்கும் இடையே இலங்கைக்கு ஒன்பதாயிரத்து 717 தென்னிந்தி யர்கள் வந்தனர் என்றும் அவர்களில் 38 பேரே பெண்கள் (!) என்றும் ஒரு குறிப்பில் இருந்து அறிய முடிகிறது என்கிறார் பேராசிரியர் சின்னத்தம்பி, அவருடைய கட்டுரையின் பிரகாரம் தனியார், முகவர்கள் ஒழுங்கு படுத்தப்பட்ட ரீதியாக இந்திய தொழிலாளர்களை 1810ம் ஆண்டிலேயே இலங்கைக்கு அழைத்து வந்திருக்கின்றனர்.

பேராசிரியர் சமர்பித்த இவ்வாய்வுக் கட்டுரை மிகவும் பயன்மிக்கது. ஆய்வு ரீதியாக இக் கட்டுரையை நோக்கு வோருக்கு மலையகத் தமிழரின் வரலாறு தொடர்பாக வேறு பல கோணங்களிலும் ஆராய்ச்சிகளை மேற் கொள்ளத் தூண்டுவ தாக உள்ளது கடந்த இருநூறு ஆண்டு காலப் பகுதியில் தென்னிந்தியாவில் இருந்து தமிழ் மக்கள் ஆராய்ந்தால் ஒரு அருமை யான வரலாற்று நூல் தோன்ற வழி பிறக்கும்.

இங்கேதான், மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு, இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளித் தமிழர்களை சாதி, மத, அரசியல் மற்றும் தொழிற் சங்க பேதங் களுக்கு அப்பால் அரவணைத்தால் மட்டும் போதாது என்பதையும் அது.

சர்வதேச மட்டத்தில் விரிந்து தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும்.

நாடுகளையும் தன்னுடன் ஒருங்கிணைத்துக்



*இது கோப்பிக் காலத்தை சித்தரிக்கும் படம். கோப்பி பதப்படுத்தப்படும் ஆலையும் தொழிலாளர்களும்.*

கொள்ள வேண்டும் என்பதன் அவசியத் தையும் இக் கட்டுரை மீண்டும் வலியுறுத்து கிறது.

பி.ஜி. மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளில் கணிசமான அளவில் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் பெயருக்குதான் சுத்தமாக இவர்கள் அறியப் பட மாட்டார்கள். தமிழ் படிக்க வேண்டிய அவசியம் இல்லாமற் போனதும், இந்தியாவில் இருந்து வெகுதூரத்தில் இந் நாடுகள் அமைந்திருப்பதும் தான் தாய் மொழி, கலாசாரம் ஆகியவற்றைப் பேண வேண்டும் என்ற ஆர்வம் இவர்களிடையே இல்லாமற் போனதற்கான காரணம் மொரிஷியஸில் உள்ள ஒரு இந்திய வம்சாவளிப் பெண்ணின் பெயர் ''ஜெனிபர் பேயாண்டி" என்றிருக்கும் பிஜியில் ''ஆஷா மைனாவதி" என்றிருக்கும் தாம் இந்திய வம்சாவளி என்பதற்கான ஆதாரம் இவர்களைப் பொறுத்த வரை இவ்வளவு தான்?

ஆனால் இந்நாடுகளில் இந்துக் கோவில்கள் உண்டு. பெரும்பாலான தமிழர்கள் இன்னும் இந்துக்கள் தான் மேலை நாட்டினரைப்போல கவர்ச்சியாக உடை அணிகிறார்கள். என்றாலும் மதத்தையும் அதற்குறிய பழக்க வழக்கங் களையும் இன்றும் பின்பற்றி வருகிறார்கள். ஆனால் எவ்வளவு காலத்துக்கு என்பது கேள்விக்குறியே!

ஆஸ்திரேலியாவில் தமிழ்ப் பாடசாலை ஒன்றை நடத்தி வரும் மாவை நித்தி யானந்தன், இனப் பிரச்சினை காரணமாக கடந்த 15 ஆண்டுக்காலப் பகுதியில் இந்நாட்டை விட்டுப் புலம் பெயர்ந்த தமிழர் களைப் பற்றிக் குறிப்பிடுகையில், தாய் மொழியில் பரிச்சயம் மற்றும் தாய் மொழிப் பற்று வளர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்களிடையே இப்போதே உணர்த்தா விட்டால், புலம் பெயர்ந்து வாழும் தமிழ்க் குடும்பங்களின் எதிர்கால சந்ததியினர் தமிழை முற்றாக மறந்து விடுவார்கள் என்கிறார்.



*தேயிலைத் தோட்டங்களில் தொழிலாளர்களுக்கான குடியிருப்புக்களாக லயங்கள் அமைக்கப்பட்டுள்ள முறை. இன்றுவரை இம்முறையே தொடர்கின்றது.*

ஏற்கனவே நடந்து முடிந்துவிட்ட ஒன்றில் இருந்து பாடம் கற்றுக் கொண்டு அது மீண்டும் நடைபெறாதிருக்கும் வகையில் காரியங்கள் ஆற்றப்பட வேண்டும் என்பதே இதன் பொருள்.

பெருந்தோட்டங்களில் வேலை செய்வதற்காக பல்வேறு நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட தமிழர்களின் வரலாறு, பொருளாதாரப் பின்னணி, இன்றைய நிலை ஆகியவற்றை அவர்கள் வாயாலே அறிந்து கொள்ளும் வகையில் இந்நாடுகளில் கல்விமான்களாக, ஆய்வாளர்களாகத் திகழும் தமிழ்ப் பிரமுகர்களை அழைத்து இனிவரும் மாநாடுகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கச் செய்யலாம்.

இந்த யோசனையின் சாத்தியம் பற்றி நாம் ஆராய வேண்டும். முயற்சித்தால் பல கல்விமான்களையும் புலம் பெயர்ந்த தமிழர் வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்களையும் சுலபமாக மலேசியா, பிஜி தென்னாபிரிக்கா மொரிஷியஸ், உகண்டா, பர்மா தான்சானியா ஆகிய நாடுகளில் அடையாளம் காணக் கூடியதாக இருக்கும்.

பேராசிரியர் சின்னத்தம்பி, தான் எடுத்துக் கொண்ட பொருளை விரிவாகவே ஆராய்ந்திருக்கிறார். ஆனால் அவரே தன் கட்டுரையின் முடிவில் ஒப்புக் கொண்டிருப்பதைப் போல இது சில ஆண்டுகளுக்கு முன்னால் தயாரிக்கப்பட்ட கட்டுரையாக இருப்பதால், புதிய தகவல்கள் கட்டுரையில் இல்லை. அவர் கூறியிருப்பது போலவே, எடுத்துக் கொள்ளப்பட்ட பொருள் மிகப் பெரியது. ஆழமானது. பலராலும் வெவ்வேறு கோணங்களில் ஆய்வுக்கு உட்படுத்தக் கூடியது.

1834ம் ஆண்டு இங்கிலாந்து அடிமை ஊழியத்தை இல்லாமற் செய்தது. பிறகு மாற்றீடாக அசீனரும் பெருந்தோட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டனர். இலங்கையிலும் சீனத்

தொழிலாளர்கள் தோட்டங்களில் அமர்த்தப் பட்டனர். ஆனால் எதிர்பார்க்கப்பட்ட பலன்கள் கிட்டாததாலேயே, ஆங்கிலேயரின் கவனம் தென்னிந்தியத் தமிழர் பால் சென்றது.

ஏற்கனவே மொரிஷியஸ் தீவுக்கு இந்தியர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந் தனர். அங்கே கரும்புத் தோட்டங்களில் வேலையில் ஈடுபடுத்தப்பட்டனர். பலன் திருப்திகரமாக இருந்தது. இந்தியர்கள் பெரு மளவு வேலையை குறைந்த செலவில் குறுகிய காலத்தில் செய்து முடித்தனர். உடனே மாற்றீடு ஒன்று கிடைத்த மகிழ்ச்சியில் தென்னிந்தி யர்களை தொலை தூர நாடுகளுக்கு அழைத்துச் சென்று குடி யேற்றும் பணி ஆரம்பமானது.

இவர்கள் கடன் ஒப்பந்தம், கங்காணி முறை ஆகிய இரு வழிகளில் வெளிநாடு களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கடன் ஒப்பந்த முறை என்பது இன்றைய Contract அடிப்படையில் மத்திய கிழக்கு நாடு களுக்கு தொழில் தேடிப் போவதற்கு ஒப்பானது. ஒப்பந்த காலம் முடிவுற்றதும் அவர்கள் நாடு திரும்பினர். சிலர் நாடு திரும்பாமல் சென்ற நாட்டிலேயே தங்கி விட்டனர்.

இலங்கைக்கு கங்காணி முறையின் கீழ் தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டது தெரிந்த விடயம். இந்தக் கங்காணிகளைப் பற்றிப் நிறைய தகவல்கள், கவிதைகள், நாட்டார் பாடல்கள், கதைகள், உண்மைச் சம்பவங்கள் உள்ளன. இந்தக் கங்காணி மாரைத் தனியொரு சாதியாகவே கருதலாம். கங்காணிமாரைப் பற்றிய இவ் விடயங் களைத் தொகுத்தால் வரலாற்று அடிப்படை யிலான சுவையான ஒரு நூல் கிடைக்கும் என்பது ஒரு புறமிருக்க மலையகத்தைப் பற்றிய சிறந்த ஒரு ஆவணத் தொகுப் பாகவும் அது அமையும்.

இம் மாநாடு தொடர்பாக மலையக ஆவண காப்பகம் ஒன்றும் நூல் நிலையம் ஒன்றும் அமைக்கப்படுவது பற்றி பேசப் பட்டிருக்கிறது. இது அருமையான யோசனை மட்டுமல்ல இன்றி அமையாதது மாகும். இப்படி ஒரு அமைப்பு ஏற்படுத்தப் படுமானால், பல ஆய்வுகளை அங்கே மேற் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஏனெனில் மலையக வரலாறு எனும் போது பெரும் பாலும் தேயிலைத் தோட்டத்தில் தான் கதையே ஆரம்பிக்கிறது என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், கண்டி ராஜதானி காலத்தில் இருந்தே மலையகத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் செல்வாக்கு செலுத்தி வந்திருக்கிறார்கள். ஆய்வுகள் இங்கிருந்து தான் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

கோப்பி யுகத்தப் பற்றி எவருமே பேசு வதில்லை. பல வரலாற்று உண்மைகள் அங்கே புதைந்துள்ளன. அவை மங்கி மறைந்து விடக்கூடாது. அக்காலத்தில் காடழிப்புக்கும், கோப்பி நடுகைக்கும் பின்னர் அறுவடைக்குமென அவ்வப்போது தமிழர்கள் தென்னாட்டில் இருந்து அழைத்து வரப் பட்டனர். சிறு பகுதியினர் இங்கேயே தங்கியிருக்க பெரும்பாலானோர் வேலை முடிந்ததும் இந்தியா திரும்பி விடுவது வழக்கம். இக்காலம் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்

(தொடரும்)

## விரிவான ஆய்வின் அவசியத்தை வலியுறுத்தும் அம்பலவாணரின் ஆய்வுக் கட்டுரை

# மலை முகடுகளில் மதுரத் தமிழ் முழக்கம்

*அருள் சத்தியநாதன்*

கடந்த வாரக் கட்டுரையின் தலைப்பு, மலையகத் தமிழரின் வரலாறு எப்போது ஆரம்பமாகிறது? என்பதைப் பற்றியதாக இருந்தது. அது இந்த வாரத்துக்கு அளிக்கப் பட்டிருக்க வேண்டிய தலைப்பு, ஏனெனில் தமிழாராய்ச்சி மாநாட்டில் பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரை மலையக தமிழரின் வரலாறு எப்போது ஆரம்பமாகிறது? என்ற பொருளை பற்றியதாகவே இருந்தது.





மலையக மக்கள் என்று சொல்கையில் அவர்களில் எழுபது சதவீதமானோர் தோட்டங் களைச் சார்ந்தவர்களாக இருப்பதால் ஆங்கி லேயரால் தேயிலைச் செய்கைக்காக அழைத்து வரப்பட்டவர்களே மலையகத் தமிழர்கள் என்று அர்த்தப்படுத்தப்படுகிறது.

ஆனால் தென்னிந்திய தொடர்புடைய தமிழ் பேசும் மக்கள் நாட்டின் மத்திய மலைப்பகுதிகளில் குடியேறி வாழத் தொடங்கியது ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்த பின்னரா அல்லது அதற்கு முன்னரே இருந்தா?

இப்படி ஒரு சுவாரசியமான அதே சமயம் மலையக மக்களின் அடையாளத்தை நிலை நிறுத்தக் கூடிய கேள்வியை எழுப்புகிறார் பேராசிரியர் அம்பலவாணர் சிவராஜா.

1824 - 1831 காலப் பகுதியில் எட்வர், பான்ஸ் என்ற தேசாதிபதியும் யோர்க் என்ற தோட்ட துரையும் தென்னிந்திய தொழி லாளர்களை அழைத்து வந்து பெருந்தோட்ட வேலைகளில் ஈடுபடுத்தினர் என்று பேரா சிரியர் பேர்ட்ரமபஸ்தியாம்பிள்ளை குறிப்பிடு கிறார்.



திரு. எஸ். நடேசன் எழுதிய இலங்கையில் மலைநாட்டுத் தமிழ் மக்களின் வரலாறு என்ற நூலில் இந்தியத் தொழிலாளரை சேர்த்துக் கொள்வது 1838ம் ஆண்டிலேயே ஆரம்பித்து விட்டது. குறிப்பிடப்பட்டுள்ளது.

''டச்சுக்காரர்கள் இந்தியாவையும் இலங்கையையும் ஆட்சி செய்த காலத்தில் முதன் முதலாக இவர்கள் தான் பத்திராயிரம் தமிழ்த் தொழிலாளர்களை கருக மரத்தை (கருக பட்டை) பயிர் செய்து அதன் பட்டையை உரித்து பாடம் பண்ணுவதற்காக கொண்டு வந்தார்கள்'' என்ற ஒரு தகவலை சீ.வி. வேலுப்பிள்ளை தமது நாடற்றவர் என்ற நூலில் தருகிறார்.


திருமதி. குமாரி ஜயவர்தன எழுதியுள்ள குறிப்பின் பிரகாரம்

1910ம் ஆண்டில் புகையிரத சேவையில் இந்தியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை புகையிரத ஊழியர்கள் எதிர்த்துள்ளதோடு, 1913ம் ஆண்டு நடைபெற்ற புகையிரத சேவை ஆணைக்குழுவின் விசாரணையில் சிங்களவர் மற்றும் பறங்கியருக்கு அப்பால் இந்தியத தமிழருக்கும் மலையாளிகளுக்கும் நியமனத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதன் பிரகாரம் 1913தம் ஆண்டுக்கு முன்னரே தமிழர்கள் இலங்கையில் தொழிலாளர்களாக தொழில்களில் ஈடுபடுத்தப் பட்டிருந்தமை தெளிவாகிறது.

1841 - 1844ம் ஆண்டு காலப்பகுதியில் அரசின் ஆதரவுடன் தோட்ட உரிமையாளர்கள் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ஏக்கர் காணியை வாங்கிக் கொண்டனர் இத் தோட்டங்களில் வேலை செய்ய சிங்களத் தொழிலாளர்கள் பின் நின்றதாலேயே தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்களை ஆங்கிலேயேர் இங்கு வரவழைக்க வேண்டியிருந்ததாக பேராசிரியர் சோ. சந்திரசேகரன் இலங்கை இந்திய வரலாறு என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

ஆனால், ஆங்கிலேயர்கள் 1928ம் ஆண்டிலேயே இந்தியத் தொழிலாளரை இலங்கைக்கு அழைத்து வந்தனர். என்றும் இங்கிருந்து தான் மலையகத் தமிழ் மக்களின் வரலாறு ஆரம்பமாகிறது என்றும் சிலர் தெரிவிக்கின்றனர்.



**கலாநிதி அம்பலவாணர் சிவராசா**

அதாவது மலையக தமிழர்களின் வரலாறு 69 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பமாகிறது என்பதே இதன் பொருளாகிறது.

இந்தக் கற்பனை வாதத்தை மறுத்துரைக்கும் வகையில் தமது ஆய்வுக் கட்டுரையில் பேராசிரியர் அம்பலவானர் சிவராஜா மேற்சொன்ன ஆதாரங்களை எடுத்துவைக்கின்றார்.

இக் கட்டுரையில் வரலாறு என்றால்

என்ன என்பதை விளக்க வரும் பேராசிரியர், திரு. மா. செ. மூக்கையா எழுதிய இன்றைய மலையகம் என்ற நூலுருக்கு அமைச்சரும். இ.தொ.கா. வின் தலைவருமான எஸ். தொண்டமான் அளித்த முகவுரையின் ஒரு பகுதியைத் தருகிறார். ஒருவர் தமது இனத்தைப் பற்றி அல்லது தான் வாழும் பிரதேசத்தைப் பற்றிய வரலாற்றை ஏன் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை அமைச்சரின் வரிகள் தெள்ளத் தெளி வாகவும் நறுக்குத் தெறித்தாற் போலவும் மிகச் சுருக்கமாகவும் குறிப்பிட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது.

''ஒரு சமுதாயம் தன்னைத் தானே சுதாகரித்துக் கொண்டு தன் நிறைகளையும் குறைகளையும் உணர்ந்து கொண்டு, வாழ்க்கையிலும் அந்தஸ்திலும் உயர் வதற்கு தனது இன்றைய நிலையையும் கடந்த கால வரலாற்றையும் ஆழமாக அறிந்திருப்பது அவசியமாகும். ''தமது பூர்வீக சரித்திரத்தை நன்கு தெரிந்து கொண்டால் தான் எதிர்காலத்தில் நாம் எப்படித் திட்டமிட்டு முன்னேறலாம் என்பதை நிர்ணயிக்க முடியும்."

மலையக தமிழாராய்ச்சி மாநாடு ஏன் அவசியம்? அதன் செயற்பாடுகள் எவ்வாறான வையாக இருக்க வேண்டும்? அதனால் பெறப்படும் பலன்கள் யாவை? என்ற கேள்வி களுக்கெல்லாம் மேற்படி வாசகங்கள் விடை பகர்வனவாய் அமைந்துள்ளன. இம் மாநாடு ஒரு வெட்டி வேலை: வீண் செலவு என்று விமர்சிப்பவர்களுக்கு இது நல்லதொரு பதிலாகவும் அமைகிறது. இம்மாநாடு தொடர்ந்து நடைபெற வேண்டும். என்று, கருதுபவர்களுக்கு ''டொனிக்'' ஆகவும் இருக்கிறது என்றால் மிகையல்ல.

பேராசிரியர் சிவராஜா இக்கட்டுரையில், மலையக மக்களின் வரலாறு இந்த ஆண்டில் இருந்து தான் ஆரம்பமாகிறது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்ல வர வில்லை.

1920களில் கோப்பித் தோட்டங்களில் வேலை செய்யவென அழைத்து வரப்பட்ட தொழிலாளர்களுடன் இந்த வரலாறு ஆரம்ப மாகிறதா? இல்லையேல் கறுவா உரிப்பதற் கென டச்சுகர்காரர்களால் தமிழர்கள் அழைத்து வரப்பட்டதோடு ஆரம்பிக்கிறதா? ரயில் சேவை வேலைகளுக்கென இங்கு வந்த தமிழ்த் தொழிலாளர்களுடன் மலையக வரலாறு ஆரம்பமாகிறதா, செட்டியார் வருகையோடு ஆரம்பிக்கிறதா? இல்லை யேல் கண்டி இராஜதானியை ஆண்ட நாயக்க மன்னர்கள் காலத்தில் அப்பகுதியில் குடியேறி தென்னிந்தியர் களோடு அல்லது அவ்வப்போது சிங்கள மன்னர்களுக்காக போரிட வந்து இங்கே தங்கி விட்ட தமிழர்களோடு இவ் வரலாறு ஆரம்பிக்கிறது. என்று கொள்ள முடியுமா? என்று தனது கட்டுரையின் முடிவில் கேள்வி எழுப்பும் பேராசிரியர், மலையகத் தென்னிந்திய வம்சாவளியினரின் வரலாறு எங்கிருந்து ஆரம்பமாகிறது என்பதைக் கண்டறிய ஆய்வுகள் நடத்தப்பட வேண்டியது அவசியம் என்கிறார். அத்தகைய ஆய்வுக்கு அடித்தள மிடும் வகை யிலேயே இக்கட்டுரை அமைக்கப் பட்டிருப்ப தாகவும் குறிப்பிடுகிறார்.

ஆம் இது பரந்த அதே சமயம் ஆழமான ஒரு விடயம், மலையகத் தமிழர் என்ற பதம், மத்திய, ஊவா மாகாணங்களின் தோட்டங்களில் வாழும் மக்களை மட்டும்

குறிப்பிடவில்லை. தாழ்ந்த பிரதேச தோட்டங் களிலும் நகர, கிராமப்புறங்களிலும் வாழும் இந்திய வம்சாவளியினர் அனைவரையும் இப்பதம் சுட்டுகிறது. டச்சுக் காலத்திலும் அதற்கு முன்னரும் இலங்கை வந்தவர் களையும் 1930 ஆண்டுக்குப் பின்னர் இங்கு வந்து குடியேறிவர்களையும் இது குறிக்கிறது. இப்படி பல்வேறு கட்டங்களில் இங்கு வந்து குடியேறி இருப்பதால், மலையக மக்களின் வரலாற்றை ஒழுங்குபடுத்தி எழுதும் போது அதை எங்கே ஆரம்பிப்பது என்ற கேள்வி எழவே செய்யும் என்பதால், அம்பலவாணர் சொல்வது போல, இது ஆராய்ந்து முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்றே. தனது கட்டுரையில் முடிவில் எது எப்படிப் போனாலும் மலையக மக்களின் வரலாறு 1928ம் ஆண்டில் ஆரம்ப மாகவில்லை என்பது மட்டும் நிச்சயம் என்கிறார்!

இது ஒரு முக்கியமான அம்சமாக இருப்பதால் அடுத்து வரும் ஆய்வரங்கு களில் இவ்விடயத்தின் மீது தொடர்ந்தும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட வேண்டியது அவசியம்.

ஏனெனில் மலையக மக்களை பற்றிய பல தவறான அபிப்பிராயங்கள் நிலவி வருகின்றன. இச் சமூகத்துக்கென ஆராய்ந்து முறையாக எழுதப்பட்ட வரலாறு இல்லாத தாலேயே விரும்பியமாதிரி அபிப் பிராயங் களையும் கோட்பாடுகளையும் உருவாக்கி கொள்ள முடிகிறது.

(தொடரும்)

# மலையகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு கல்வியே உந்து சக்தி!


மலையகத் தமிழ் மக்கள் தமது வரலாற்றை அறிந்து, தமது அடையாளத்தைப் பேண வேண்டும் என இம் மாநாட்டில வலியுறுத்தப் பட்டது.

மலையக இந்திய வம்சாவளியினர் இப்போதும் செரிவாக தோட்டப் பகுதிகளில் காணப்படுவதற்கு, குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் செறிந்து காணப்படுதவற்கு இவர்களில் பெருமைபான்மை இன்னும் தோட்டங்களில் தொழிலாளர்களாக வாழ்ந்து வருவதே முக்கிய காரணம்.

தென்னிந்தியாவிலிருந்து கடந்த இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் பல நாடுகளுக்குத் தொழில் நிமித்தம் புலம் பெயர்ந்த மக்க ளோடு ஒப்பிடும் போது, கல்வியறிவிலும், பொருளாதார நிலையிலும் சமூக அந்தஸ் திலும் இன்னும் கீழ் மட்டத்தில் இருப்போர் இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினரே.

ஏனைய நாடுகளைச் சேர்ந்தோர் பெருந் தோட்டத்துறையில் இருந்து எப்போதோ விடுபட்டுவிட்டனர். அந்நாடுகளில் குடியேறிய தமிழர்களின சந்ததியினர் கல்வியிலும் பொருளாதாரத்திலும் எவ்வளவோ முன்னேறி விட்டனர் என்பதை எல்லாம் இக்கட்டுரையின் முன்னைய அத்தியாயங்களில் பார்த்தோம்.

அதே சமயம் அவர்கள் தமது மொழி யையும் கலாசாரத்தையும் இதன் பொருட்டு தியாகம் செய்ய நேரிட்டது. என்பதையும் அவ்வாறே இங்கும் மலையகத்தவர் தியாகம் செய்திருந்தால் தமது அடையாளங்களை




இழக்கச் சம்மதித்திருந்தால் இன்று அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருக்க வேண்டிய அவசியம் நேர்ந் திருக்காது என்பதையும் பாத்தோம்.

இலங்கையின இந்திய வம்சாவளியினர் தமது அடையாளத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் அதே சமயம் தமது உரிமை களையும் வென்றெடுக்க வேண்டியிருக்கிறது அதற்காகப் போராடவும் வேண்டியிருக்கிறது.

ஏனைய நாட்டுத் தமிழர்கள் சிதறிப் போய், தமது அடையாளங்களையும் வேர் களையும் இழந்தது போல இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினருக்கும் நிகழாதிருக்க வேண்டுமானால்,

அவர்கள் தொடர்ந்தும் செறிந்து வாழ வேண்டியது அவசியமாகிறது.

ஆனால் அவர்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் அவர்களுக்கு சொந்த காணியோ வீடுகளோ பெரும்பாலும் இல்லை. பெரும் பான்மையானோர் அதே லயங்களில் தான் வாழ்கிறார்கள். இன்றைய நிலவரப்படி அவர்கள் தமக்கென ஒரு மண் குடிசையோ அல்லது சமையலறையோ அமைத்துக் கொள்ளக் கூட உரிமையற்றவர்களாக இருக் கிறார்கள்.

இந்த அடிப்படையில் பார்க்கும் போது, இச் செறிவு தற்காலிகமானது என்றே தோன்றுகின்றது. தோட்டங்களைச் சுற்றி யுள்ள பகுதிகளில் காடுகளும் பயிர் நிலங் களும், வீடுகளாகவும் கிராமங்களாகவும் மாற்றப்பட்டு காணியுடன் கூடிய குடியிருப் புகள் உருவாகி வரும் போது, சொந்தக் காணியோ வீடோ இல்லாமல் நாம் செறி வாக இப்பிரதேசங்களில் வாழ்கிறோம் என்று பீற்றிக் கொள்வதில் எந்த அர்த்தமும் இல்லை.

சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய மாகாணத்தைத் தவிர்ந்த ஊவா, சப்பிரகமுவ, தென் மற்றும் மேல் மாகாணங் களிலும் இந்திய வம்சாவளியினர் செறிவாக த்தான் வாழ்ந்திருந்தனர். தோட்டங்களுக்கு அப்பால் அவர்களுக்கு வேர்ப் பிடிப்பே கிடையாது என்பதால், பெரும்பாலும் பொரு ளாதாரக் காரணங்கள் நிமித்தம் இந்தியாவுக்கும், நகர்ப்புறங்களுக்கும், நாட்டின் பல்வேறு பாகங் களுக்கும் அவர்கள் குடிபெயர நேர்ந்தது.

மலையகத் தமிழர்கள் செறிந்து வாழும்

பகுதிகளிலும் இவ்வாறான ''மண் அரிப்பு'' மெதுவாக நடந்து கொண்டு தான் இருக்கிறது. காணி, வீடு என்ற வேர்கள் இல்லாததால் பலர் இப் பிரதேசங்களை விட்டு வெளியேறி நாட்டின் பல பகுதிகளில் சிதறிவாழ ஆரம்பித்திருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் எந்த நாளும் தோட்டத் தொழிலாளர்களாகக் காலம் தள்ள முடியாது என்று நாம் சொல்கிறோம். அவர்கள் கல்வியில் தாழ்ந்து போய் இருப்பதால் துரித கல்வி அபிவிருத்த ஏற்பட வேண்டும் என் கிறோம். தோட்டம் என்ற சிறையில் இருந்து இம் மக்கள் விடுபட்டால் தான் இவர்களது எதிர்காலம் சிறக்கும் எனக் கட்டியம் கூறுகிறோம்.



உண்மை, இவை அனைத்துமே நடைபெறத் தான் வேண்டும். அப்போது தான் இம் மக்களிடையே மறுமலர்ச்சி தோன்றும் எழுச்சி ஏற்படும் ஆனால் இவை எல்லாம் நடைபெற்று முடியும் போது, மத்திய, ஊவா, மாகாணங்களில் தற்போது காணப்படும் செறிவு. சிதறடிக்கப்பட்டு விடும் என்ற உண்மையையும் நாம் ஏற்கத்தான் வேண்டும். ஏனெனில் படித்தவர்களும் பொருளாதார வசதி பெற்றவர்களும் தோட்டங்களைவிட்டு வெளியேறும் போது தோட்டத்திலோ அல்லது அக்கம் பக்கத்திலோ சொந்தமாகக் காணி பூமி இல்லாததால் அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் குடியேற வேண்டிய நிலை தோன்றும்.

தற்போது செறிவாக வாழும் சமயத்தி லேயே தொழிற்சங்க மற்றும் அரசியல் ரீதியாக இவர்களிடையே ஏகப்பட்ட பிரிவுகள், போட்டா போட்டிகள்! இந்நிலையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிரிந்து வாழும் ஒரு நிலை தோன்றுமானால் அவர்கள், தமது அடையாளங்களை நாளடையில் முற்றாக இழந்துபோக வேண்டியேற்படும்.

ஆகவே மலையகக் கல்வி வளர்ச்சி, பொருளாதார மேம்பாடு என்பன அவற்றின் இலக்குகளை அடையும் அதே சமயம் அவை குடிசன செறிவில் மாற்றங்களை ஏற்படுத்தாதவாறு அரசியல் அணுகு முறைகள் வகுக்கப்பட வேண்டியது அவசிய மாகின்றது.

இல்லையேல் இம் மக்களின் உயர்ச்சியின் பொருட்டு மேற் கொள்ளப்பட்ட அத்தனை முயற்சிகளும் வியர்த்தமாகிவிடுவது திண்ணம்.



இப் பின்னணியில் மலையகத் தமிழா ராய்ச்சி மாநாட்டின் பங்களிப்பு முக்கியத் துவம் உடையதாகிறது. அதன் கட்டுக்கோப் பான செயற்பாடும் ஆய்வு முயற்சிகளும் அரசியல், பொருளாதார மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்கும் அணுகுமுறைகளுக்கும் வழிகாட்டியாக அமைய வேண்டியது அவசியம்.

உருவகப்படுத்திப் பார்க்கும் போது, மலையளவு காரியமாகத் தென்பட்டாலும் நெருங்கி ஒன்றிணைந்து, புரிந்துணர்வோடு செயற்படுத்தும் போது காரியங்கள் சுலப மாக இயக்கத்துக்கு வரும்.

இந்த வகையில் பார்க்கும் போது, தற்போது அவரவர்கள் வாழ்ந்து கொண் டிருக்கும் தோட்டக் குடியிருப்புகளை அவர் களுக்கே மரக்கறித் தோட்டக் காணியுடன் உரிமையாக்கும் திட்டம், அடையாளத்தை நிலை நிறுத்திக் கொள்ளச் செய்யும் ஒரு முயற்சி என்ற வகையில் பாராட்டப்படக் கூடிய ஒன்றே. ஏனெனில் வசிப்பிட உரிமை இம் மக்களின் உடனடித் தேவைகளில் ஒன்று.

இ.தொ.கா. போன்ற ஒரு பரந்த பலமான ஸ்தாபனம் இவ்வாறான அடிப்படை விடயங் களில் இன்னும் முனைப்புடன் காரியமாற்ற வேண்டும்.

பாடசாலைகள் அரசினால் பொறுப்பேற் கப்படுவதற்கு முன் ஆங்கிலக் கல்வி கற்றவர்கள் உயர் மட்டத்தினராகக் கருதப்படடனர். பொறுப்பு ஏற்றதும் பெரிய கல்லூரிகளில் கற்றவர்கள் முதல்தர வாய்ப்புகளையும் முன்னுரிமைகளையும் பெறுவோரானார்கள்.

இப்போது, சர்வதேச பாடசாலைகளில் கல்வி கற்போர் புதுப் பிராமணர்களாக உருவாகி வருகிறார்கள். என்று தமது நன்றி யுரையில் மாகாண அமைச்சர் புத்திரசிகா மணி குறிப்பிட்டார். கொழும்பில் மட்டுமல்ல. மலையகத் தலை நகரங்களிலும் இப்பாட சாலைகள் பெருகிவிட்டன. இங்கே கல்வி பயிலும் தமிழ் உயர் குடும்பத்து மாண வர்கள் இச் சமூகத்துக்கு சேவை ஆற்று பவர்களாக விளங்குவார்களா, இல்லையேல் ‘‘தோட்டக் காட்டான்கள்’’ என்று இகழ்ந்து விட்டு இச் சமூகத்துடனான உறவை முற்றாகத் துண்டித்துக் கொள்வார்களா? மலையக மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்ற வருங்காலத் தலைமையைத் தரப் போவது இவர்கள் தானா?

ஏனெனில் சகல வசதிகளும் கொண்ட சர்வதேச பாடசாலைகளில் பணமிருக்கும் குடும்பத்துப் பிள்ளைகள் கல்வி கற்கும் அதே சமயம், தோட்டப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் மருந்துக்கும் இல்லாத நிலை தொடர்ந்து நிலவி வருவதைக் காண முடிகிறது. இந்த நிலையில் இப் புதிய “பிராமணர்கள்” மலையகத்தின் புதிய “கங்காணி” களாக இருப்பார்களா? மலை யகத்தில் வசதி வாய்ப்பற்று இருப்போருக்கு சேவையாற்றுவார்களோ என்ற கேள்வி எழவே செய்கிறது.

இவ்வளவு காலமாக நாட்டின் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும் போது தென்பட்ட மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் இனி மேல் மலையகச் சமூகத்தினரிடையேயும் ஏற்படப் போகிறது என்று ஒரு பகுதியினர் கவலைப்படவே செய்கின்றனர்.

ஆனால் சமீப கால இலங்கை வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது மேற்கத்திய பின்னணியில் ஆங்கில மொழியில் கல்வி கற்றவர்கள் தான் தேசிய உணர்வைத் தூண்டுவதிலும் கல்வி, கலாசார மறுமலர்ச்சி யைத் தோற்றுவிப்பதிலும் முன் நின்றிருக் கிறார்கள் என்ற உண்மை தெரிய வருகிறது. இவ்வளவு காலமாக இத்தகைய சூழ்நிலை மலையகத்தில் தென்பட்டதில்லை. ஆங்கிலக் கல்வி தரும் தெம்பில் எழுச்சி கொள்ள விருக்கும் புதுப் பிராமணர் குழாம் மலை

யகத்தை விட்டு ஓடிப் போய் விடலாம் என்ற அச்சம் அப்படியே இருக்கினற போதிலும் கூட,

நாட்டின் சுதந்திரப் போராட்ட காலத்தில் உயர் கல்வி கற்றவர்கள் மறுமலர்ச்சி யுகத்துக்கு வித்திட்டதைப் போல, உயர் கல்வி பெற்று வெளியேறும் மலையக இளம் சந்ததியினரை இச் சமூகத்தின் மேம்பாட்டுக் காகவும் மறுமலர்ச்சி யுகத்தை இங்கே தோற்றுவிப்பதற்காகவும் நாளைய தலைமையை ஏற்று நடத்துவதற்காகவும் தயார் செய்வது மலையகப் பிரமுகர்களின் கடமையாகிறது.

ஏனெனில் எதிர்காலம் இன்னும் சவால் மிக்கதாக அமையலாம். விஞ்ஞான கைத் தொழில், தொழில்நுட்ப வளர்ச்சி என்ற பின்னணியில் எழும் சவால்களுக்கும் அரசியல் பொருளாதார பிரச்சினைகளுக்கும் நவீன சிந்தனையும் கல்வி, பொருளாதார எழுச்சியும் பெற்ற அரசியல் செல்வாக்குக் கொண்ட படித்த எதிர்கால சந்ததியின ராலேயே சரியான பதில் அளிக்கக் கூடிய தாக இருக்கும்.

ஆகவே, உருவாகவிருக்கும் புதிய கல்வி கற்ற மலையகச் சமூகம், கல்வியிலும், பொருளாதாரத்திலும் தாழ்ந்தவர்களைக் காலில் போட்டு மிதிக்கவே செய்யும் என்று ஒரேடியாக தீர்மானித்துவிட முடியாது.

ஏனெனில் தொழிற் பிணக்குகளைத் தீர்த்து தொழிலாளர்களின் உரிமைகளை நிலை நிறுத்த வேண்டும் என்பதற்காகத்தான் மலையகத் தோட்டங்களில் தொழிற் சங்கங்கள் ஆரம்பமாயின. ஆனால் மக்களின் தேவை தொழிற் பிணக்குகளுக்கும் அப்பால் விரிந்திருப்பது உணரப்பட்டதால் தொழிற் சங்க இயக்கம் அரசியல் இயக்கமாக உருப்பெற்றது.

கால சமூக, சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப மக்களின் தேவைகள் மாறுபடுகின்றன. குடி யுரிமை, வாக்குரிமை கிடைத்த நிலையில் அரசியல் முக்கியத்துவம் பெற்றிருக்கின்ற இன்றைய நிலையில்,

அடுத்த கட்ட வளர்ச்சியை நோக்கி இச் சமூகம் விரைந்து கொண்டிருக்கிறது.ஒரு சமூகம் மேல் நோக்கி நகர வேண்டுமானால் கல்விச் சிந்தனை ஆழமாக இருக்க வேண்டும் என்கிறார். பேராசிரியர் க. சிவதம்பி இவ்வாறான கல்விச் சிந்தனை மலையகத்தில் மெதுவாக, ஆனால் வெகு நிச்சயமாக ஏற்பட்டு வருகிறது.

மலையகத் தமிழராய்ச்சி மாநாடு இதற் கொரு உதாரணம்.

ஆனால் நமது துரதிஷ்டம்,

மலையகத்தில் எல்லாமே மெதுவாகத் தான் நடைபெறுகிறது.

அப்படி ஒரு நிலை இம்மாநாட்டின் வளர்ச்சிக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பது தான் எமது கவலை.

ஆகவே, இம் மாநாட்டின் அடுத்த கட்ட நடவடிக்கைகள், திட்டங்கள் பற்றி விரை விலேயே அறிவிக்கப்பட வேண்டும்.

கடந்த ஒன்பது வாரங்களாக இத்தொடர் வெளிவந்து கொண்டிருந்தபோது அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் வெளியாகும் என்றும் அவ்வாறு வெளி யானால் இப் பக்கத்திலேயே பிரசுரிக்கலாம் என்றும் எதிர்ப்பார்ப்புடன் காத்திருந்தோம்.

ஆனால் எமது எதிர்பார்ப்பு கைகூட வில்லை. வருத்தம் தான்.

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றிய ''தகவல்கள் விரைவிலேயே வெளி யாக வேண்டும் என்ற நம்பிக்கையுடன் இம் மாநாட்டை வெற்றிகரமாக நடத்திய மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் வீ.புத்திர சிகாமணிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இத்தொடரை நிறைவு செய்கிறோம்.

# நவமணி

# NAVAMANI

# மலையகத் தமிழாரய்ச்சி மாநாட்டின் மறுபக்கம்

"எதிரி"

1983ம் ஆண்டுகளில் ஆரம்பித்த இலக்கிய வரட்சி மலையக பகுதிகளில் ஏறத்தாழ 1990ம் ஆண்டு வரை நீடித்திருந்தது. இருப்பினும் 1991ம் ஆண்டின் பின்னர் இவ் இலக்கிய வரட்சி படிப்படியாக நீக்கம் பெற்று இன்று இலக்கிய செழுமை நிலையினை நோக்கி மலையக இலக்கியத்துறை நடை போடுவதை எவரும் அறிவர். இத்தகைய இலக்கியத் துறைகளில் நூல் வெளியீடுகள், பட்டிமன்றம், கவியரங்கு, கலைவிழா நிகழ்ச்சிகள் என்பவற்றுடன் திரு. P.P. தேவராஜ் (முன்னால் ராஜாங்க இந்து கலாசார அமைச்சார்) அவர்களினால் தோற்று விக்கப்பட்ட மாகாண சாகித்திய விழாக் களும் மிக முக்கியமானவை. குறிப்பாக சாகித்திய விழாக்களில் (1991 - 1994) கருப்பொருளாக மக்களின் மரபுக்கலைகள் அல்லது நாட்டாரியல் என்கிற அம்சம் மிகவும் வேகமாகவும் லாவகமாகவும் இலக்கிய துறைகளில் புகுத்தப்பட்டமை கவனிக்கத்தக்கனவாகும். இந்திய நாட்டார் பாடல்களில் விற்பன்னர்களாக பேராசிரியர் நவநீதன் தம்பதிகளின் இலங்கை வரவிலும் குறிப்பாக மலையக நவரசங்களுக்கான விஜயங்களிலும் மலையக பகுதிகளில் மலையக நாட்டாரியல் தொடர்பான ஆராய்ச்சி களும் நூல்களும், கருத்தரங்குகளும் தோன்றவேண்டிய அவசியத்தையும் அதே வேலை இவற்றுக்கான தொலைத்தூர ஆதர வினையும் வழங்கிற்று என்பது பொறுத்த மானதாகும்.

இதன் அடியொற்றியே திரு. அந்தனி ஜீவாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட (கண்டி சதியோதய மண்டபம்) பல மலைநாட்டு நாட்டாரியல் கருத்தரங்குகள் முக்கியமானவை. பேராதனை பல்கலை கழகத்தவர்களினாலும் விரிவுரையாளர்களாக பணிபுரியும் மலை யகத்தவர்களாலும் மலைநாட்டு மக்களினால் நன்கு அறியப்பட்ட க.ப. சிவம் மாத்தளை வடிவேலன் ஏ.வி.பி. கோமஸ் என்பவர் களினாலும் எட்டு வகைப்பட்ட மலையக தமிழரின் பண்பாடும் கருத்து நிலையும் என்ற நூலில் இடம்பெற்றது. இந்த நூல் களில் காணப்படும் எழுத்தாளர்கள் அல்லது ஆய்வாளர்களில் இத்துறைக்கு புதுமுகங்கள், பலர் இத்துறைக்கு அறிமுகம் இல்லாத வர்கள் இருப்பினும் இவர்களது சிறு ஆராய்ச்சி கட்டுரைகள் மிக சிறப்பாக அமைந்திருந்தன. மாத்தளை வடிவேலன் ''மலையக பாரம்பரிய கலைகள்'' என்ற நூலின் மூலம் மலையகத்தில் முதன் முதலாக ''காமன்கூத்தை'' நூலுருவில் கொண்டு வரமுடிந்தது. ஏனைய மலையக ஆராய்ச்சியாளர்களுக்கு ஓர் வழிகாட்டி யாகவும் இந்நூல் அமைந்தது எனலாம். சாரல் நாடனின் ''மலையக வாய்மொழி இலக்கியம்'' என்கிற நூலும் அண்மையில் வெளிவந்தது. இதேபோன்று மாத்தளை காந்திகேசுவினால் ''மலையக பழமொழிகள்'' தொடர்பில் பல கட்டுரைகளும், மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான பல கட்டுரைகள் தமிழோவியன், பசறையூர் வேலாயுதம் என்போரினாலும் மலையக நாட்டாரியல் தொடர்பில் சட்ட பெருமதி என்கிற தலைப்பில் கோ. சேனாதிராஜா என்போரின் கட்டுரைகள் புதின பத்திரை களில் குறுகிய காலப்பகுதிகளில் வெளியாகின.

இதனைவிட பல எழுத்தாளர்கள் இந்நாட்டா ரியல் துறைகளில் தம் கவனத்தை செலுத்த லாயினர்.

இருப்பினும் 1994ம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவியேற்றதை தொடர்ந்து இத்தகைய ''இலக்கிய செழுமை தொடருமா என்று பலர் எதிர்பார்த்தாராயினும் மிக குறுகிய காலப்பகுதியில் (1990 - 1994) ஏற்பட்ட மிக உறுதியான இலக்கிய அடித் தளம் காரணமாக இப்பயணம் இன்னும் தொடர்வதாகவே உள்ளது.

இந்த இலக்கிய பயணத்தின் ஒரு கட்ட மாகவே மலையக தமிழாராய்ச்சி மகாநாடு மிக அண்மையில் பத்தனை - கொட்ட கலையில் நடாத்தி முடிக்கப்பட்டது. மத்திய மாகாண இந்து கலாச்சார தமிழ் கல்வி அமைச்சர் திரு. வி. புத்திரசிகாமணி அவர் களின் மிக முக்கிய பங்கு அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். மலையகத்தை பொருத்தவரை இம்மாநாடு முதலாவது மலையக தமிழாராய்ச்சி மாநாடு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆயினும் இம்மாநாட்டின் மறுபக்கம் எத்தகைய தன்மையைக் கொண்டிருந்தது. என்பதனை நோக்குதல் அவசியமாகின்றது. மலையக தமிழாராய்ச்சி மாநாடு என்பது இலட்சக்கணக்கான மலையக மக்களின் சமூக, பொருளாதார, கலையுணர்வுகளை தனித்து நின்று பிரதிபளிப்பதாக அமை வதனால் மிக சரியாக திட்டமிட்டு சகல தரப்பினரும் எதிர்பார்க்கும் வண்ணம் நடத்தப் படுதல் அவசியமான ஒன்றாகும்.

இம்மாநாட்டு கருத்தரங்குகளில் பங்கு பற்ற அழைக்கப்பட்டோரில் தாம் எத்தகைய பொருளில் ஆய்வு மேற்கொள்ள போகின்றோம் என்றோ எத்தகைய ஆய்வுரைகளுக்கு தாம் கருத்துரை செய்யப்போகின்றோம் என்றோ பலருக்கு கடைசிவரை தெரியாமல் இருந்தது வேதனை தருவதாகும். ஒரு மாநாட்டு கருத் தரங்கில் பங்குபற்றி ஆய்வுரையோ அல்லது கருத்துரையோ செய்வதாக இருப்பின், குறித்த நபரை அனுகி இதுபற்றி அவரின் அபிப்பிரயாயத்த பெறவேண்டும். மாநாடு நடைபெறுவதற்கு முன்னரே பெற்றுக் கொள்ளக் கூடிய காலப்பகுதிக்குள் குறித்த நபருக்கு நிகழ்ச்சி நிரல் அனுப்பி வைக்கப் படுதல் மிக அவசியமானதாகும். நிகழ்ச்சியில் பங்கு பற்றவிருந்த பலருக்கு நிகழ்சிக்கு முதல் நாளே அழைப்பிதழும், நிகழ்ச்சி நிரலும் கிடைத்தது விஷணத்துக்குரிய ஒன்றாகும்.

ஆய்வுரை செய்தோரில் கனிசமான தொகையினர் மலையக சமூகத்தினராக இருந்திருக்கவில்லை. ஏன், மலையகத்தில் ஆயுரை செய்வதற்கு அறிஞர்கள் பற்றாக் குறையா அல்லது அறிஞர்களை தேடிபிடித்துக் கொள்வதில் ஏற்பட்ட சிரமமா என்பது தெரியவில்லை.

இன்றைய மலையகம் புது சிந்தனை யுடைய அறிவுப்படைத்த மலையக இளம் சந்ததியினரால் கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது. எத்தனையோ பேர் பல்வேறு உயர் தொழில் களில் மட்டுமன்றி வெளிநாடுகளில் உயர் தொழில் புரிகின்றனர். இலைமறைக் காய்களாக மிகத்தரமான இலக்கிய ஆக்கங்களை படைக்ககூடியனவர் நம்மிடையே உள்ளனர். இருப்பினும் குறித்த துறைகளுக்கு இன்னார் தான் இருக்க வேண்டும் அல்லது இவர்களின் தலமையில் தான் நடாத்தப்பட வேண்டும என்று "அடம் பிடிப்பது" ஏற்றுக்கொள்ள முடியாத தொன்று. புதியவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

மலையக சமூகத்தினைப் பற்றி ஆய்வுரை செய்வதற்கு எமது மலையகத்தவர்கள் பொருத்த மில்லாதவர்கள் அல்லது தகுதி யில்லாதவர்களா? மலையகத்தை தம் பிறப்பிட

மாகவும் வாழ்விடமாகவும் கொண்ட நம் மக்கள் மத்தியில் எமது சமூகத்தினைப் பற்றிய தெளிவைவிடவா ஏனையவர்களுக்கு தெரிந்து விட போகின்றது. மலையக தமிழர்கள் இன்று நூற்றுக்கு மேற்பட்டோர் அரசியலில் பெயர் பெரும் அளவிற்கு ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் அமைச்சர்களாக, பராளுமன்ற உறுப்பினர் களாக, பிரதேச சபை தலைவராக இருக்கின்ற பட்சத்தில் மலையக அரசியலைப்பற்றி ஆய்வுரை செய்ய எமது மக்களுக்கு தகுதி யில்லையா?

உண்மையில் மலையகத் தமிழர்களுக்கு உரித்தான மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் மலையகத்தவர்களே இரண்டாம் பிரஜைகளாக ஆக்கப்பட்டுள்ளதை என்னவென்று சகித்துக்கொள்வது.

பல மலையக அறிஞர்களிடம், இலக்கியத்துறையுடன் பரிச்சயமானவர் களிடம் இம்மாநாட்டினைப் பற்றி எவ்விதக் கடிதப் போக்குவரத்தோ அல்லது அழைப் பிதழோ வழங்கப்படவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கனவாகும்.

ஆயினும் எமது மறுதரப்பில் எங்கள் மலையகத்தில் போதிய ஆய்வாளர்கள் இல்லை. என்றோ போதிய அறிஞர்கள் இல்லையென்றோ வாதம் முன்வைக்கப் படலாம். உண்மையில் பல அறிஞர் பெருமக்கள் இருந்தும் அவர்களை விழாக் குழுவினர் அணுகவில்லையென்பது ஒரு புறமிருக்க அறிஞர்கள் எம்மத்தியில் மிகக் குறைவானவர்களே இருக்கின்றனர் என்று வைத்துக் கொண்டாலும் கூட, குறைவான அறிஞர்கள் இருக்கின்ற போது எண்ணிக் கைக்கு அளவானதாக மாநாட்டு நாட்களை குறைத்துக் கொண்டிருக்கலாம். எவரும் கட்டாயமாக மூன்று நாட்களுக்குத் தான் மாநாடு வைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தவில்லை.

இவ்வாறான மாநாட்டின் இறுதி நிகழ்வில் சிறந்த இலக்கிய கர்த்தாக்களுக்கு பரிசில் களை வழங்குவது மிக முக்கியமான அம்சம். இம் மாநாட்டில் இத்தகைய பரிசினைப் பெற்றவர் யார்? பரிசில்களைப் பெறுவதற்கு எமக்கு தகுதியில்லையா? அல்லது மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு பரிசில் பெற விழையும் இலக்கிய கர்த்தாக் களை தேடிப் பிடிக்க இயலாமையா? அல்லது நேரம் காலம் போதாமையா என்று தெரியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலானது முன்னரே கூறியதைப் போல் இத்தகைய மாநாடுகளுக்கு முன்னோடியாக திரு. பி. பி. தேவராஜ் அவர்களினால் அனுப்பி வைக்கப்பட்ட சாகித்திய விழாக்களும், நாட்டாரியல் கருத்தரங்குகளும் மிக முக்கிய பங்கு வகித்ததை எவரும் மறக்க லாகாது. அத்தகைய ஒருவரை மூன்று நாள் மாநாட்டுக்கு பிரதம அதிதியாக இல்லாது விடினும் விசேட அதிதியாகக் சரி அழைப்பிதழ் அனுப்பப்படவில்லை என்பது இலக்கிய சுவையுணர்ந்த அன்பர்களை மனம் வருந்தச் செய்கிறது. இதனுடன் எமது மக்கள் மத்தியில் வாழுகின்ற கல்விமான் களுக்கும் அறிஞர்களுக்கும் அழைப்பிதழ் அனுப்பி வைக்கப்படாதா என்பது மிக சந்தேகத்துக்குரிய தொன்றாகும்.

முடிவாக மலையக தமிழாராய்ச்சி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றது நமக்கெல்லாம் பெருமை என்று கூறினாலும் கூட, அதன் மறு பக்கத்தில் எத்தனை தவறுகள் இழைக்கப் பட்டுள்ளன என்பதை நோக்குகின்ற போது இம்மாநாடு உண்மையில் வெற்றி தானா என்பது பலத்த சந்தேகங்களை தோற்று வித்துள்ளது. ஒரு நாணயத்தில் இரு பக்கங்கள் உண்டு என்பதும் அவ்விரண்டு பக்கங்களும் சரிசமமாக இருந்தாலே நாணயம் செல்லு படியாகும் என்பதும் இம்மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு புரிந்தால் சரிதான்.

# குற்றம் குற்றமே

மலையகத்தின் பண்புகளையும் கலை கலாசார விழுமியங்களையும் எடுத்து இயம்பும் ஒரு புதிய முயற்சியாகவே அண்மையில் கொட்டகலையில் நடந்து முடிந்த மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு விளங்குகின்றது. மலையகத்தில் பெரியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட முதலாவது தமிழாராய்ச்சி மாநாடு என்பதனால் மலையக மக்கள் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

இன்றைய காலகட்டத்திலும் மலையக மக்கள் பின் தள்ளப்பட்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் இன்றைய இலங்கையில் முன்னேற்றத்திற்கு மலையக மக்களின் பங்கு முக்கியமானதாகவே உள்ளது. அப்படிபட்டவர்களின் பெருமைகளையும் அவர்களுடைய சமூக வரலாற்றுப் பின்னணிகளையும் ஆராய்ச்சி செய்யும் இப் புதிய பணி வரவேற்கத்தக்கது. ஒரு கலாச்சாரத்தின் தொன்மையையும் பின்னணியையும் கலாச்சார சூழலில் இருந்து ஆராய்வதே சாலச் சிறந்ததாகும் என்பதை அறிந்த விழா ஏற்பாட்டாளர்கள் மலையகத்தில் தமிழாராய்ச்சி மாநாடு நடத்துவதற்கு வந்த எதிர்ப்புகளை வென்று விழாவினை சிறப்பாக நடத்தி முடித்திருந்தனர்.

மலையகத்தில் இதற்து முன்னர் பெரியளவில் விழாக்கள் நடக்கவில்லை ஆயினும் பல கலை விழாக்கள் சாகித்திய விழாக்கள் என்பன முன்னரும் நடந்தேறின என்பது யாவரும் அறிந்த உண்மை. அந்த வகையில் முன்னரே விழாக்களை நடாத்தி வைத்த திரு. பி.பி தேவராஜ் அவர்கள் மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது கௌரவிக்கப்படாதது பெரிய குறையாக உள்ளது. அரசியல் பின்னணிகளைக் கருத்திற் கொண்டு இலக்கியவாதியான திரு. பி.பி. தேவராஜ் அவர்களை பாராட்டாது விட்ட, விழா ஏற்பாட்டாளர்கள் மிகப் பெரிய தவறினை செய்துள்ளனர். இக்குறையினை விழா அமைப்பாளர்களது கவனத்திற்கு கொண்டு வர நவமணி வாயிலாக ''எதிரி" தனது கருத்தினை தெட்ட தெளிவாக சுட்டிக் காட்டினார். நவமணி வாயிலாக ''எதிரி" க்கும் அதனை பிரசுரித்த நவமணிக்கும் எனது நன்றிகள்.

டில்ஷாட்

தேவதாசன்.

# கோமாளித்தனத்திற்கு சப்பை கட்டும் மலையகத் தமிழ் தேசம்?

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடர்பாக பி. பொன்னுசாமி என்பவர் எழுதிய எதிர் வினையான் சில குறிப்புகளும் பதில் வினையாக குறிப்புகளை மலை யாண்டி ணயாகிய நான் முன்வைக்க வேண்டியுள்ளது.

நான் முன்வைத்த கருத்துக்கள் யாவும் மலையக தமிழாராய்ச்சி பற்றியதேயன்றி பொன்னுசாமியின் மலையகத் தமிழ் பற்றியதல்ல. மலையகத் தமிழ் தேசம் ஒன்று அதற்கேயுரிய வளர்ச்சியை கொண்டுள்ள தாக சுதீதமாக கற்பிதம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் எனக்கெழவில்லை.

மலையக தமிழாய்வு என்பதை மலை யகத்தவர்கள் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்றோ பேராசிரியர் சிவத்தம்பி அவர்களோ, கலாநிதி அம்பலவாணர் சிவராசாவோ மலையக தமிழாய்வு பற்றி சிந்திக்கக் கூடாது என்றோ யாரும் தடை விதிக்க முடியாது. ‘‘ எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு” என்பதே எனது கருத்து.

ஆனால் மலையக புத்திஜீவிகள் தாங்களே என்று கச்சை கட்டிக் கொண்டு குறித்த தமிழாராய்ச்சி மாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள் சிலர் போன்று (நேர்மையான ஆய்வாளர்கள், புத்திஜீவிகளுக்கு இருட் டடிப்பு செய்தவர்கள்) பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் முகத்திற்கு முன்னால் ஒன்றும், முகத்திற்கு பின்னால், “யாழ்பாணத்தான்” என்றும் கூறும் நேர்மையாயீனம் எனக் கில்லை. பேராசிரியர் கைலாசபதியின் இறுதி கிரியைகளில் குடிவெறியில் கைலாசபதி செத்ததை விட சிவத்தம்பி செத்திருக்கலாம் என்று பகிரங்கமாக கூறிய மலையக புத்திஜீவி கோமாளியினதும் அவரின் சகாக்களினதும் புத்தி ஜீவி தனத்திற்கும் பேராசிரியர் சிவத்தம்பி அவர்களும் ஏமாந்து விட்டார் என்பது தான் விமர்சனம்.

மலையக பிரதேச வாதத்தை கதைப் பவர்களை, அதனைப் பிழைப்பாகக் கொண்டவர்களை விட நேர்மையாகவே பேராசிரியர் சிவத்தம்பி போன்றவர்களை நேசிப்பவர்கள் மலையகத்தில் அதிகமான வர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் மாக்சியர்கள் என்பதற்காகவே பேராசிரியர் சிவத்தம்பி, அ.சிவராசா போன்ற வர்களின் பங்களிப்பு அவசியமானது என்று கூறும் அதே வேளை அவர்களை மலை யகத்து அவர்களுடன் சமப்படுத்த வேண்டி யளவிற்கு குறுகிய நோக்கம் எதுவும் எனக் கில்லை. அவர்களிடம் தனிப்பட்ட எந்த எதிர்ப்பும் எனக்கில்லை. அவர்கள் மலை யகத்திற்கு அநநியமற்றவர்கள் அல்லர் என்று கூறவும் முடியாது பி.ஏ. காதர் மலையகத்தில் வாழ்பவர் அவர் தன்னை ஒரு மாக்சியராக அதிக நாட்கள் அடையாளம் காட்டி வாழ்ந் துள்ளார். அவருக்கு மலையக மக்களுடன் இருக்கும், இருந்த தொடர்பைவிட பேராசிரியர்

சிவத்தம்பிக்கோ, அ. சிவராசாவிற்கோ, மிகவும் குறைவே. வி.ரீ. தமிழ் மாறனுக்கு தொடர்பே இல்லை.

எனவே எனது கருத்தை பிறமாவட்டத் தவருக்கு எதிரான வாதமாக கொச்சைப் படுத்தக் கூடாது.

நடேசனும், கே. கணேசும், வாமதேவனும் மௌனமாக இருக்கவில்லை. இந்த மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் மேற்குறிப்பிடப்பட்ட வர்கள் போன்றவர்களுக்கு கதவடைப்பு செய்யப்பட்டதும் அவர்கள் போன்றவர்கள் நிராகரிக்கப்பட்டதுமே குறிப்பிடப்பட வேண்டிய தாகும்.

எந்தவொரு சமூகத்திலும் புத்திஜீவிகள் எனப்படுபவர்கள் யாவரும் சமூக அக்கறை கொண்டவர்களாக இருப்பதில்லை. அதிலும் நேர்மையான சமூக அக்கறை கொண்ட வர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர் களுக்கு கதவடைப்பு செய்யப்பட்டது என்பதே விமர்சனம். அந்த கதவடைப்பு மலையக புத்திஜீவிகள் என்று கச்சை கட்டிக் கொண் டிருக்கும் சில கோமாளிகளினால் செய்யப் பட்டுள்ளது என்று குறிப்பிடுவது நேர்மையான விமர்சனமேயன்றி காழ்ப்புணர்வுக்கு உட்பட்ட கருத்துக்களே அல்ல.

ஒரு அரசியல் சாயத்தை மட்டும் கொண்டிருந்ததாகவும் பிற்போக்கான படிமங் களைக் கொண்டிருந்தாகவும் பொன்னுசாமி என்பவர் ஒத்துக்கொள்ளும் போது மலையக தமிழாராய்ச்சி மாநாட்டை ஒரு வரலாற்று வளர்ச்சியாக எப்படி மதிப்பிட முடிகிறது. அவரின் மலையக தேசம் கோமாளித்தனம், பிற்போக்குத்தனம், ஒரேயொரு அரசியல் சாயம், பழமை வாதம் என்பவற்றை கொண்டதனால் எப்படி மலையகத்துக்கு தலை சிறந்த புத்திஜீவிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், சட்டத்தரணிகள் என்போர் கலந்து கொள்ளமுடியும் அத்துடன் அவர்கள் கலந்து கொள்ளவில்லை என்பதை விட நிராகரிக்கப்பட்டார்கள் என்பதே உண்மை.

நடந்து முடிந்த மலையக தமிழாராய்வு மாநாடு பற்றி ஒரு விசாரணைக் கமிஷன் ஆரம்பிக்கப்பட்டால் (அரசாங்கம் செய்ய வேண்டியது அவசியமல்ல) அதில் சிலரால் புரியப்பட்ட இருட்டடிப்புகள், ஏமாற்று வித்தைகள், குற்றங்கள, நிராகரிப்புகள் என்பவற்றை (குடி முதல்....) ஆதாரபூர்வமாக நிரூபிக்க பலர் முன் வருவார்கள்.

குறித்த மாநாட்டில் தவறுகளை புரிந்த வர்களை குறிப்பிட்டு சொல்லத் துணிவிலாது, அந்த தவறுகளுக்கு முழு மலையக புத்தி ஜீவிகளையும், கலைஞர்களையும், ஆய்வாளர் களையும், மாணவர்களையும், குறை கூறக் கூடாது. சிறிபாத கல்லூரி மாணவர்களும் மாணவியரும் இல்லையென்றால் பார்வை யாளர்கள் என்று மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் யாரும் இருந்திருக்க மாட்டார்கள். சில நேர்மையான படித்த இளைஞர்கள் இல்லாவிடின் மலையகம் பற்றி கருத்துக் கூற ஒருவரும் இருந்திருக்கமாட்டார்கள்.

எனவே அவர்களையும் குறைகூறி, பொன்னு சாமியின் மலையக தமிழ் தேசத்திற்கு நன்றி யற்றவர்களாக மாறிவிடக் கூடாது.

மலையக படித்தவர்களும், பட்டதாரி களும், புத்திஜீவிகளும் அவர்களே முன்னின்று மலையகத் தமிழ்தேசத்தை முன்னெடுக்க வேண்டும என்று மலையகத் தமிழ் தேசம் பற்றிய பொன்னுசாமியின் கோளாறான பார்வை காரணமாகவே நடந்து முடிந்த கோமாளிக்கூத்தை அங்கீகரிக்கக் கோரு கிறார் என்பது நிரூபிக்கப்படுகிறது.

எனவே பேரின வாதத்திற்கு எதிரான நேர்மையான வர்க்கத்தலைமையை கொண்ட சகல மலையக மக்களையும் ஐக்கியபடுத்தி மலையக தேசத்திற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று பொன்னுசாமி சிந்திப்பராயின் நடந்து முடிந்தது கோமாளிக் கூத்தே என்ற முடிவுக்கு வருவார்.

முழு மூன்றாம் உலக நாடுகளின் புத்தி ஜீவிகளையும் சர்வநாசமிக்க ஏகாதிபத்திய மற்றும் காலனித்துவ அடிமை வாழ்விற்கான பயிற்றப்பட்டவர்கள் என்று பொன்னுச்சாமி கூறுவது அபத்தமாக இல்லையா? படிப்பை வைத்துக் கொண்டு வயிற்றுக்கும் வசதிக்கும் அந்தஸ்திற்கும் அலைந்து திரிபவர்களை விட நேர்மையான சமூக நோக்கம் கொண்ட முழு மானுட விடுதலையே வாழ்க்கை லட்சியமாகக் கொண்டு இருப்புக்கே போராடிக் கொண்டிருக்கும் மானுடர்களை அடை யாளம் காண முடியாது பொன்னுசாமியின் மலையகத் தமிழ் தேசம் சாதியமில்லை. அவ்வாறான மானுடர்களை அடையாளம் காணமுடியாத படியால் ‘‘கோமாளிகளை’’ புத்தி ஜீவிகளாக ஏற்றுக்கொள்ள எல்லோ ராலும் முடியாது. அவ்வாறான நேர்மை யான புத்தி ஜீவிகள் பல்வேறு கட்டமைப் பிற்குள் (பொன்னுசாமி குறிப்பிடுவது போன்று ஒரு கட்டமைப்பிற்குள் முழு மலையகத்தவரும் இணைவது சாத்திய மில்லை) இணைந்து மலையக மக்களின் அடிமை சமூக அமைப்பை தகர்க்கும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர்.

அவ்வாறு பல்வேறு கட்டமைப்பிற்குள் இருக்கும் அவர்களை இணைப்பதே தற்போது செய்யப்பட வேண்டியது மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் நடந்தது போன்று அவர்களை நிராகரிப்பதோ, அந்த நிராகரிப் புக்கு சப்பை கட்டுவதோ ‘‘மலையகத் தமிழ் தேசத்திற்கு’’ செய்யும் அர்ப்பணிப்பாகாது.

குறிப்பிட்ட அந்த மலையக தமிழா ராய்ச்சி மாநாட்டில் கட்டுரை சமர்ப்பித்த ஒரு மலையக படித்தவர் அவரது கட்டுரை பற்றி கருத்துத் தரிவித்த போது, மாநாட்டு ஏற்பாட்டாளர்களின் கருத்துகளையே தமது கட்டுரையில் எழுதியதாக மலையாண்டியிடம் குறிப்பிட்டார் என்பதை இங்கு குறிப்பிடுவதன் மூலம் மலையக தமிழாராய்ச்சி மாநாட்டின் லட்சணத்தை விளங்கிக் கொள்ள முடியும்.

தேவை ஏற்படும் போது இப்படி ஒவ்வொன்றாக வெளிவரும்.

மலையாண்டி

# மலையகம் முன்னேற விழாக்கள் அவசியமாகும்!

உலகிலேயே மிகவும் சோகம் தோய்ந்த ஒரு வரலாற்றை கொண்ட மலையக மக்களின் பாரம்பரிய கலை, கலாச்சாரங்கள் மிக வேகமாக அழிந்து வரும் இந்த சூழ்நிலையில் தமிழாராய்ச்சி மாநாடு போன்ற விழாக்கள் அவசியமாகும். பல்வேறுபட்ட எதிர்ப்புகள், சிரமங்களுக்கும் மத்தியில் இப்படியான விழாக்களை ஏற்பாடு செய்யும் சம்பந்தப்பட்டவர்களை வாயார வாழ்த்தா விட்டாலும் பரவாயில்லை. வீண் பழிச் சொல்லை சுமத்தும் இழிவான செயலை செய்வது அழகல்ல. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பது தெரியாதா? நமக்கு கிடைக்க வேண்டிய அனைத்து சலுகைகளும் உதவிகளும் நம்மிடம் பிளவேற்பட்டதால் தான் பிறருக்குப் போய்ச் சேர்ந்து விடுகின்றது.

இப்படியான விழாக்களை நடாத்தும் போது சிறிய பிழைகள் ஏற்படலாம். ஆனால் வெறும் துரும்பை இரும்பாக நினைத்து ஏற்பாட்டாளர்களின் மனம் புண்படும் விதமாக விழாவைப் பற்றி அவதூறாக பேசுவது முறையாகாது. முன்னர் சிலகாலங்கள் மலையகத்தில் பரவலாக சாகித்திய விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு மலையக பாரம்பரிய கலை, கலாச்சாரங்களுக்கு உத்வேகம் அளிக்கப்பட்டதுடன் கலைஞர்கள், ஏழுத்தாளர்கள் யாவருக்கும் அதன் மூலம் கௌரவமும் கொடுக்கப்பட்டது. அழியும் நிலையில் இருக்கும் பாரம்பரிய கலை கலாச்சாரங்களுக்கு இப்படியான விழாக்கள் மூலமாக புத்துயிர் ஊட்டப்பட்டது.

நடந்து முடிந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் மேற் கொள்ளப்பட்டன. அவற்றில் முக்கியமானது மலையகத்தின் பாரம்பரிய கலை கலாசாரம் அது சம்பந்தமான ஆவணங்களை பாதுகாக்க ஒரு காப்பகத்தை ஏற்படுத்துதல் இது உண்மையில் ஒரு வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும். ஒவ்வொரு வருடமும் இப்படியான விழாக்கள் கட்டாயமாக செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

அநேகமாக பிரபல எழுத்தாளர்கள், கலைஞர்களுக்கு அழைப்பிதழ் அனுப்பப் படாததால் மாநாட்டுக்கு செல்லவில்லையென குறைபட்டுக் கொண்டார்கள். உண்மையான கலைஞர்கள், எழுத்தாளர்கள், நலன் விரும்பிகள் அழைப்பிதழுக்காக காத்திருக்கத் தேவையில்லை. கட்டாயமாக விழாவுக்கு வந்து ஏன் தாங்கள் புறக்கணிக்கப் பட்டார்கள் என்பதை சம்பந்தப்பட்டவர்களிடம் நேருக்கு நேர் கேட்டு தெளிவுபடுத்திக் கொண் டிருக்கலாமே எனவே நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும். இனியாவது நல்லது நடக்க நாம் அனைவரும் ஒற்றுமையுடன் செயல்படுவோம்.

பால சங்குபிள்ளை ஹட்டன்

# மலையாண்டிக்கு ஒரு மறுமொழி

கடந்த ஆண்டு இறுதியில் நடத்தப்பட்ட மலையக தமிழாராய்ச்சி மாநாடு குறித்த விமர்சனங்களின் வெளிப்பட்ட மலையகத்தவர் அல்லாத புத்தி ஜீவிகளையும் ஆய்வாளர் களையும் மலினப்படுத்துவது போல் முன் வைக்கப்பட்ட விமர்சனங்களுக்கு "எதிர் வினையாக சில குறிப்புகளை நவமணியில் எழுதியிருந்தேன்" இதற்கு பதிலளித்த மலை யாண்டியின் கட்டுரைத் தொடர்பாய் இக் குறிப்பை நவமணி வாசகர்களுக்கு எழுது கிறேன்.

மலையக தமிழாராய்ச்சி மாநாடு (?) என்று ஒன்று நடத்தப்பட்டதாக செய்யப்படும் கற்பிதத்தின் விளைவு தான், அதனை ஒரு மாநாடாக எதிர்பார்த்து ஏமாந்ததன் விளைவு தான் மலையாண்டியின் விமர்சனத்தின் பின்னணியாக உள்ளது.

எனது குறிப்புரையில் "மலையக தமிழா ராய்ச்சி மாநாட்டை ஒரு ஆராய்ச்சி மாநாடாக எதிர்பார்த்து ஏமாந்தவர்கள் அனுதாபத்துக் குரியவர்கள் என்றும்" "அம்மாநாடு பல பிற்போக்கான படிமங்களை கொண்டிருந்த போதும் அதனை நடத்த முன்வந்தவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே" என குறிப்பிட்டு இருந்தேன். ஏனெனில் மலை யகத்தின் புத்தி ஜீவிகள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் தம்மை ஒரு அமைப்பில் அணித்திரட்டிக் கொள்ளாமல் புரட்சிகர முன்னெடுப்புகளை மேற்கொள்ளாமல் இருக்கும் வரை இவ்வாறான கோமாளித்தனங்கள் அரங்கேறும் எனவும் குறிப்பிட்டிருந்தேன்.

மாநாடு ஏற்பாட்டாளர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே என்ற பதப் பிரயோகம் நன்கறிந்த வஞ்சக புகழ்ச்சியாகவே இடம் பெற்றது.

மலையாண்டி அவர்கள் தன்னை மாக்ஸி யராகவும் மானுடத்தை நேசிப்பவராகவும் மானிடத்தை நேசிப்பதனூடே மாக்ஸிய ராகவும் இனம் காட்டியிருந்தார். சபாஷ்! ஆனால் மானுடத்தை நேசிக்கின்ற மாக்ஸியர் ஒரு சம்பவம், நிகழ்ச்சி, பிரதி அரங்கேற்றப் படும் போது அதனை அரங்கேற்றுகின்ற சமூக சக்திகள் யார்? அவர்களது வர்க்கப் பின்னணி யாது? அவர்களது நலன்கள் யாது என்பதனை ஊகித்தறிய முடியும். அதற்குமாகிய முறையியல் ஒரு அளவுக கோலாக பயன்படும்.

ஆனால் மலையாண்டி அவர்கள் ஏன் மாநாட்டை நடத்திய சக்திகளை இனம் காணத்தவறினார் என்பது கேள்விக்குரியது.

அதை இனம் காணத் தவறியதாலேயே ஏமாற்றமும் விரக்தியும் வேதனையும் மேலிட

விமர்சனம் செய்யப்பட வேண்டி யிருக்கிறது போலும்.

மார்க்சிய அறிஞரான அன்நூலாசிரியரின் வார்த்தையில் கூறுவதானால் ஒரு பிரதியை வாசிக்கின்ற போது வரிகளுக்கிடையிலும் வரிகளுக்கு ஊடாகவும் வாசிக்க வேண்டும். மேலும் சொல்லப்பட்ட செய்தி என்ன, சொல்லப்படாமல் குறிப்பாக சொல்லப்பட்டது யாது, பேசப்படாத விடயம் என்ன என்பதை அறிய வேண்டும்.

எனது எதிர்வினை மாநாட்டுக்கும் அதன் ஏற்பாட்டுக் குழுவின் கோமாளிகளுக்கும் நியாயமற்ற விமர்சனத்திற்கும் ஆகத்தான் எழுதப்பட்டது. கைலாசபதியின் மரண ஊர் வலத்தில் கலந்து கொண்டதையும் தமிழாராய்ச்சி மாநாட்டில் கட்டுரை சமர்ப்பித்த மலையக ஆய்வாளர் குறிப்பிட்டதையும் காட்டி மலை யாண்டி பயமுறுத்த தேவையில்லை.

மலையகத்தின் முன்னேறிய பிரிவின ருக்கும் நாட்டின் ஏனைய தரப்பின் முன்னேறிய பிரிவினருக்கும் இடையே வளர்ந்து வரும் புரிந்துணர்வும், முற்போக்கான கூட்டினைவும் சில ஆழமற்ற பார்வைகளால் சிதைந்தழியக் கூடாது என்பதன் அடிப்படையில் தான் எனது எதிர்வினை அமைந்தது. மாறாக மலையாண்டியின் மீதும் அவரது கொள் ளையின் மீதும் தாக்குதல் தொடுப்பதற்கு அல்ல. அதை சொல்ல அவருக்கு உள்ள உரிமைகயை அங்கீகரிக்கும் அதே வேலை அதை மறுக்கும் எனது நிலைப்பாட்டை அவர் புரிந்து கொள்ள வேண்டும். மலை யாண்டி அவர்கள் தனது பதில் உரை எழுது முன் எனது இருவினை இரு வேறு கட்டுரைகளுக்கான ஒன்றாகவே இருந்தது என்பதையும், சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கைலாசபதியின் மரண ஊர்வலத்தில் கைலாசபதி செத்ததை விட சிவத்தம்பி செத்திருக்கலாம் என கூறிய மலையக மேதையை நானனறியேன். (கைலாசபதி மரணமான போது அவரையே நான் அறியும் வயதில் இருக்கவில்லை) ஆனால், தான் முன்னொன்றும் பின்னொன்றும் கூறும் நேர்மையற்றவன் அல்ல என்கிறார் மலை யாண்டி தான் முன்னர் எழுதிய விமர்சனம் வெளிப்படையாகவே மலையகம் சாராத புத்திஜீவிகளுக்கு எதிரானது என உணரப் பட்டதால் தான் அவர் தன்னை தூய்மைப் படுத்த அதிதப் பிரயத்தனம் செய்கிறார் போலும்.

மேலும் மலையக பிரதேச வாதம் பேசுவ தாக யாரை? எக்குழுவை? சுட்டுகிறாரோ அறியேன். ஆனால் ''தன் இருத்தலை மறுத்தலுக்கு எதிராய்" ஒரு இனம் அரசியல் சமூகம்" (இதுவே தேசியம் எனப்படுகிறது). எழுதுவதை தவறென்கிறாரா மலையாண்டி? மேலும் மலையக பிரதேச வாதம் பேசு வதாக சாடும் அவர், மலையக தமிழா ராய்ச்சி மாநாடு பற்றி பேசுவது எங்கனம்? அது பிரதேச வாதமில்லையா?

மேலும் மலையக புத்திஜீவிகள்

தூசித்தட்டியே தேடப்பட வேண்டும் என நான் குறிப்பிட்டேன். அவர் வகைப்படுத்தி காட்டி யுள்ளார். மலையாண்டியின் முன்னேறிய பிரிவினரே தான், நான் குறிப்பிட்ட தூசு தட்டப்பட்ட புத்திஜீவிகள்.

அடுத்ததாக மலையக புத்திஜீவிகள் ஓர் அணியில் திரளவேண்டுமென குறிப்பிட்டு. அவர்கள் ஒட்டுக்கட்சிகளிலும், பத்தாம் பசளித் தலைமைகளிலும் அமைப்புகளிலும் அல்ல, மாறாக சிதறிக்கிடக்கின்ற மானு டத்தை நேசிக்கின்ற எங்களது அடிமைத் தலைகளை அருத்தெறியத் துடிக்கின்ற முற்போக்கான அணிகள் அல்லது நபர்கள் ஒரு பரந்துபட்ட ஜனநாயக கருத்து தளத்தில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையே.

இந்த சக்திகளின் பாதைகளும் வழிமுறை களும் வேறுபட்டவையாக இருக்கலாம். குறிக்கோள் சர்வதேசியம், மானுட விடுதலை என்றால் அனைத்துலக நாசகார சக்திகள், அடிப்படை வாதிகள், ஒட்டுக்கட்சி பாராளு மன்ற சந்தர்ப்ப வாதம், இன ஒடுக்கு முறை, வர்க்க எதிரிகள் என்பனவற்றுக்குள் எதிரான புரட்சிகர முற்போக்கு சக்திகள் ஓரணித்திரள வேண்டும் என்பதை மலையாண்டி அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மலையக மக்கள் மீதான ஒடுக்கு முறை வர்க்க இனத்துவ அடிப்படைகளை கொண்டது. எமது அடிமைத்தலைகளை அறுப்பது எமது சர்வதேசியப் பார்வையில் முதல் படியாக அமையும். மூன்றாம் உலகில் கல்வியும் படிப்பும் சர்வநாசமிக்க ஏகாதிபத்திய, காலணிய ஆதிக்க அடிமை வாழ்வுக்கான பயிற்றுவிப்பு தான். இது எப்படி சுபத்தமாக முடியும்? எழுத்தறிவும், வாசிப்பறிவும், மானுடம் நோக்கிய தேடலை பரந்துபட்ட மக்கள் திரளினரிடம் கொண்டு வராத வரை இக் கல்வி அடிமை வாழ்வுக்கான பயிற்று விப்பே!

ஒரு பகிரங்க தளத்தில் மலையாண டிக்கும், நவமணி வாசகர்களுக்கும் இதனை எழுதுவதன் நோக்கம் ஒரு முற் போக்கான கூட்டினைவை நோக்கி மலையக முன்னேற வேண்டும் என்பதே.

பொன்னுசாமி

# உண்மைகளை மூடி மறைத்துவிட்டு சமூகங்களுக்கு இடையேயான புரிந்துணர்வை ஏற்படுத்த முடியாது

மலையக தமிழாராய்ச்சி மாநாடு பற்றி நவமணியில் வெளிவந்த மலையாண்டி என்பவரின் இரண்டு கட்டுரைகளையும் விளக்கிக் கொள்ள அல்தூசர் என்ற மொழியியல் அறிஞரினதும் கோட்பாடு களையும் அமைப்பியல் கோட்பாடு களையோ பிரயோகிக்க தேவையில்லை. "பொது புத்தி மட்டத்து" அல்லது பாமர மட்டத்து தமிழ் மொழி புலமையே போது மானதாகும். மலையகம் பற்றி நேர்மையாக அக்கறை கொண்ட மலையகம் சாராத புத்தி ஜீவிகளுக்கு எதிரான வெளிப்படையான எதிர்ப்புகளை மலையாண்டி எழுதினார் என்று கூறும் அளவுக்கு எனக்கு பொன்னு சாமியின் அளவிற்கு தமிழறிவு கிடையாது.

பொன்னுசாமியின் குருட்டுத்தனமான குருந்தேசிய வாதத்திற்கும் மலையாண்டி கொடுத்த அடியால் ''சுவரில் இருந்த பல்லி" போன்று செய்வதறியாது வெளி மாகாண புத்திஜீவிகளுக்கு எதிராக மலை யாண்டி எழுதியதாக 16.02.97 அன்று நவமணியில் உளறியிருப்பது எனக்கு ஆச்சரிய மாக இல்லை. அல்தூசரின் கோட்பாடு களையோ, அமைப்பினது கோட்பாடு களையோ மூட்டைகட்டி வைத்து விட்டு "பொதுப் புத்தியுடன்" மலையாண்டியின் இரண்டு கட்டுரைகளையும் மறு வாசிப்பு செய்யவும். பிற சமூக புத்திஜீவிகளுக்கு எதிராக மலையாண்டி எழுதவில்லை என்பது புரியும். புரியாவிட்டால் புரியாமல் இருப்பதற்கு ஏதுவாக ஏதாவது ஒரு புதிய கோட்பாட்டை தெரிந்து எழுதுங்கள். மலையக பாமரர்கள் அறிந்து கொள்வோம்.

"மலையக தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தியவர்கள் பாராட்டுக்குரியவர்கள்" என்று பொன்னுசாமி எழுதியதை தவறு என்று ஏற்றுக்கொள்ள பக்குவமில்லாது அதனை நன்கு அறிந்த வஞ்சக புகழ்ச்சி யாக கூறியதாக எழுதியுள்ளார். எது வஞ்சக புகழ்ச்சி என்று அறிய முடியாத அளவிற்கு மலையாண்டியின் அறிவு மட்டமானது என்று பொன்னுசாமி கருதியிருக்கலாம். ஆனால் அது வஞ்சக புகழ்ச்சியா இல்லையா என்பது நவமணி வாசகர்களுக்கே வெளிச்சம்.

மானுடத்தை நேசிக்கின்ற மாக்ஸிய ஒரு சம்பவம், நிகழ்ச்சி, பிரதி அரங்கேற்றப்படும் போது அதனை அரங்கேற்றுகின்ற சக்தி யார்? அவர்களது வர்க்கப் பின்னணி யாது என்றெல்லாம் மார்ஸிய முறையியல் ஆய்வை செய்து விட்டு சும்மா இருந்து விட வேண்டுமென்று பொன்னுசாமி கூறு கிறாரா? அப்படி மாக்ஸியர்கள் சும்மா இருந்து விட்டால் தான் பொன்னுசாமி போன்று குருந்தேசிய வாதிகள் எதிர்ப்பில் லாமல் குழப்பங்களை செய்ய முடியும் என்று மனப்பால் குடிக்கிறார்களா? சுரண்டும் வர்க்கம் என்பதால் அவர்கள் சுரண்டு கிறார்கள் என்று சும்மா இருந்து விடுவது என்று மாக்ஸியர்களின் கடமை ஆகாது. (பொன்னுசாமி இவ்விவகாரம் விளங்காது) சுரண்டும் வர்க்கத்தின் அடக்கும் வர்க்கத்தின் நேரடியான மறைமுகமான நடவடிக்கைகள்

யாவற்றுக்கும் எதிராக குரல் கொடுப்பதும் அவ்வர்க்கங்களுக்கு துணைபோகும் சகலரையும் எதிர்ப்பதும் மாக்ஸியர்களின் அடிப்படைக் கடமையாகும். அதனை மலையாண்டி முழுமையாக (மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்திய கோமாளிகளை மூர்க்கத்தனமாக தாக்கவில்லை) சாடவில்லை என்று நான் நினைக்கிறேன்.

எனவே மலையக தமிழாய்வு மாநாடு மலையக மக்களின் தேசியத்தை கட்டி வளர்க்க அடிப்படையான முயற்சியையாவது மேற்கொண்டதா? அல்லது பேரினவாதத்திற்கு துணைபுரியும் கோமாளித்தனமாக இருந்ததா? என்று கேட்டால் ''கோமாளித்தனம்'' என்பது சரியான முடிவாகும். எனவே மலையாண்டி ஒரு மாக்ஸியராக இருந்தால் அதனை எதிர்ப்பதை கடமையாகவே கொண்டிருக்க வேண்டும்.

பழைமைவாதம், குருந்தேசிய வாதம் என்பவற்றால் வடக்குக் கிழக்குப் போராட்டதில் ஏற்பட்ட பின்னடைவுகளை தெரிந்து கொண்டும், (பொன்னுசாமி மலையகத்தவராக இருந்ததால்) பழமைவாதம், குருந் தேசிய வாதம் என்பவற்றுக்கு சப்பை கட்டிக் கொண்டு கொழும்பு வீதிகளிலும் ஐரோப்பிய வீதிகளிலும் அலைந்து திரிந்து கொண்டிருக்கும் சில தமிழ் புத்திஜீவிகள் என்பவர்களின் கருத்துக்களை விழுங்கிவிட்டு அதனை மலையக தேசிய கருத்துகளாக வாந்தியெடுக்க கூடாது.

அவ்வாறு வாந்தி எடுப்பது பொன்னுசாமியின் சுதந்திரம் என்று கூறுவாராயின் நச்சுக் கருத்துகளுக்கும் சுதந்திரம் வேண்டுமா என்பது மலையக மக்கள் முடிவு செய்து கொள்வோம்.

பொன்னுசாமிக்கு குருந்தேசிய வாதம், பிரதேச வாதம் என்பவற்றை தேசியத்துடன் குழப்பும் ''வாந்திப்பேதி இருந்தால்'' அதற்கு வைத்தியம் அவசியம். மலையக தேசியத்தையும் சமப்படுத்த முற்படுவதும் மலையகத்தின் தேசியத்துடன் மலையக குருந்தேசிய வாதத்தை சமமாக ஒப்பிடுவதும் பொன்னுசாமியின் கொள்கையும் கோளாரே ஆகும்.

“தன் இருத்தலை மறுத்தலுக்கு எதிரான்” எழுதுவதை தேசியம் எனலாம். அது தவறல்ல. அது தவறு என்று மலையாண்டி கூறவில்லை. ஆனால் தன் இருத்தலை மறுத்தலுக்கு எதிரான போராட்டம் குருந்தேசிய வாதம். பிரதேச வாத கண்ணோட்டத்துடன் அல்லது அடிப்படையுடன் அமையக் கூடாது. அவ்வாறு அமையுமாயின் அழிவே மிஞ்சும்.

''மலைய மக்கள் மீதான ஒடுக்கு முறை வர்க்க இனத்துவ அடிப்படைகளை கொண்டது. எமது அடிமைத் தலைகளை அறுப்பது எமது சர்வதேசிய பார்வையில் முதல்ப டியாக அமையும்.'' ஆனால் குருந் தேசிய வாதம், பிரதேசவாத அடிப்படையில் எமது அடிமைத் தலைகளை அறுக்க முடியாது. அந்த அடிப்படையிலாக போராட்டம் எனப்படுவது இல்லாத ஊருக்கு பிரயாணம் செய்வதாகும், நாளை போய் நேற்று வருவ தாகும். எனவே சர்வதேச பார்வையில் அது முதற்படியாகாது.

பேராசிரியர் கைலாசபதி மரண வீட்டில் கைலாசபதி செத்ததை விட பேராசிரியர் சிவத்தம்பி செத்திருக்கலாம் என்று ஒரு மலையகத்தவர் கூறியதாக மலையாண்டி கூறியதை ஒரு பயமுறுத்தலாக சொல்லத் தேவையில்லை. அது உண்மையா, பொய்யா

என்றே பார்க்க வேண்டும். உண்மையானால் அத்தகைய நண்பர்களின் ''புரிந்துணர்விற்கு பேராசிரியர் சிவத்தம்பி எடுபட்டு இருக்கக் கூடாது. அவ்வாறு நபர்களுக்கு ஜால்ரா போடுவது பேராசிரியர் சிவத்தம்பி போன்ற மாக்ஸியர்களுக்கு இலுக்கேயாகும்.

பொன்னுசாமி போன்றவர்கள் மேற்கூறப் பட்ட கைலாசபதி மரண வீடு பற்றிய விடயத்தை கேட்டுப் பயப்படுகிறார்களா? அல்லது மலையாண்டியின் கொள்கை யையும் கருத்துகளையும் அவர்களது குருந்தேசிய வாதத்திற்கு எதிரான பலமான கொள்கையையும், கருத்தும் என்று அறிந்து பயப்படுகிறார்களா? நடைமுறைக்கு பதில் சொல்லும்.

1948 ம் ஆண்டு பிரஜா உரிமைச் சட்டம் கொண்டவரப்பட்ட போது மலையக மக்களுக்கு எதிராக நடந்து கொண்ட காலஞ்சென்ற ஜி.ஜி. பொன்னம்பலத்திற்கும் அவருக்கு எதிராக செயற்பட்ட காலம் சென்ற எஸ்.ஜே.வீ. செல்வநாயகத்திற்கும் வித்தியாசம் இருக்கிறது என்பதை மலையக மக்களின் முன்னேறியவர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் மற்றுமன்றி சாதாரண மக்களும் அறிவர். திரு. தொண்டமான் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராக தெரிவு செய்யப்பட்டதையும் வடகிழக்கு தமிழர்கள் ஏற்றுக் கொண்டனர். அவர் அணித்தலைவர் பதவியிலிருந்து விலகி யதையும் ஏற்க் கொண்டனர். மலையகத்தில் ஆசிரியர் தோட்ட சேவையாளராகக் கடமை யாற்றிய யாழ்ப்பாணத்தவர்களின் மலையக சமூக வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தவர் களையும் மலையக சமூக வளர்ச்சிக்கு எதிராக இருந்தவர்களுக்கும் மலையக மக்களுக்கும் வித்தியாசம் தெரியும். புத்தி ஜீவிகள் என்ற வேடத்தில் மலை யகத்துக்கு வரும் பிழையான பிற சமூக புத்திஜீவி களையும் இனம் காணவும் மலையகத்தில் பிழையான புத்திஜீவிகளையும் கோமாளி களையும் அடையாளம் கண்டு மலையாண்டி போன்றவர்கள் எழுதுவதால் தான் மலையக சமூகம் ஏனைய சமூகத் துடன் சரியான புரிந் துணர்வை வளர்க்க முடியும். அதைவிடுத்து உள்ளொன்று புறமொன்றும் வைத்திருக்கும் மலையக புத்திஜீவிகள் என்பவர்களுக்கும் ஏனைய சமூகங்களின் புத்திஜீவிகள் எனப்படுபவர் களுக்கும் ஏற்படும் உறவு அல்லது தொடர்பு இரண்டு சமூகங்களுக்கு இடையேயான புரிந்துணர்வாக வளர முடியாது. அப்படிப் பட்டவர்களின் மேலோட்ட மான தனிப்பட்ட சுயநலமிக்க சமூக புரிந்துணர்விற்கு எதிராக அமையுமாயின் அதனை அம்பலப்படுத்த வேண்டும். அந்த அம்பலப்படுத்தும் ஆரம்ப முயற்சியே மலையாண்டி செய்துள்ளார்.

எனவே மிகவும் சிறுபன்மையினரான மலையகத்தின் முன்னேறிய பிரிவினருக்கும் நாட்டின் ஏனைய தரப்பின் சிறுபான்மை யினரான முன்னேறிய பிரிவினருக்கும் இடையே வளர்ந்து வருவதாக கூறப்படும் புரிந்துணர்வை விட முழுமையாக பெரும் பான்மையான மலையக மக்களுக்கு ஏனைய சமூகத்தில் பெரும்பான்மையான மக்களுக்கும் இடையே சரியான புரிந் துணர்வை வள்ர்ப்பதேயே பிரதான கடமை யாக கொள்ள வேண்டும்.

# மலையகத் தமிழாராய்ச்சி நிலையம் கொட்டகலையில் அமைக்கப்படும்

அமைச்சர் புத்திரசிகாமணி முதலாவது மலையக தமிழாராய்ச்சி மாநாட்டை கடந்த ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடித்தார். இவ்வாண்டு தற்போது மாத்தளை, கண்டி, நாவலப்பிட்டி, அட்டன், நுவரெலியாவில் இரண்டாவது மலையக தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்த முற்பட்டு வருகிறார்.

மாவட்ட ரீதியாக மாத்தளை. கண்டி, நாவலப்பிட்டியை நடத்தி முடித்துள்ளார். அடுத்து அட்டனிலும், இறுதியாக நுவரெலி யாவிலும் நடத்தவிருக்கிறார்.

இது விடயமாக அவரை நேர் கண்ட போது, அவர் தந்த பதில்களும், மாநாட்டின் சிறப்பையும் இங்கு காணலாம்.

**கேள்வி :** இரண்டாவது மலையக தமிழா ராய்ச்சி மாநாடு எங்கே நடைபெற விருக்கின்றது?

**பதில் :** இரண்டாவது மலையக தமிழா ராய்ச்சி மாநாடு ஆய்வரங்குகள் தற்போது மாத்தளையிலும், கண்டியிலும், நாவலப்பிட்டி யிலும் நடந்துள்ளது.

அது அட்டனிலும் நடைபெற இருக்கிறது. இறுதி நிகழ்வாக நுவரெலியாவில் நவம்பர் மாதம் 15,16 ம் திகதிகளில் நடைபெறும். இப்போது நடந்து முடிந்துள்ளது முதலாவது தொடராகும்.

**கேள்வி :** தமிழாராய்ச்சி மாநாட்டின் நோக்கங்கள் எவை?

**பதில் :** மலையகத்தின் பாரம்பரிய கலை களையும் எமது மக்களின் பாரம்பரிய கலாசார பண்பாட்டு நடைமுறைகளை ஆராய்ந்து அவற்றைப் பாதுகாப்பதும் எதிர் கால சந்ததியினரிடம் அதை முழுமையாக ஒப்படைப்பதுமே இதன் நோக்கமாகும்.

இப்போது நடைபெற்று வரும் இந்த முன்னோடி நிகழ்ச்சிகள் பேராசிரியர்கள் எஸ். தில்லைநாதன், சோ. சந்திரசேகரன், மு.சின்னதம்பி போன்ற கல்விமான்களைக் கொண்டு ஆய்வு செய்தோம். அவர்களோடு எழுத்தாளர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், கவிஞர்கள் கலந்து கொண்டனர்.

**கேள்வி :** மத்திய மாகாணத்தில் மட்டும் நிறுத்தி விடாது நாடு தழுவிய ரீதியில், இம் மாநாட்டையும், அதன் இலட்சியங் களையும், விரிவுப்படுத்தும் வகையில் என்னென்ன நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளீர்கள்?

**பதில் :** ஊவா, சப்பிரகமுவ போன்ற பகுதிகளில் எமது மக்கள் வாழ்கின்றனர். அங்கு எல்லாம் இந்த மாநாட்டை சிறப்பாக நடாத்த ஏற்பாடுகளை மேற்கொண்டு உள்ளேன். குறிப்பாக ஊவாவில் எனது நண்பர் கே.வேலாயுதம் சாகித்திய விழா என்ற முறையில் ஏற்பாடுகளை மேற்கொண் டுள்ளார். இதனை விரிவுபடுத்தி, மலையக தமிழாராய்ச்சி மாநாடாக சப்பிரகமுவ போன்ற பகுதிகளில் சிறப்பாக நடத்தவே எண்ணியுள்ளேன்.

முழு இலங்கையை உள்ளடக்கிய முறையில் எமது ஆய்வும், ஆராய்ச்சியும், அமைகின்ற முறையில் அந்தந்த மகாண சபைகளில் அனுசரணையோடு மேற் கொள்ளத் திட்டமிட்டுள்ளேன்.

**கேள்வி :** முதலாவது மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் செல்வந்தர்கள், மற்றும் வர்த்தகர்களின் பங்களிப்பு குறைவாகவே இருந்ததே?

**பதில் :** பல செல்வந்தர்கள், வர்த்தகர்களுடன் எனது அமைச்சு மூலம் தொடர்பு கொண்டேன். ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானவர்களிடமிருந்து போதிய ஆதரவு கிடைக்கவில்லை. இருந்த போதிலும், எனக்கு கிடைத்துள்ள நிதியைக் கொண்டு ஓரளவிற்கு வெற்றிகரமாக நடத்தினேன். ஒரு அத்திவாரத்தை ஏற்படுத்தி வைத்தேன்.

**கேள்வி :** ஒரு மாநாட்டை சிறப்பாக நடத்த வேண்டுமானால், செல்வந்தர்களின் உதவி இன்றியமையாதது இம்முறை அவர்களின் உதவியை நாடுவீர்களா?

**பதில் :** நாடவே விரும்புகிறேன். செல்வந்தர்களும், வர்த்தகர்களும் மனமுவந்து உதவ வேண்டும் ஏனென்றால் அவர்களும் நம்மவர்களே! வர்த்தகத்துறையில் கொடி கட்டி வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் கணிசமானோர் இந்திய வம்சாவளித் தமிழர்கள், சிலர் மிகப் பெரிய செல்வந்தர்கள் வாரி வழங்குவதில் பின் நிற்காத அவர்கள் மலையக மக்கள் வரலாற்றை ஆவணப் படுத்தும் இம்முயற்சிக்கு அவர்களாக முன் வந்து உதவ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அப்படிப்பட்ட நல்ல உள்ளங்கள் நிறையவே இருக்கிறார்கள். அவர்கள் மனம் வைத்தால், மலையக தமிழாராய்ச்சி மாநாடு வெகு சிறப்பாக நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

குறிப்பாக ஆய்வரங்கில் கலந்து கொள்ளும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், பேராளர்களுக்கு உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து வசதிகளை செய்து கொடுப்பது செலவு மிகுந்த பணி இங்கே மலையக செல்வந்தர்கள் உதவ முடியும். அரசாங்கத்தின் தயவிலிருந்து விடுபடவும், மேலும் சிறப்பாக செய்யவும் வாய்ப்பிருக்கின்றது. மத்திய மாகாண சபை ஒரு குறிப்பிட்ட அளவில் தான் நிதி ஒதுக்கித் தருகின்றது. அதைக் கொண்டுதான் தளம் அமைத்துள்ளோம். நிறைவாக செய்வதற்கு எமது வர்த்தக சமூகம் மனம் வைக்க வேண்டும்.

**கேள்வி :** நீங்கள் இம்முயற்சியில் இருந்து நீங்க வேண்டிய நிலை ஏற்படுமாயின் மாநாட்டை தொடர்ந்து நடத்த ஒரு செயலகம் அவசியம். அது பற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில் :** கொட்டகலை நகரில் அமைய இருக்கும் செயலகத்தை ஒரு காப்பகமாகவே அமைக்கவிருக்கிறோம். அந்த காப்பகத்தில் ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள், உருவச் சிலைகள், ஆய்வுக் கட்டுரைகள், வெளியீடுகள், புகைப்படங்கள், அவ்வவ் காலங்களில் காலங்களில் வெளியிடப்படும் கவிதைகள், சிறுகதைகள், சமூக நாவல்கள், ஆராய்ச்சி கட்டுரைகள், தகவல்கள் போன்ற பல்வேறு ஆவணங்கள் வைக்கப்பட்டிருக்கும்.

அதே நேரத்தில் நூலகம், ஆய்வரங்கு, ஆடலரங்கு, கலாசார விழுமியங்கள் அதனை நெறிப்படுத்தும் அரங்கு போன்றவைகளும் அங்கு நிர்மாணிக்கப்படும்.

**கேள்வி :** இது ஐ.தே.க சார்பானது அல்லது இ.தொ.கா. செல்வாக்கு கொண்டது என்ற அபிப்பிராயத்தை ஏற்படுத்தாமல், இருக்க சகல தரப்பினரை கொண்ட செயற் குழு ஏற்படுத்தலாம் தானே? செல்வந்தர்கள், வர்த்தகர்கள், நலன் விரும்பிகளை எப்படி பயன்படுத்தப் போகிறீர்கள்?

**பதில் :** சுதந்திரமாகவும், கட்சி அரசியல் என்றில்லாமலும் செயற்படுத்தவே விரும்புகிறேன். நான் அரசியல் வாதி என்ற முறையில், தற்போதைய சந்தர்ப்பத்தை பயன் படுத்தி ஒரு தளத்தை அமைத்து கொடுத்துள்ளேன்.

மலையகத்தின் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஆய்வு செய்பவர்கள், அதில் நேரடியாக பங்கு கொள்பவர்கள் எவரும் அரசியல் வாதிகள் அல்லவே. நான் முன்பு தமிழாராய்ச்சி மாநாட்டில் வழிநடத்தியவர்களைப் பற்றி சொல்லியுள்ளேன். அவர்கள் அனைவரும் பேராசிரியர்களும், கல்விமான்களுமே ஒழிய அரசியல் நடத்துபவர்கள் அல்ல.

கட்டுரை வாசிப்பவர்கள், ஆய்வு செய் பவர்கள் இப்படிப்பட்ட அனைவரின் நிலைப் பாட்டை சற்று பின் நோக்கிப் பாருங்கள். இந்த செயலகத்தையும், காப்பகத்தையும் கட்டி காக்கப் போகின்றவர்கள் ஆய்வுத் துறையில் அக்கறை கொண்டவர்களும், எழுத்தாளர்களும், ஆர்வலர்களுமே என்பதை நினைவுப்டுத்திக் கொண்டால் போதும்.

சுயமாக இயங்கப் போகின்ற குழுதான் காப்பகத்தை பொறுப்பேற்கும். எனது பங்கை தொடர்ந்து எடுத்துச் செல்ல நான் தான் வர வேண்டும் என்பதல்ல ஆர்வமுள்ளவர்கள் தானாக வருவார்கள். செல்வந்தர்களும், வர்த்தகர்களும் இந்த பணிக்கு ஒத்தாசை புரிய வேண்டும் என்ற எதிர்பார்ப்பைத் தான் நான் முன் வைக்கிறேன். சகலரின் பங்களிப்பும் இதில் இருக்க வேண்டும். அந்த நல்லெண்ணம் ஒவ்வொருவர் மத்தியிலும் ஏற்பட்டாலே போதும்.

**கேள்வி :** விழாமலர், கட்டுரைகள் இவை களுக்கு ஏற்பாட்டுக் குழு அமைக்கப் பட்டுள்ளதா?

பதில் : ஆம், அமைக்கப்பட்டுள்ளது. மதியுரை குழு, செயற்பாட்டுக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழு வாசிக்கப் பட்ட கட்டுரைகளை தொகுத்து வெளியிடவும், முகமும் முகவரி என்ற புத்தகத்தோடு, சென்ற முறை பத்திரிகைகளில் வெளிவந்த தொடர் கட்டுரைகளை புத்தகமாக வெளி யிடவும் ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக வாரமஞ்சரியில் மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றி வெளியான தொடர் கட்டுரைகளை நூலாக வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**கேள்வி :** மலையக எழுத்தாளர்கள் இம் முறை கௌரவிக்கப்படுவார்களா?

**பதில் :** சென்ற முறை எழுத்தாளர் களையும், கவிஞர்களையும் கௌரவித் தோம். பொற்கிளியும் வழங்கினோம். குறிஞ்சித் தென்னவனுக்கு மூவாயிரம் ரூபா வழங்கி கௌரவித்தோம். அத்தோடு மறைந்த க. தமிழ்மாறன் குடும்பத்துக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கினோம். இம்முறை 23 பேர் கௌர விக்கப்படுவார்கள். தரமான நூல்களும் பரிசும் வழங்குவோம். தகுதியான நூல்களை கொள்முதல் செய்யவும் எமது அமைச்சு தயாராக இருக்கின்றது.

நாடகத்தில் ஆர்வமுள்ளவர்களுக்கு பயிற்சி பட்டறை ஒன்று நடத்தவும் தீர்மானித்துள்ளோம்.

**கேள்வி :** மலையக கலைகளை பாது காப்பது பற்றி.......

**பதில் :** ஆம், குறிப்பாக தமுறு, தப்பு, உறுமி, சேகண்டி, சலங்கை, நாதசுரம், மேளம், உடுக்கு போன்ற வாத்திய கருவி களுடன் ஏனைய கலைக் கருவிகளையும் பாதுகாத்து வரவும், அந்த துறையில் ஆர்வ முள்ளவர்களை ஊக்குவிக்கவும் திட்டமுண்டு.

இறுதியாக நமது கலையும், கலாசாரமும் போற்றி பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நாட்டார் பாடல்களையும் பாதுகாத்து வைப்போம். காப்பகத்தின் அமைப்பு எமக்கு மிக முக்கிய மானது என்பதை எதிர்காலந் தான் தீர்மானிக்கும். மலையக தமிழாராய்ச்சி மாநாட்டின் வெற்றி சகலரின் கையில் தங்கியுள்ளது என்றார்.

நேர் கண்டவர் : பி.எம். லிங்கம்

# கங்குலன் பக்கம்

## இரண்டாவது மலையகத் தமிழாராய்ச்சி மகாநாடு

மலையக தமிழாராய்ச்சி மாநாடு ஏற்பாட்டுக் குழுவினருக்கு தமிழ் அபிமானி களின் அன்பான வேண்டுகோள்.

1996ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் திகதி முதல் 19ம் திகதி வரை மூன்று நாட்கள் இலங்கையில் முதல் மலையக தமிழாராய்ச்சி மாநாடு பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மண்டபத்தில் நடை பெற்றது.

இம்மாநாடு வருடாவருடம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றும் இம்மாநாடு இலங்கை என்ற ரீதியாக நின்று விடாது சர்வதேச அளவில் விரிவுப் பெற வேண்டு மென்ற மலையகத் தமிழ் மக்களின் எதிர் பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் அதன் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்ற எண்ணத்தோடு முதலாவது மலையக தமிழா ராய்ச்சி மாநாடு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாநாடும் பலவிதக் குறைபாடுடன் இனிதே நடந்து முடிந்தது என்பதை நாம் அறிவோம்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அளவில் இரண்டாவது மலையக தமிழாராய்ச்சி மாநாடு நடக்க இருப்பதாகவும் அதற்கான பிரமாண்டமான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் இனிப்பான செய்தி காற்றோடு கலந்து நம் காதில் விழுந்தது சந்தோஷப்படுகின்றோம்.

கடந்த முதலாவது மலையகத் தமிழா ராய்ச்சி மாநாட்டில் பல குறைகள் இருந்ததை தாங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நினைக் கின்றோம். அவ்வாறான குறைபாடுகள் இந்த மகாநாட்டிலும் ஏற்படாதிருக்க வேண்டும் என்பதை உங்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறோம்.

முதலாவது மாநாடு என்றபடியால் மன்னித்து விடலாம். திரும்பவும் தவறுகள் ஏற்பட்டால் அது வேண்மென்றே புறக் கணிக்கப்பட்ட தவறாக ஆகிவிடாதா...!

1960 களில் ஆரம்பிக்கப்பட்ட மலைநாட்ட எழுத்தாளர் மன்றம், அது நடத்திய ஆறு மலையக சிறகதைப் போட்டிகள் மூலம் பல மலையக எழுத்தாளர்களை உருவாக்கியது என்பதை மறுக்க முடியுமா? அதன் காரண கர்த்தாவாக இருந்த திரு. எஸ்.எம். கார் மேகத்தை முதலாவது மலையக தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அழைக்காமல் விட்டது முதல் தவறு இன்று மலை போல் வளர்ந்திருக்கும் பல மலையக எழுத்தாளர்களுக்கு இலக்கிய நீர் பாய்ச்சியவர் திரு. கார்மேகம் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தவர் திரு. ரா.சிவலிங்கம், மலையக இளைஞர் முன்னணியை ஸ்தாபித்து இன்று இலக்கியத் துறையிலும் அரசியல் துறை யிலும் கொடிகட்டிப் பறக்கும் அன்றைய இளைஞர்களைத தட்டி யெழுப்பி புதிய இரத்தம் பாய்ச்சியவர் என்ற வகையில் அவரையும் அழைத்து கௌரவிக் காதது பெருங்குறை!

இலக்கிய ஆசானாக இருந்து பல நாடக நடிக கலைஞர்களை உருவாக்கிய நமது இலக்கிய ஆசிரியர் தி.எஸ்.திருச்செந்தூர னையும், மலையக கலை இலக்கியத்தை

ஆங்கில மொழியில் உலகுக்கு எடுத்துக் காட்டிய திரு. பொ.கிருஸ்ணசாமி போன் றோரையும் அழைத்துக் கௌரவிக்கத் தவறியமை

இலைமறை காயாய் இருக்கும் பல தகுதிவாய்ந்த திறமைமிக்க எழுத்தாளர்கள், கலைஞர்களை கௌரவிக்க வசதியாய் மறந்து போனமை.

எல்லாவற்றிற்கும் மேலான கலை இலக்கிய கலாசார ஆர்வமிக்க வர்த்தகப் பெருந்தகை களை அரவணைத்துக் கொள்ளாமை போன்ற இன்னோரன்ன தவறுகளை இரண்டாவது மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ஏற்பட்டு விடக் கூடாதென்பது எமது வேண்டுகோள்.

முக்கியமாக பிரதேச சபை, மகாண சபை மூலம் கிடைக்கும் பணத்தை எதிர் பார்க்காது கலை, இலக்கிய, கலாசார பண் பாடுகளில் ஈடுபாடு கொண்ட வர்த்தகர்களை முன்னிருத்தி மகாநாட்டை சிறப்பாக நடத்தி முடிக்க வேண்மென்று ஏற்பாட்டுக் குழுவிடம் கேட்டுக் கொள்கிறோம்.

ஏற்பாட்டுக் குழு இவைகளை ஏற்றுக் கொண்டு ஏற்பாடு செய்யுமா? எதிர்பார்க் கிறோம்!

# நவம்பர் 15 இல் மத்திய மாகாண தமிழ் சாகித்திய விழா

மஸ்கெலியா,

மத்திய மாகாண "தமிழ் சாகித்திய விழா" எதிர்வரும் நவம்பர் மாதம் 15ஆம், 16ஆம் திகதிகளில் மத்திய மாகாண (தமிழ்) கல்வி யமைச்சர் வீ. புத்திரசிகாமணி தலைமையில் நுவரெலியாவில் நடைபெறும்.

மேற்படி சாகித்திய விழாவை முன்னிட்டு 14ஆம் திகதி கொட்டகலையில் "மலையகத் தமிழாராய்ச்சி ஆய்வக" கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவும் இடம் பெறும்.

இவ்விழாவில் மலையக படைப்பாளி களினால் எழுதப்பட்டு 1995 ஆம் ஆண்டில் வெளிவந்த சிறுகதை, கவிதை, நாவல், ஆய்வு, வரலாறு சமூகவியல், விமர்சனம், மொழிபெயர்ப்பு, தத்துவம், குழந்தை இலக்கியம் முதலான நூல்களுக்கு விருதுகளோடு பொற்கிளியும் வழங்கப்படும்.

அத்தோடு இந்து கலாச்சாரம், படைப் பிலக்கியம், ஓவியம், சிற்பம், நாடகம், நடனம் முதலானவற்றில் திறமை வாய்ந்தவர் களுக்கு பொற்கிளியோடு விருது வழங்கி கௌர விக்கப்படுவார்கள்.

மேலும் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியர் எஸ்.தில்லை நாதனின் மணிவிழாவை முன்னிட்டு சிறப்பு விருது வழங்கி கௌரவிக்கப்படுவார். அதே போல் அகில இலங்கை தமிழ் மொழி தினப் போட்டிகளில் நாடகப் போட்டியில் முதலா மிடத்தைப் பெற்று மலையகத்துக்குப் பெருமை தேடித் தந்த அட்டன் வெலிங்டன் தமிழ் வித்தியாலயத்திற்கும் விசேட விரு தோடு பொற்கிளியும் வழங்கப்படவுள்ளது.

மலையக எழுத்தாளர்களின் விபரங் களடங்கிய "முகமும் முகவரியும்" என்ற நூலும் மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு கண்டி, மாத்தளை, நாவலப்பிட்டி, கொட்டகலை முதலான இடங்களில் நடை

பெற்ற கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளில் தொகுப்பு நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளன.

தமிழாராய்ச்சி மாநாடு சம்பந்தமாக பத்திரிகைகளில் அவ்வப்போது வெளிவந்த செய்திகள், விமர்சனங்கள் முதலானவையும் தனி நூலாக வெளியிடப்படவுள்ளது.

இதற்கான விரிவான ஏற்பாடுகளை மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சின் மதியுரைக் குழு மேற்கொண்டுள்ளது.

மத்திய மாகாண சாகித்திய விழாவில் "முகமும் முகவரியும்" நூல் வெளியீடு **மஸ்கெலியா, தமிழ் சாகித்திய விழாவை முன்னிட்டு "முகமும் முகவரியும்" என்ற நூல் வெளியிடப்படவுள்ளது.** இதில் மலையகத்திலுள்ள எழுத்தாளர்களின் விபரங்கள் இடம் பெறவுள்ளதாகவும் எதிர்காலத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளவர் களுக்கு இத்தகைய நூல் பெரிதும் உதவி யாக இருக்கும் என்று மத்திய மாகாண (தமிழ்) கல்வியமைச்சர் வீ. புத்திரசிகாமணி தெரிவிக்கிறார்.

எனவே மேற்படி தொகுப்பு நூலில் இடம் பெற தமது பெயர், முகவரி, வயது, தொழில். ஈடுபாடு கொண்டுள்ள துறை இதுவரை பெற்றுள்ள விருதுகள், வெளியிடப்பட்டுள்ள நூல்கள் போன்ற விபரங்களுடன் அக்டோபர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும் படி எழுத்தாளர்கள் வேண்டப்படுகிறார்கள்.

விபரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி: தலைவர், இலக்கிய மதியுரைக்குழு, த.பெ.இல : 132இ கச்சேரி, கண்டி.

# மலையக ஆய்வரங்குக் கட்டுரைகள் நூலுருவம் பெறவேண்டும்

வி.எம்.செல்லையா

மலையக தமிழாராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு மலையக நகரங்களில் ஆய் வரங்குத் தொடர்கள் தொடர்ச்சியாக நடத்தப் பட்டு வருகின்றன. இது மிகவும் பாராட்டத் தக்க நல்லதொரு செயற்பாடு.

இன்று நாவலப்பிட்டியில் இத்தொடரின் ஐந்தாவது அங்கம் நடைபெறுகிறது. இத் தொடர் கருத்தரங்குகளை அவதானித்து வருவோரில் சிலர், இப்படி கருத்தரங்குகள் நடத்தப்படுவது அவசியமா? சில தனி நபர்கள் தமது பெயரை பிரபல்யப்படுத்திக் கொள்ளவும் புகழ் ஈட்டிக் கொள்ளவுமே இக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறார்கள் என்றும்,

இதற்கு செலவு செய்யும் பணத்தைச் சேமித்து தமிழாராய்ச்சி மாநாட்டை கோலா கலமாக நடத்தலாமே! இந்த ஆய்வு மாநாடு எப்போது நடத்தப்பட இருக்கிறது என்பது தெரியாத அல்லது வெளிப்படுத்தப் படாத நிலையில் இப்படி ஆய்வரங்குகளை நடத்திக் கொண்டிருப்பதில் கிடைக்கும் பலன் தான் என்ன? என்றெல்லாம் கேள்வி எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

குறை கண்டுபிடிக்க வேண்டும் என்பதற் காகவும், திருத்திக் கொள்ள வேண்டும் என்ற எதிர்ப்பார்ப்பிலும், வெறும் எரிச்சலிலும் விமர்சனங்கள் அமைகின்றன.

ஆனால் மேற்கண்ட விமர்சனத்தை ஆராயும் போது அதில் ஏற்றுக் கொள்ளத் தக்க எந்த அடிப்படையும் இல்லை என்ப தையும் நிர்மாண ரீதியான விமர்சனம் என்பதற்கான இலக்கணங்களை அது கொண்டிருக்க இல்லை என்பதையும் அறிய முடிகிறது.

ஏனெனில் மலையக இலக்கியம், கலாச் சாரம், வரலாறு தொடர்பான ஆக்கபூர்வமான கருத்தரங்குகள் தொடர்ச்சியாக சமீப காலத்தில் மலையகப் பிரதேசத்தில் நடை பெற்றதாகத் தெரியவில்லை. இக்கருத் தரங்குகள் படித்தவர்கள் மத்தியில் ஒரு விழிப் புணர்வை ஏற்படுத்தி இருப்பதை மறுப்பதற்கில்லை. மலையக தமிழாராய்ச்சி மாநாடு வெற்றிகரமாக நடைபெற இத்தகைய கருத்தரங்குகள் களம் அமைத்துக் கொடுக்கும்.

ஆகவே வலிந்து குறைசொல்லும் பாங்கிலான விமர்சனங்களை ஒதுக்கிவிட்டு, நிர்மாண ரீதியிலான விமர்சனங்களை இக்கருத்தரங்கு ஏற்பாட்டாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே நடத்தப்பட்டுள்ள நான்கு ஆய்வரங்குகளை சீர்தூக்கிப் பார்த்தால், சிறந்த கல்விமான்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளில் பெயர் பெற்றவர்கள் அங்கே கட்டுரைகளை சமர்ப்பித்திருப்பதை காண முடிகிறது. ஆய்வு ரீதியாக அணுகப்பட்ட கட்டுரைகளும் அவற்றுள் அடக்கம் மலையகத்தைப் பின்புலமாகக் கொண்ட இவ்வாறான ஆய்வுக் கட்டுரைகள் சமீப காலமாக அதுவும் குறுகிய ஒரு காலப் பகுதியில் வெளிவரவில்லை. ஆகவே இக் கட்டுரை வெறும் சொற்பொழிவாக மட்டும் இருந்துவிடலாகாது. இவை பிற்காலத்திலும் மீள் உபயோகத்தின் பொருட்டு பாது காக்கப்பட வேண்டும். அல்லவா?

ஆகவே, ஆய்வரங்குகளில் சமர்ப்பிக்கப் படும் சகல கட்டுரைகளும் நூலுருவம் பெறுவது அவசியமாகிறது. அத்தனை கட்டுரைகளையும் அப்படியே நூலுருவில் கொண்டு வருவது சாத்தியம் இல்லை என்றால், அவை தொகுக்கப்பட்டு செய்யப் பட்டு அல்லது சிறந்தவை எனக் கருதப்படும் கட்டுரைகளையாவது நூலுருவில் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.

கட்டுரைகள் நூல் உருவில் கொண்டு வரப்படவுள்ளன என்பது பகிரங்கமாக தெரிவிக்கப்படுமானால், அதற்கான ஆசிரியர் குழுவை அமைக்கவும் புத்தக வெளி யீட்டுக்கான செலவைப் பெறுவதற்கான வழி களை ஆராயும் வழிகள் ஏற்படும். கதவுகள் திறக்கும்.

இப்படியான ஒரு நல்ல காரியத்தைச் செய்து முடிப்பதில் விருப்பம் கொண்ட பலர் மலையகத்தில் இருக்கிறார்கள் என்பதை மட்டும் ஏற்பாட்டாளர்கள் மறந்து விடக் கூடாது.

# கற்குலன் பக்கம்

தமிழ் மாணவ, மாணவிகளே, உங்கள் கவனத்துக்கும் கருத்துக்கும் எழுதுவது.

மத்திய மாகாண கல்வி (தமிழ்) அமைச்சர் வீ. புத்திரசிகாமணியின் ஏற்பாட்டிலும், கலாச்சார உத்தியோகத்தர் திருமதி நளாயினி சுப்பையாவின் உதவியாலும் மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆய்வரங்கு கண்டியில் நடைபெற்றது.

ஆய்வரங்கில், "மலையகத்தின் கிறிஸ்தவ எழுத்தாளர்கள்" என்ற தலைப்பில் பல சரித்திர ஆதாரங்களோடு மலையகத்தின் மூத்த எழுத்தாளர் திரு. தெளிவத்தை ஜோசப்பும்,

"மலையகத்தில் முஸ்லிம் எழுத்தாளர் களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் "கொலுந்து" சஞ்சிகை ஆசிரியர் திரு. அந்தனி ஜீவாவும்,

"மலையகம் பற்றிய ஆங்கில ஆக்கங்கள்" பற்றி மலையகத்தின் முன்னோடி எழுத் தாளரும் சாகித்திய விருது பெற்றவருமான திரு. சாரல் நாடனும் ஆய்வு கட்டுரைகளை வாசித்தார்கள்.

இம்மூவரின் ஆய்வுக் கட்டுரைகள் எழுத்து வடிவில் வரவுள்ளன. இவைகளை நாம் தேடிப்பிடித்து விபரமாக விளக்கமாக படித்துக் கொள்ளலாம் ஆனால்,

"மலையக தமிழ் இலக்கியத்தில் சிங்கள எழுத்தாளர்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் திரு. ரட்நாயக்க வணசிங்க ஆற்றிய, ஆழ்ந்த கருத்துமிக்க சிங்கள சொற்பொழிவு நம்மை சிந்திக்க வைத்தது என்றால் மிகையாகாது.

இம்மாநாட்டின் ஆய்வரங்கில் கலந்து கொண்ட உயர் வகுப்பு மாணவ, மாணவி களை விளித்து அவர் ஆற்றியவுரை கருத்திற் கொள்ளத்தக்கது.

"இந்த மாணவர்களுக்கு முக்கியமான ஒரு கதையைச் சொல்லிவிட்டு எனது உரையை ஆரம்பிக்கிறேன் என்றார் அவர்.

துட்டகைமுனு - எல்லாளன் மன்னர்கள் தான் தமிழ் சிங்கள இனத்துவேசத்தை ஏற்படுத்தினார்கள் என்றும் அதன் பிறகே இந்நாட்டில் துவேசமிக்க வன்செயல்கள் ஏற்பட்டு வருகின்றன என்றும் பரவலான ஒரு நம்பிக்கை நிலவுகின்றது. இவையாவும் துட்டகைமுனு - எல்லாளன் மன்னர்களின் பெயரில் எழுதப்பட்ட பொய்யான தகவல்கள். இவர்கள் பெயரால் நாட்டில் இனக்குரோதம் தூபமிட்டு வளர்க்கப்பட்டது என்பதை நீங்கள் இளைஞர் யுவதிகள் புரிந்து கொள்ள வேண்டும்" என்று திரு. ரட்நாயக்க வண சிங்க தனது உரையை தொடர்ந்தார்.

இலங்கையில் வடக்கே எல்லாளனும், தெற்கே துட்டகைமுனுவும் ஆட்சி செய்த காலத்தில் இருவருமே பதவி மோகம் கொண்டிருந்த படியால் தான் வடக்கையும் தெற்கையும் தனது ஆட்சிக்குள் கொண்டுவர வேண்டும் என்று இருவருமே பேராவலுடன் முடிவு செய்து கொண்டு போர் நடத்தினார்கள்.

எல்லாளன் படையில் பெரும்பான்மை இனராக சிங்களவர்களும், துட்டகைமுனு படையில் அதிக பேர் தமிழர்களாகவும் இருந்தனர். பதவி மோகத்தில் இவர்கள் சண்டையிட்டுக் கொண்டார்களே தவிர,

துட்டகைமுனு பௌத்த மதத்தை பாதுகாத்து அரசாளவோ, எல்லாளன் இந்து மதத்தை பாதுகாத்து அரசாளவோ, தமிழ்-சிங்களம் என்ற இனவாத ரீதியிலே போரிட்டுக் கொள்ளவோ இல்லை. இது தான் உண்மை இதை இளைஞர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால் சரித்திர ஆசிரியர் இதை இனத்துவேச ரீதியில் தமிழர்களுக்கும்

சிங்களவர்களுக்கும் இரண்டு இனங்களுக்கும் எதிரிகளாக கதைகளை திரிபு படுத்திய தாலேயே இன்று இனத்துவேசம் தலைவிரித் தாடுகின்றது. என்று திரு வணசிங்க குறிப்பிட்டார். திருப்திபடக் கூடிய விதத்தில் சிங்கள பத்திரிகைகளிலும், தமிழர் திருப்திபட கூடிய விதத்தில் தமிழ் பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இன்று வடக்கில் யுத்தம், எது எப்படி நடந்தாலும் சிங்களவர்கள் திருப்திபட கூடிய விதத்தில் சிங்கள பத்திரிகைகளிலும், தமிழர் திருப்திபட கூடிய விதத்தில் தமிழ் பத்திரிகை களிலும் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

செய்திகளை படிக்கும் சிங்கள மக்கள் அதை இன்னும் விசாலப்படுத்தி மக்கள் மத்தியில் இன துவேசத்தை பரப்புகிறார்களே அன்றி சிங்கள எழுத்தாளர்கள் எழுதும் இலக்கியங்கள் மலையக தமிழர்கள் சார் பாக எழுதும் விடயங்கள் தமிழ் மக்களைச் சென்றடைவதில்லை.

அதே போல் சிங்கள தமிழ் இன ஐக்கியம் பற்றித் தமிழ் எழுத்தாளர்களின் கதை கட்டுரை கவிதைகள் சிங்களவர் களுக்குப்போய் சேர்வதில்லை.

மலையக மக்களின் அவல வாழ்க்கை நிலைபற்றியும், அவர்களின் ''லயன்'' குடி யிருப்பு பற்றியும் நான் சிங்களத்தில் தொடர்ந்து எழுதி வருகிறேன். இதைப் படித்த பல சிங்கள அறிஞர்களும் புத்திஜீவிகளும் என்னை ஒரு பைத்தியக்காரன் என விமர்சிக் கிறார்கள்.

இந்நிலையில் எனக்காகப் பரிந்து பேசி என்னை காப்பாற்ற ஒரு தமிழரோ சிங்கள வரோ கிடையாது.

மலையக மக்களை கருவாக வைத்து அறுபதுகளிலிருந்தே சிங்கள எழுத்தாளர்கள் எழுதி வருகிறார்கள். பதுளையில் இருந்து “சுந்தரம் சஹா பொடி மெனிக்கே'' என்ற கவிதை நூல் திரு. கொடிதுவக்கு எழுதிய “இந்து லங்கா'' என்ற காவியம் கலாநிதி பியதாச எழுதிய “கரங்களை இணைப்போம'' என்ற நாவல், திரு. பியதாச வெயிகந்த எழுதிய ''வாழ்க்கை நின்று விட்டது'' என்ற நூல் போன்ற எத்தனையோ நூல்கள் வெளி வந்து கொண்டுதான் இருக்கின்றன. இவை களை நீங்கள் படித்ததுண்டா?

இவ்வாறான குரோத மனப்பான்மை எதனால் ஏற்படுகின்றது? தமிழர்கள் சிங்களம் படிக்காததினாலும், சிங்களவர்கள் தமிழ் கற்காததினாலும் தான் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

பெற்றோர்களாகிய நீங்கள் பெபோதும் தமிழர்கள் என்பதால் நாங்கள் இந்நாட்டில் இரண்டாம் பிரஜைகள் அல்ல என்பதை உங்கள் பிள்ளைக்குச் சொல்லி வைக்க வேண்டும். அப்படி சொல்லி வைக்காவிட்டால் அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து தாங்கள் அடிமைத்தனத்துக்கு பயந்த சுபாவத்துக்கும் ஆளாவார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

“பௌத்த மதக் கொள்கைகளுக்கும் இந்து மதக் கொள்கைகளுக்கும் நிறைய தொடர்புகள் இருக்கின்றன. இவைகளை இரண்டு மதங்களின் கல்யாண - மரண வைபவங்களில் காண்கிறேன்''. இவ்வாறு திரு. ரட்ணாயக்க வணசிங்க பேசியது எமது மனதில் ஒரு புத்துணர்வை ஏற்படுத்தியது என்பது உண்மை.

இலங்கையின் சிறார்களின் பாட புத்தகங்களில் இப்படியான துட்டகைமுனு - எல்லாளன் கதைகளை புகுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். தடைசெய்யப்பட வேண்டும் என்று பத்திரிகையாளர் திரு. க.ப. சிவம் குறிப்பிட்டார் என்றாலும்,

நாங்கள் இந்நாட்டின் இரண்டாம் பிரஜைகள் இல்லை என்பதை நம் சந்ததியினருக்கு சொல்லி வைப்பதும் நாமும் இந்நாட்டின் தேசிய இனம் என்பதை வலியுறுத்துவதும் போற்றத்தக்கது.

தமிழ் சிங்கள இனங்களுக்கிடையே ஒற்றுமை நிலைத்திருக்க வாழ்த்துவோம். வணங்குவோம்.

# மலையக தமிழாராய்ச்சி ஆய்வரங்குகளின் கருத்துக்கள் புத்தகமாக வெளிவரும்

நாவலப்பிட்டியில் நடைபெறும் 5ஆவது ஆய்வரங்கில் மத்திய மாகாண அமைச்சர் புத்திரசிகாமணி தகவல்

"மலையகம்" என்ற பெயர் தோன்றும் முன்னரே நாவலப்பிட்டியில் இந்து ஆலயங்கள், மன்றங்கள் அமைந்து "நாவலா நகர்" என்ற நாமத்தோடு தமிழ் வளர்த்த பெருமை இந்த நகருக்கு உண்டு. நுவரெலியா தமிழ் மக்கள் அன்று செறிந்து வாழ்ந்த போதிலும் ஒரு தமிழ் இந்து ஆலயம் கூட இல்லாத நிலை இருந்தது. அந்நிலை மாறி இன்று "மலையகம்" என்ற பதம் பரிணமித்து நுவரெலியாவில் தமிழ் ஆய்வு அரங்குகள் மலையகத்தின் பண்டைக்கால பெருமை களை, கலை, கலாச்சாரம் பாரம்பரியத்தை தமிழ் உலகுக்கு எடுத்துக்காட்ட நுவரெலி யாவில் நடைபெற இருக்கும் மலையக தமிழா ராய்ச்சி மாநாடு வழிவகுத்து இருக்கிறது.

நாவலப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான தமிழ் கலாச்சார மண்டபத்தில் இடம் பெற்ற ஐந்தாவது ஆய்வரங்கான மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் பிரதம அதிதியாக கலந்த கொண்ட மத்திய மாகாண கல்வி (தமிழ்) கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி, வர்த்தக வாணிப, சுற்றுலாத் துறை இந்து கலாசார அமைச்சர் வீ. புத்திர சிகாமணி சிறப்புரை ஆற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாகும் முன் வருகை தந்த பிரமுகர்களை நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் அதன் தலைவர் எஸ். முத்தையா வரவேற்று விசேட பூஜையின் பின் காளாஞ்சி வழங்கி கௌரவித்தார். விழா மண்டபத்திற்கு மேள வாத்தியம் முழங்க ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நகரபிதா கெமுனுசுமதிபால உட்பட பிரமுகர்கள் மங்கள விளக்கேற்ற பாடசாலை பாடசாலை மாணவியரின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா ஆரம்பமாகியது. மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு உத்தி யோகத்தர் திருமதி நளாயினி சுப்பையா வரவேற்புரை ஆற்றினார்.

அங்கு சிறப்புரை ஆற்றிய மத்திய மாகாண அமைச்சர் புத்திரசிகாமணி மேலும் குறிப்பிட்டதாவது:

மலையகத்தின் பல்வேறு நகர்களில் இவ்வித ஆய்வரங்குகள் இடம் பெற்று இன்று நாவலப்பிட்டியில் ஐந்தாவது இறுதியானது மான ஆய்வரங்கு நடைபெற்றுக் கொண் டிருக்கிறது. அடுத்த ஆண்டில் புதிய ஆய்வுகள் இடம்பெறும்.

இதுவரை இடம் பெற்ற ஆய்வுகளின் கருத்துக்கள் நுவரெலியா மாநாட்டில் புத்தக மாக வெளியிடப்படவுள்ளது. அத்துடன் மலையகம் பற்றிய பத்திரிகைச் செய்திகள்

விமர்சனங்கள் கூட நூல் அமைப்பில் வெளி யிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வித பத்திரிக்கைச் செய்திகள் மற்றும் நூல்களின் மூலம் தமிழ் ஆய்வு பற்றி தமிழின் அருமை பெருமை பற்றி எதிர்கால சந்ததியினரும் அறிந்து உணர வாய்ப்பு அளிப்பதுடன் அருகிவரும் எமது சூழலையும் நினைவுபடுத்தும்.

விஞ்ஞானத்தை மாற்றி சொல்ல முடியாது இருந்தும் அவற்றில் புதிய கண்டுபிடிப்புக்கள் ஆய்வுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

மலையகத் தமிழை ஆராய்ந்து கொண்டு போனால் மொழி வழக்கு ஓசை ஒரு பகுதிக்கு பகுதி வித்தியாசப்படும் பேச்சு வழக்கு ஓரி டத்திற்கு ஓரிடம் மாறுபடக் காரணம் தென் இந்தியாவிலிருந்து ஒவ்வோர் மாவட்ட மக்கள் வெவ்வேறு இடங்களுக்கு சென்று சேர்ந்ததன் பின்னணியே ஆகும். இதனை உடபுசல்லாவ கந்தப்பொல, நானுஓயா, அட்டன் பகுதிகளில் காணலாம்.

அதுபோல் நுவரெலியா, நானுஓயா பகுதிகளில் அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர், காமன் கூத்து என்பதெல்லாம் என்னவென்று தெரியாத நிலையிலிருந்தது. தலவாக் கலைக்கு கீழுள்ள தோட்டங்களில் இவை நாடகமாக ஆண்டு தோறும் நடத்தப்பட்டு பாரம்பரியம் பேணப்பட்டு வருகிறது.

மலையகத்தில் ஒருவரின் பிறப்பு முதல் பல்வேறு நிலைகளிலும் இருந்து இறப்பு வரை தப்பு பயன்பட்டு வந்தது. அந்த அரிய தாளக் கருவி இன்று அருகிவிட்டது.

கண்டி ராஜ்ஜியத்தின் கடைசி மன்னன் ஸ்ரீவிக்ரம ராஜசிங்கன் ஒரு தமிழன் இவன் சிங்களவனாக பெயர் சூடிய போதும் அவன் மனைவி ராக்கம்மா இறக்கும் வரை தமிழச்சி யாக வாழ்ந்தாள்.

இந்தோனேசியாவின் பாலித்தீவில் தமிழ் அருகி விட்ட போதிலும் இந்து கலாச்சாரம் அங்கு இன்னும் அழியவில்லை. சிறுவர் முதல் பெரியோர் வரை பங்கேற்கும் இராமாயண நாடகம் இதற்கோர் சான்று. புதிய கண்டு பிடிப்புகள் பழமையை மறைத்து விடுகின்ற போதிலும் எமது பாரம்பரிய கலை கலாச் சாரத்தை நாம் மறக்காமல் பேணிக் காத்தல் அவசியம். பாரம்பரிய கலைகளில் நாம் ஈடுபாடு கொண்டு அவற்றைக் காப்பாற்ற முன்வர வேண்டும் என்கிறார்.

நாவலப்பிட்டி நகரபிதா கெமுனு சுமதி பால தமது உரையில் :

இன்று நடைபெறும் மலையக தமிழா ராய்ச்சி மாநாட்டில் என்னால் தமிழில் பேச முடியாவிட்டாலும் தமிழின் தொன்மை பெருமைகளை நான் அறிவேன். சிங்களவர் இந்நாட்டின் பழங்குடி மக்கள் அதே போல் தமிழர்களும் பழமைமிக்க பாரம்பரியங் களுடன் இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஆரம்பகாலம் முதல் இரு இனத்தவருக்கும் உள்ள கலை, கலாச்சார ஒற்றுமை பற்றி ஆராய வேண்டும்.

இரு சாராரும் ஒற்றுமையாக வாழ்ந்து இது எமது நாடு ஒரே மக்கள் ஓரினம் என்று வாழ பிரார்த்திக்கிறேன் என்றார்.

தலைமை தாங்கிய பேராசிரியர் எம்.சின்னத்தம்பி (பொருளியல் துறை தலைவர் பேராதனைப் பல்கலைக்கழகம்) பேசும் போது :

வண. தனிநாயகம் அடிகளாரால் முதல் முதல் கோலாலம்பூரில் ஆரம்பமான உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு தமிழ் நாடு, பாரிஸ், இலங்கை, என பல்வேறு நாடுகளிலும் நடைபெறுகிறது. அதே வேளை நம் நாட்டில் மலையகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெறுவது எமது பண்டைக் கலாச்சார பாரம்பரியங்களை பேணிக் காப்பதற்கு ஆகும். அது எமது கடமையும் கூட. தமிழ் மொழியின் ஆரம்ப நூல் அகத்தியம் அழிந்து பட்டாலும் தொல்காப்பிய காலந் தொட்டு எமது மொழி பல் சிறப்புகளைக் கண்டு வந்துள்ளது.

மலையகத்தவருக்கும் பாரம்பரியம் உண்டா என பல தமிழறிஞர்கள் கேள்வி கேட்டனர். தென் இந்தியாவிலிருந்து வெறும் கூலிகளாக மட்டும் வரவில்லை. அவர்கள் தம் பாரம்பரிய கலை கலாச்சாரத்தையும் தம்முடன் கொண்டு வந்து அவற்றை தாம் வாழும் மண்ணில் பேணிக் காத்து வந்தனர். அதற்கு அடையாளமாக மாரியம்மன் வழிபாடு, தாலாட்டு, கும்மி, தப்பிசை நாடகங்கள் என்பன உள்ளன. எம்மவர் அதனை மறந்து வருகின்றனர்.

எம்மிலும் பார்க்க யாழ்ப்பாணத்தவர் இவற்றில் கூடுதல் ஆர்ம் காட்டுகின்றனர். எமது கலை கலாச்சாரங்களை பேணி பாதுகாத்தல் அவசியம். அதற்கு இவ்வித ஆய்வரங்குகள் மாநாடுகள் வழிவகுக்கும் என்றார்.

கலை கலாச்சார மதியுரைக்குழு தலைவர் தி.வி. மாரிமுத்து (கொட்டகலை பிரதேச சபைத் தலைவர்) பேசுகையில் :

அமைச்சர் புத்திரசிகாமணியின் எண்ணத்தில் தோன்றிய இந்த ஆய்வரங்கு இன்று மலையக மலை முகடுகளிலெல்லாம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. எமது வரலாற்றை மறக்காமலிருக்க இவ்வித ஆய்வுகள் அவசியம்.

நுவரெலியாவில் இடம்பெற உள்ள விழாவில் எமது ஆய்வுகள் நூல் உருப் பெற்று வரும். உங்கள் ஆதரவும் ஒத்துழைப்பும் எமக்கு அவசியம். நம்மைச் சார்ந்தவர்களே தலைமை தாங்கி நடத்தும் இவ்விழாக்களில் கலந்து அவர்களை கௌரவிக்க வேண்டும் என்றார்.

மத்திய மாகாண சபை பிரதித் தலைவர் இரா. தங்கவேல் தமதுரையில் :

எமது கலை, கலாச்சார பாரம்பரிய பெருமையை திரும்பிப் பார்க்கும் நோக்குடன் இடம் பெறும் இம்மலையக தமிழாராய்ச்சி மாநாடு தமிழர்களுக்கென அடிப்படையான சரித்திரம் ஒன்று உண்டு என்பதை பறை சாற்றும்.

மலையக மக்களின் சரித்திரம் இரு நூறு ஆண்டு காலத்துள் அடங்கும் சரித்திரமல்ல. அதற்கும் மேலான பல நூற்றாண்டு கால சரித்திரம் படைத்தது. கண்டிய தமிழ் மன்னன் 17 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தவன். கண்டிய ஒப்பந்தத்தில் சிங்களத் தலைவர்கள் தமிழில் கையொப்பம் இட்டுள்ளனர்.

அன்று தமிழகத்திலிருந்து இங்கு வந்தவர்கள் வெறும் தொழிலுக்காக மட்டும் வரவில்லை. தம்மோடு தமிழ் மொழியை அதன் கலை கலாச்சாரத்தையும் இங்கு கொண்டு வந்து பேணி பாதுகாத்தனர்.

மலையகத்தில் தமிழ் வளர்த்தவர்கள் வரிசையில் ஆத்மஜோதி நா. முத்தையாவின் பெயரை மறக்க முடியாது. கதிரேசன் கல்லூரியில் 1952 இல் முத்தமிழ் மன்றம் ஒன்றை அவர் தலைமையில் ஆரம்பித்தோம். எமது கையில் பாரதி பாடல், திருக்குறள் நூல் கட்டாயம் இருக்கும். பல தமிழ் பெரியார்களை இங்கு மேடையேற்றினோம். 1925 இல் சுவாமி விபுலானந்தர் அடிகள் குரு பட்டம் பெற்று வந்த பின் முதல் முதல் இங்கு அவருக்கு வரவேற்பளித்தோம். அன்று தான் நாவலப் பிட்டிக்கு ''நாவல் நகர்'' என்ற நாமம் சூட்டப்பட்டுவிட்டது.

மலையகத்தின் பாரம்பரிய கலை கலாச்சாரம் இன்று மங்கி விட்டது. சங்கீதக் கருவிகள் இன்று தேடியும் கிடைப்பதில்லை, தப்பு நம்மை விட்டு தப்பி போய்விட்டது. நடத்தும் ஆய்வுகள் மூலம் எமது எதிர்கால சந்ததியினருக்கு எடுத்து இயம்ப வேண்டும்.

ஊவா மாகாண சபை இந்து கலாசார பொறுப்பாளர் க. வேலாயுதம் தமதுரையில் 1977 இல் இந்நகரில் ஏற்பட்ட வன்செயலில் அடித்து துரத்தப்பட்ட நான் இன்று இங்கு இந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் வந்து கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். யாரால் அடித்து விரட்டப் பட்டோமோ அவர்களாலேயே இந்த நாட்டில் வாழும் தமிழன் நான் எனது மதம் இந்து மதம் என கூறி பெருமையடைய வேண்டும் என கூறும் சந்தர்ப்பத்தில் வந்தது கால நிலை மாற்றத்தை எடுத்துக் காட்டுகிறது.

நாம் ஆளக்கூடியவர்கள் அடிமைகள் அல்ல. எம்மை அடித்து உதைத்து அழிக்க முயன்றாலும் தேயிலைத் தோட்டத்தில் வளரும் அறுகுபோல் தலைதூக்குவோம்.

200 வருடத்திற்கு மேற்பட்ட பாரம்பரிய பெருமைமிக்கவர் நாம். அமைச்சர் புத்திரசிகாமணி கொண்டு வந்த திட்டத்தால் எமது மலையக சமுதாயம் பாரம்பரியம் கலை கலாச்சாரம் என்பவற்றுக்கு புத் துணர்வு ஊட்டப்பட்டுள்ளது. எமக்கென ஒரு தனிக்கலாச்சாரம் உண்டு.

அடுத்த மாதம் 11 முதல் 19 வரை பதுளையில் ஒரு சாஹித்திய விழா நடத்தவுள்ளோம். மலையக வளர்ச்சியில் 51 சதவீதம் பெண்களின் பங்குண்டு பல காவியங்களிலும் பெண்கள் இரண்டாந்தர பிரஜைகளாக்கப்பட்டனர். நாம் "நவயுக மலைமாதர்" என்ற தலைப்பில் அவர் களுக்கும் சமபங்களித்து விழா நடத்த வுள்ளோம் என்கிறார்.

அமைச்சின் செயலாளர் எஸ்.பி. இராஜ பக்ஸவும் தமிழில் ஆசியுடன் ஆரம்ப உரை யாற்றியார். உரைகளை அடுத்து நன்றியுரை யுடன் முதல் கட்டம் பூர்த்தி அடைந்தது.

திரு. அ.வைத்தியலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து நடத்தினார்.

# மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் வாசிக்கப்படும் கட்டுரைகளை பாதுகாக்க ஆவண காப்பகம் உருவாகும்

**மாகாண அமைச்சர் புத்திரசிகாமணி**

மாத்தளை, மலையக மக்களின் வாழ்க்கை வரலாறு தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள நூல்கள் பெரும்பாலும் குறிப்பிட்ட ஒரு சிலரின் புகழ்பாடுவதாகவே உள்ளன. மலையக மக்களின் உண்மையான வரலாறு கலை கலாசார பண்பாட்டு விடயங்களை கண்டறிந்து அதனை எமது எதிர்கால சந்ததியினருக்கு தொகுத்து வழங்கும் உயரிய நோக்குடனேயே கற்றறிந்த நல்லறிஞர்களைக் கொண்டு இவ்வாறான ஆய்வு கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

எதிர்வரும் நவம்பர் மாதம் நுவரெலியாவில் நடைபெறவிருக்கும் மலையக தமிழாராய்ச்சி மாநாடு மற்றும் சாகித்திய விழாவின் முன்னோடி நிகழ்ச்சியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற ஆய்வரங்கில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய மத்திய மாகாண தமிழ் கல்வி கைத்தொழில் கால்நடை அபிவிருத்தி வர்த்தக வாணிப சுற்றுலாத்துறை இந்து கலாச்சார அமைச்சர் வீ. புத்திரசிகாமணி மேற்கண்டவாறு கூறினார்.

விழா நடைபெறுமுன் அமைச்சர் புத்திரசிகாமணியும் விழாவுக்கு வருகை தந்திருந்த பிரமுகர்களும் அருள்மிகு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் கலந்து கொண்டனர்.

அதனையடுத்து அதிதிகள் ஊர்வலமாக கல்யாண மண்டபத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர். பின் மங்கள விளக்கேற்றப்பட்டு பாக்கிய வித்தியாலய மாணவியர்கள் தமிழ்த்தாய் பா இசைத்ததை அடுத்து விழா கோலாகலமாக ஆரம்பமானது.

அருள்மிகு மாத்தளை முத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவரும், மத்திய மாகாண இந்து கலாச்சார அமைச்சின் அறநெறிக் குழு சபையின் தலைவருமான த. மாரிமுத்துச் செட்டியாரின் வரவேற்புரையை அடுத்து பேசிய அமைச்சர் புத்திரசிகாமணி மேலும் கூறியதாவது.

மலையகம் சம்பந்தமாக வெளிவந்துள்ள முன்னைய நூல்களில் மலையக மக்களின் உண்மையான வரலாறுகளை கண்டறிவது கடினமாக உள்ளது. பல விடயங்கள் ஒன்றோடு ஒன்று தொடர்பில்லாமலும் முரணானதாகவும் காணப்படுகிறது. உண்மையான சில விடயங்கள் இடம்பெறாமலும் உள்ளது. கற்றறிந்த அறிஞர் களைக் கொண்டு நடத்தும் இவாவாறான ஆய்வுகள் மூலமே எமது உண்மையான வரலாற்றையும் எமது மூதாதையின் கலை, கலாச்சார பண்பாட்டு விடயங்களையும் கண்டறிந்து கொள்ள முடியும்.

ஆய்வுகள் மூலம் சேகரிக்கப்படும் நாட்டாரியல் வளங்கள் யாவும் நூலுருவாக்கப்படும். தமிழாராய்ச்சி மாநாட்டில் வாசிக்கப்படும் கட்டுரைகளும் நூலுருவாக்கப்படும். இவை அனைத்தையும் பேணி பாதுகாத்து சேகரித்து வைக்க அடுத்த வருட இறுதிக்குள் ஆவண காப்பகம் ஒன்றும் அமைக்கப்படும். நூலுருவாக்கப்படும்

நாட்டாரியல் வளங்களை உயர்தர மாணவர் களுக்கும் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் படும்.

அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக் காமல் எமது கலை கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் தமிழறிஞர்களின் ஆலோசனை பெற்று இதற்கென தனியான சட்டவாக்க மொன்று அமைக்கப்படும்.

மாணவர்கள் பாடப்புத்தகங்களில் கற்றுக் கொள்ள முடியாத பல அரிய விடயங்களை இவ்வாறான ஆய்வுக் கருத்தரங்குகளுக்கு சமுகமளிப்பதன் மூலம் கற்றுக் கொள்ள முடியும். எனவே உயர் வகுப்பு மாணவர்கள் தவறாது இவ்வாறான கருத்தரங்குகளுக்கு சமுகமளித்து தக்க பயனைப் பெற்று கொள்ள வேண்டும். ஆயிரம் பேரை அழைத்து கலைவிழா போன்ற கருத்தரங்கு களை நடத்த வேண்டியதில்லை. அத்துறை சார்ந்த வர்களை மட்டும் வைத்து ஆய்வு களை நடத்தி அதன் இறுதி முடிவோடு மக்களிடம் செல்வதே சாலச்சிறந்தது. ஆய்வுகள் யாவும் நூலுருவாக்கப்படுவதும் வரவேற்கத் தக்க ஒன்றாகும். கடந்த கால வரலாறுகளை கண்டறிந்து எதிர்கால சந்ததி யினருக்கு என்ன செய்ய வேண்டும் என்பதே எமது தார்ப்பரியமாக இருக்க வேண்டும்.

இன்று தமிழுக்கு விழா எடுக்கக்கூட பணம் சேர்ப்பது கடினமாக உள்ளது. அந்நிலை மாறி நாம் பணம் தருகிறோம் விழாவை செய்யுங்கள் என்று கூறும் நன்னாளை ஆவலுடன் எதிர்ப்பார்க்கிறோம்.

நுவரெலியாவில் நடைபெற்ற தமிழாராய்ச்சி நிகழ்வுகளுக்கு சமுகமளித்த பத்தனை ஸ்ரீபாத கல்லூரி மாணவர்கள் என்னை தேடிவந்து பாராட்டி சென்றார்கள். அவர் களைப் போன்று இன்று சமுகமளித்துள்ள மாணவர்களும் இக்கருத்தரங்கின் மூலம் முழுமையான பயன் பெற வேண்டும் என்பதே எனது பேரவாவாகும் என்றார்.

ரோதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் கலாகீர்த்தி பேராசிரியர். எஸ். தில்லைநாதன் தலைமையுரையின் போது கூறியதாவது.

சமீபகாலத்தில் மலையகத்தில் இலக்கியம் பண்பாடு கல்வித்துறைகளில் ஒரு மறு மலர்ச்சியை காண முடிகிறது. இது வரவேற் கப்பட வேண்டியது ஒன்றாகும். அமைச்சர் புத்திரசிகாமணி திட்டமிட்டு ஆக்கபூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொள்வது இதற்கு ஒரு காரணமாகும். இதற்காக அமைச்சர் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார்.

1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எம்.எஸ். இராமையா தெளிவத்த ஜோசப் போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டுமே மலையக இலக்கியத்துக்கு பங்களிப்பை வழங்கினர். ஆனால் தற்போது பல இலக்கிவாதிகள் தோன்றியுள்ளனர். இவர்களது ஆக்கங்கள் இலக்கிய உலகுக்கு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை உருவாகியுள்ளது.

மலையக மக்களின் வரலாறு இலக்கியத் தோடு பின்னிப் பிணைந்துள்ளது. அவர்களை ஒதுக்கிவிட்டு இலக்கியத்தை ஆய்வு செய்வது மிகக் கடினமானதொரு விடயம். மலையக மக்கள் சிறந்த பாரம்பரியங்களை கொண் டிருப்பதே இதற்கு மூலக்காரணமாகும். மலையகத்திலிருந்து பெரும்பாலான விடயங் களை கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அவர்களது

பங்களிப்பு பெரிதாக உள்ளது. மலையகம் சாராத இலக்கிவாதிகளும் இதனை அங்கீ கரிக்க வேண்டும்.

மத்திய மாகாண தமிழ்கல்வி கைத் தொழில் கால்நடை அபிவிருத்தி வர்த்த வாணிப சுற்றுலாத்துறை இந்து கலாசாசார அமைச்சின் உதவிச் செயலாளர் கருணாதாச பேசும் போது கூறியதாவது:

அமைச்சர் புத்திரசிகாமணி இந்த அமைச்சை தக்கமுறையில் நமது சமூக வளர்ச்சிக்கு பயன்படுத்திக் கொள்கிறார். மலையக கல்விமான்கள் அமைச்சரின் நடவடிக்கைகளுக்கு மேலும் ஆதரவும் உற்சாகமுமளித்தால் மலையகம் இலக்கியம் தன்நிகரில்லாது தலைநிமிர்ந்து நிற்கும் என்றார்.

மத்திய மாகாணசபையின் மதியுரைக் குழுத் தலைவரும் நுவரெலியா பிரதேச சபைத் தலைவருமான டி.வி. மாரிமுத்து பேசும் போது கூறியதாவது:

எமது பழைய வரலாறுகளை ஆய்வு நடத்தி தற்காலத்திற்கு ஏற்றவாறு ஒரு கலை கலாச்சார பண்பாடு முறையினை வகுத்து அதற்கொப்ப வாழ்வேமானால் விரைவில் முன்னேற்றம் காணமுடியும். மலையகத்தில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டாலும் அது ஒரு அறிவுப்புரட்சியாக உருவாக்கியுள்ளது என்று திருப்தி அடைய முடியாது.

மலையக ஆய்வுகளின் தொகுப்புக்களை பேணிக்காக்க ஆவண காப்பகம் ஒன்று அமைக்கும் குறிக்கோளுடனேயே அமைச்சர் புத்திரசிகாமணி என்னை பிரதேச சபை தலைவராக்கினார். அதிவிரைவில் அதனை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றார்.

பேராசிரியர் எஸ். தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வுக் கருத்தரங்கில் பேராதனைப் பல்கலைக்கழக புவியியல் பீடத்தைச் சேர்ந்த கலாநிதி ந. வேல்முருகு மலைய மக்களின் தெய்வ வழிபாடு என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினார். பல்கலைக்கழக விரிவுரை யாளர் வ.மகேஸ்வரன் பதிலுரை வழங் கினார். "மலையக நாட்டாரியல் வரலாற்று வேர்கள்" என்ற தலைப்பில் மாத்தளை வடிவேலன் கருத்துரை வழங்கினார்.

மாத்தளை கார்த்திகேசு பதிலுரை வழங் கினார். "மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் சு.முரளிதரன் கருத்துரை வழங்கினார். செல்வி கமலினி நமசிவாயம் பதிலுரை வழங்கினார். அந்தனிஜீவா தொகுப்புரை வழங்கினார். சாரல் நாடனும் உரை யாற்றினார்.

கலாசார அலுவலர் நாளாயினி சுப்பை யாவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் விழாவில் தி. இராஜகோபால் நன்றியுரை நிகழ்த்தினார். என்.எம். தனேந்திரன் நிகழ்ச்சி களை தொகுத்து வழங்கினார்.

மாத்தளை மாநகர பிதா ரோகண திசாநாயக்க, முன்னால் துணை முதல்வர் எம். சிவஞானம் உட்பட கலை இலக்கிய வாதிகள், எழுத்தாளர்கள், கல்விமான்கள், சமூகநல விரும்பிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நாட்டாரியல் கலை நிகழ்ச்சி ஒன்றும் இடம் பெற்றது.

# அக்டோபரில் மத்திய மாகாண சாகித்தி விழா

கண்டி நிருபர்,

மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டு செயலகத்துக்கு அக்டோபர் 10ஆம் திகதி அடிக்கல் நாட்டப்படும்.

அதனைத் தொடர்ந்து இரண்டு நாட்கள் மத்திய மாகாண சாகித்திய விழாவில் இலக்கியப் பெருவிழாவாக நடத்தப்படும்.

இவ்வாறு மத்திய மாகாண இந்து கலாசார கல்வி அமைச்சர் வி. புத்திர சிகாமணி தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் மத்திய மாகாண சாகித்தியவிழா மலையக பாரம்பரிய கலாச்சாரத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப் படும். இலக்கிய கர்த்தாக்களுடன் பாரம்பரிய கலைஞர்களும் கௌரவிக்கப்படுவார்கள்.

மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தொடர் ஆய்வரங்கங்கள் ஆகஸ்ட் 3ஆம் திகதி மாத்தளையிலும் ஆகஸ்ட் 10ஆம் திகதி கண்டியிலும் நடைபெறும் கருத்தரங்க கட்டுரைகள் நூலாக தொகுக்கப்பட்டு சாகித்திய விழாவின் போது வெளியிடப் படும்.

சாகித்திய விழாவின் போது மத்திய மாகாண எழுத்தாளர்களின் 1995ஆம் 96ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் சிறந்தவை களை தெரிவு செய்து அவற்றிற்கு விருது களும் பணப்பரிசுகளும் வழங்கப்படும். மலையக எழுத்தாளர்களின் புகைப்படங் களுடன் கூடிய தகவல்கள் அடங்கிய "முகமும் முகவரியும்" என்ற நூலும் வெளி யிடப்படும்.

## முகமும் முகவரியும் மலையக எழுத்தாளர் விபரங்களடங்கிய நூல்

மத்தியமாகாண தமிழ் சாகித்திய விழாவை முன்னிட்டு முகமும் முகவரியும் என்ற நூல் வெளியிடப்படவுள்ளது. இதில் மலையகத்திலுள்ள எழுத்தாளர்களின் விபரங்கள் இடம் பெறவுள்ளதாகவும், எதிர் காலத்தில் ஆய்வுகளை மேற்கொள்ள உள்ளவர்களுக்கு இத்தகைய நூல் பெரிதும் உதவியாக இருக்கும் என்றும் மத்திய மாகாண (தமிழ்) கல்வியமைச்சர் வீ. புத்திரசிகாமணி தெரிவிக்கின்றார்.

எனவே மேற்படி தொகுப்பு நூலில் இடம் பெறத் தமது பெயர், முகவரி, வயது, தொழில் ஈடுபாடு கொண்டுள்ள துறை, இதுவரை பெற்றுள்ள விருதுகள், வெளியிடப்பட்டுள்ள நூல்கள் போன்ற விபரங்களுடன் ஒக்டோபர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கும்படி எழுத்தாளர்கள் வேண்டப்படுகின்றார்கள்.

விபரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி தலைவர், இலக்கிய மதியுரைக்குழு, த.பெ.இல. 132, கச்சேரி, கண்டி

**தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்படும் போது**

## கலாசார, பண்பாடு பற்றி மட்டுமன்றி கல்வி வளர்ச்சி, அபிவிருத்தி பற்றி ஆய்வரங்கு தேவை

மாத்தளை,

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்படும் போது மலையக கலை கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களை வரலாற்று ரீதியாக கண்டறிய ஆய்வரங்குகள் நடத்தப்படுவது போல் மலையக கல்வி வளர்ச்சி மற்றும் மலையக கல்வி அபிவிருத்தி சம்பந்தமாகவும் ஆய்வரங்குகள் நடத்தப்பட வேண்டும்.

மலையக சமுதாயத்தில் கல்வி மாற்றத் தினால் ஏற்பட்ட அறிவு வளர்ச்சியினால் உருவாகிய புத்தி ஜீவிகள் காரணமாகவே இன்று மலையக தமிழாராய்ச்சி மாநாடுகள் நடத்தும் போது மலையக கல்வி வளர்ச்சி சம்பந்தமான ஆய்வரங்குகளை நடத்தி எதிர் கால கல்வி அபிவிருத்திக்காக திட்டம் வகுக்க வேண்டியது அவசியமாகும்.

இன்று மலையகத்தில் மறுமலர்ச்சியும் விழிப்புணர்வும் ஏற்பட்டுள்ளமைக்கு கல்வி வளர்ச்சியே மூலகாரணம் என்பதையும் மறந்து விடமுடியாது.

இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் கூலிகளாக மலையகத்திற்கு கொண்டு வரப்பட்ட போது தொகுதி தொகுதியாக குடியிருப்புகள்

(லயன்காம்பராக்கள்) அமைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர் இவர்கள் குழுவினராகவே வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களது (தொழிலாளர்களது) குழந்தைகளிடமிருந்து பெருந்தோட்டப் பயிர்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடனேயே அன்று தோட்ட பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்பதை உறுதியாக கூற முடியாவிட்டாலும் இது உண்மைமென ஏற்றுக் கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு.

எது எவ்வாறாயினும் தோட்டப் பாடசாலைகள் என்ற பெயரில் தோட்டங்களில் கல்விக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டது உண்மை ஆகும்.

ஏனைய தேசிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் இப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டதா என்பது வேறு விடயம். இருப்பினும் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கல்வி மூலம் பெற்ற அறிவு வளர்ச்சியே இன்று இந்த அளவுக்கு அபிவிருத்தியடைந்து மலையக தமிழாராய்ச்சி மாநாடு நடத்த வேண்டும் என்ற சிந்தனையை தோற்றுவித்துள்ளளது என்பது உண்மையாகும். இந்த வரலாற்றை நோக்கும் போது மலையக கல்வி வளர்ச்சி சம்பந்தமாகவும் ஆய்வுகள் நடத்த வேண்டியது அவசியமாகிறது.

எனவே எதிர்காலத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டையொட்டி நடத்தப்படும் கருத்தரங்குகளில் கண்டிப்பாக மலையக கல்வி வளர்ச்சி சம்பந்தமான ஆய்வுகள் நடத்தவும் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# மலையக தமிழாராய்ச்சி மாநாட்டின் முன்னோடியாக ஆய்வுக் கருத்தரங்குகள்

(கண்டி மத்திய தினகரன் நிருபர்)

மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சு தமிழ் சாகித்திய விழா, தமிழாராய்ச்சி மாநாடு என்பவற்றை இவ்வருடம் சிறப்பாக நடத்தத் தீர்மானித்துள்ளது.

இதன் முன்னோடி நிகழ்ச்சியாக ஆய்வுக் கருத்தரங்குகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இவ் ஆய்வுக் கருத்தரங்கில் பின்வரும் தலைப்பிலான ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

1. ''மலையக இலக்கியம் தோற்றமும் வளர்ச்சியும்'' சு. முரளிதரன்
2. ''மலையக நாட்டாரியல் வரலாற்று வேர்கள்'' பி. வரவேலன்.
3. ''மலையக மக்களின் தெய்வ வழி

பாடுகள்'' கலாநிதி ந. வேல் முருகு ஆய்வரங்கு.

1. "மலையகத்தில் கிறிஸ்தவ எழுத்தாளர்கள்" தெளிவத்தை ஜோசப்.

2. "மலையகம் பற்றிய ஆங்கில ஆக்கங்கள்" சாரல் நாடன்.

இக் கட்டுரைகளுக்கான பதிலுரைகளும் தொகுப்புரைகளும் வழங்கப்படவுள்ளன.

கலை இலக்கியவாதிகளின் புகைப் படங்கள், முகவரிகள், குறிப்புரைகளுடன் ''முகமும் முகவரியும்'' என்ற தொகுப்பு வெளியிடப்படுவதுடன் ஸ்ரீபாத கல்லூரியில் கடந்த வருடம் நடந்து முடிந்த தமிழாராய்ச்சி மாநாட்டைப் பற்றிப் பலமுனைகளிலிருந்து எழுந்த விமர்சனங்கள், குறிப்புகள், நிகழ்வுகள், செய்திகள் போன்றவற்றை தொகுத்து நூலாக்குவதில் மத்திய மாகாண இந்து கலாச்சார அமைச்சு மிகவும் அக்கறையுடன் ஈடுபட்டுவருவதாக தெரிகிறது.

# மலையக தமிழாராய்ச்சி ஆய்வரங்குத் தொடர்

(கண்டி மத்திய தினகரன் நிருபர்)

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆய்வரங்குத் தொடர் 5 நாவப்பிட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய இந்து கலாசார மண்டபத்தில் 21.09.1997 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

பேராதனை பல்கலைக்கழக பொருளியல் துறைத்தலைவர் பேராசிரியர் எம். சின்னத்தம்பி இந்த ஆய்வரங்கிற்குத் தலைமை தாங்குகிறார். கௌரவ அதிதியாக மத்திய மாகாண கல்வி (தமிழ்) கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி, வர்த்தக வாணிப, சுற்றுலாத்துறை, இந்து கலாசார அமைச்சர் வி. புத்திரசிகாமணி கலந்து கொள்கிறார்.

வரவேற்புரை திருமதி நளாயினி சுப்பையா, தலைமை உரை பேராசிரியர் எம். சின்னத்தம்பி, ஆரம்ப உரை அமைச்சரின் செயலாளர் எஸ். பி. ராஜபக்ஷ, ஆசியிரை நுவரெலிய பிரதேச சபைத் தலைவரும், மதியுரைக்குழுத் தலைவருமான திரு. டி.வி. மாரிமுத்து, வாழ்த்துரை மத்திய மாகாண பிரதி தலைவர் இரா. தங்கவேல், சிறப்புரை அமைச்சர் வி. புத்திரசிகாமணி ஆய்வுரைகள் ''மலையக மக்களின் அரசியல் உரிமைகள்'' வி. தேவராஜ் (ஆசிரியர், வீரகேசரி வார இதழ்) பதிலுரை இரா. நித்தியானந்தன், அரசறிவியத்துறை விரிவுரையாளர், பேராதனை பல்கலைக்கழக ''மலையக கலை இலக்கிய வளர்ச்சியில் பத்திரிகை, சஞ்சிகைகளின் பங்களிப்பு'',

'மலையக பாரம்பரிய கலை கலாசாரம்'' க. நாகேஸ்வரன், முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

பதிலுரை : அம்பிகா வேல்முருகு, உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை பேராதனை பல்கலைக்கழகம்.

தொகுப்புரை : க. வெள்ளைச்சாமி உதவி கல்விப் பணிப்பாளர், வத்தேகம,

நன்றியுரை : அ. இலட்சுமணன் மலையக நலன்புரி மன்றம், நாவலப்பிட்டி.

# கல்வியில் மட்டுமல்லாது கலாசாரத்திலும் மலையகம் மறுமலர்ச்சி காணவேண்டும்

செங்கடகல நிருபர்.

“கட்சி அரசியல் கல்வியிலும் கலாசார வைபவங்களிலும் புகுந்துவிட்டால் அதன் மகிமையும் சிறப்பும் குன்றிவிடும். சாகித்திய விழாக்களில் கட்சிக் கொடிகள் பறகவிடப் பட்டிருப்பதை நாம் மலையகத்தில் பார்த்திரு கின்றோம். எனது கட்சிக்கு இழுக்கு வந்து விடக்கூடாதென்ற நோக்கிலேயே பச்சைக் கொடியை கூட நாம் சாகித்திய விழாவில் பறக்கவிடவில்லை. கட்சி நடவடிக்கையை இவ்வாறான பொது விழாக்களில் போட்டு மாசுபடுத்தாமல் அவற்றை ஒதுக்கி வைக்க வேண்டும்.

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடர்பாக கண்டி கட்டுகலை ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற ஆய்வரங்குக் கருத்தரங்கில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய மத்தியமாகாண தமிழ் கல்வி இந்து கலாசார அமைச்சர் வீ. புத்திரசிகாமணி மேற்கண்டவாறு கூறினார். பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் க. அருணாசலம் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அமைச்சர் புத்திரசிகாமணி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

மலையகத்தில் இடம்பெற்ற சாகித்திய விழாக்கள் பற்றிய விமர்சனம் வெளி வந்ததை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் அவை ஆக்க பூர்வமானதாக அமைந்தால் நிச்சயமாக ஏற்று அடுத்த விழாக்களை நாம் சரிப்படுத்திக் கொள்ளலாம். தனிமனிதனின் முயற்சியை விட எல்லோரும் ஒன்றினைந்து செயல்படுவதால் அதில் அபிவிருத்தி காண இயலும்.

முதலில் சாகித்திய விழாவை நடத்திய நாம் தமிழாராய்ச்சி மாநாட்டையும் இசை விழாவையும் மலையகத்தில் நடாத்த திட்டமிட்டுள்ளோம். மலையக மக்களின் கல்வியில் ஏற்பட்டுவரும் இன்றைய மறு மலர்ச்சி கலாசாரத்திலும் ஏற்பட வேண்டும். எனவே தான் தமிழ் இலக்கியம், நாடகம், கலாசாரம், கல்வி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் இவ்வாறான அபிவிருத்தியைக் காணும் பொழுது மலையக சமுதாயம் தலை நிமிர்ந்த சமூகமாகத் திகழும், இவை தொடர்பான ஆராய்ச்சிகளை சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலும் எதிர் காலத்தில் மேற்கொள்ள பெருந்துணையாக இருக்கும்.

எமது பணிகளைச் செயற்படுத்த செயலகம் ஒன்றின் தேவையை உணரு கிறோம். நிச்சயமாக அதனை கொட்ட கலையில் நிறுவுவதற்கான முயற்சியிலும் ஈடுபட்டுள்ளோம்” என்றார்.

மத்திய மாகாணசபை பிரதித்தலைவர் இரா. தங்கவேல், நூரளை பிரதேச சபைத் தலைவர் டி.வி. மாரிமுத்து, அந்தனி ஜீவா, திருமதி நாளாயினி சுப்பையா, தெளிவத்தை ஜோஸப், செ. நடராஜா, இரா.சு. இராமன், சாரல் நாடன் ஆகியோரும் பேசினர்.

## தமிழாராய்ச்சி மாநாட்டின் முன்னோடி ஆய்வரங்கு

(கண்டி, செங்கடகல)

மத்திய மாகாண அமைச்சர் வி. புத்திரசிகாமணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மலையக தமிழாராய்ச்சி மாநாட்டின் முன்னோடி ஆய்வரங்கு இன்று காலை 9 மணிக்கு கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தின் மீனாட்சி கல்யாண மண்டபத்தில் நடைபெறுகிறது.

பேராசிரியர் க. அருணாசலத்தின் தலைமையில் நடைபெறும் இந்த ஆய்வரங்கு கூட்டத்தில் பிரதம அதிதியாக அமைச்சர் புத்திரசிகாமணி கலந்து கொள்கிறார்.

மாநாடு தொடர்பான ஆய்வரங்கல் இது 4 ஆவது தொடராகும்.

## மலையகத்தின் கடந்த கால இலக்கிய நிகழ்வுகள் பதிவு செய்யப்பட வேண்டும்

ஏப்ரல் மாதம் 20ஆம் மத்திய மாகாணத்தின் ஆதரவில் நடத்தப்படவிருக்கும் மலையக தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமாகவுள்ளதாகவும் இறுதி நாள் மாநாடு நுவரெலியாவில் நடைபெறும் என்றும் தெரிய வந்துள்ளது. தோட்டக்காட்டான் என்ற பாமரன் பேசும் உடைந்துபோன, எந்தவிதச் சுத்தமும் அற்றத் தமிழே மலையக தமிழ் என்று ஒரு அபிப்ராயம் நிலவி வருகிறது. அத்தமிழிலே எந்த ஒரு அழகோ நயமோ கிடையாது என்பது பண்டிதர்களின் கருத்தாக இருந்து வந்துள்ளது.

மலையக இலக்கியம் என்றால் என்ன மலையகக் கலைகள், பாரம்பரியம் என்றால் என்ன என்பது இன்னும் பலவித்து மூளைகளுக்குப் புரியாத ஒரு பரம இரகசியமாகவே இருந்து வருகிறது.

ஏனெனில், மலையக இலக்கியம் எழுத்துருப் பெற்று வெளி உலகுக்கு அறிமுகம் ஆனதும், கடல் கடந்த நாட்டவரின் கண்களுக்குத் தட்டுப்பட்டதும் அறுபதுகளின் பின்னர்தான். தெளிவத்தை ஜோசப் போன்றவர்கள் தான் இங்கேயும் நல் இலக்கியம் படைக்கக் கூடியவர்கள், தெளிவான சிந்தனையாளர்கள் இருக்கிறார்கள். என்பதை உலகத்துக்கு நிரூபிக்க வேண்டியிருந்தது.

மலையக இலக்கிய முயற்சிகளை ஓரளவுக்காவது பதிவு செய்ய இப்போதுதான் நித்தியானந்தன் துங்கிந்த சாரலிலே மூலம் முயற்சி செய்ய புறப்பட்டிருக்கிறார். இது ஒரு நல்ல வழிக்காட்டல்.

துங்கிந்த சாரல் தொடர் 1983க்கு முன் ஊவா பிரதேசத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சி எவ்வாறெல்லாம் நடைபெற்றிருக்கிறது என்பதையும், தமிழ் மொழியும் கூடவே தமிழர்களும் எப்படி சிறந்து விளங்கியிருக்கிறார்கள் என்பதையும் துல்லியமாக

இன்றைய இளம் தலைமுறையினருக்கும், முழு இலங்கையையும் சிறைச்சாலையாக கற்பனை பண்ணிக் கொண்டு, ஒரு இனந் தெரியாத குற்ற மனப்பான்மையுடனும், தேசிய அடையாள அட்டை, ஜொப் கார்ட், பொலிஸ் ரிப்போர்ட் ஆகியவற்றை போகிற இடமெல்லாம் காவிக் கொண்டும் திரிகிற இன்றைய தமிழ் பெருங்குடி மக்களுக்கும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மேலும் இந்த இனம் எப்படி எல்லாம் தலை நிமிர்ந்து வாழ்ந்திருக்கிறது என்பதை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துரைக்கும் இலக்கியப் பதிவாகவும் அமைந்துள்ளது.

இத் தொடர் ஒரு வழிக்காட்டல் என்றோம். ஏனெனில், ஊவாவில் இப்படி தமிழும் இலக்கியமும் செழித்திருந்தாலும் மலையக இலக்கிய முயற்சிகளுக்கு களம் அமைத்து கொடுத்தது ஊவா அல்ல, அட்டன் தான் என்கிறார்கள். மலையக இலக்கியவாதிகள். அட்டன் மற்றும் நுவரெலிய தமிழர்கள் மலையக இலக்கிய வளர்ச்சி எவ்வளவோ செய்திருக்கிறார்களே என்கிறார்கள்.

அவை என்னென்ன? தமிழ்த் தொண்டுகள் எவ்வாறெல்லாம் நடைபெற்றன? யார் யார் எல்லாம் இவற்றில் ஈடுபட்டனர். அவர்கள் எல்லாம் இப்போது எங்கே? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன. இக்கேள்விகளுக்கு அங்கொன்றும் இங் கொன்றுமாக பதில்கள் இருக்கின்றன. இவை திரட்டப்பட வேண்டும். சிலருக்கு மட்டும் தெரிந்த சிறு வட்டம் ஒன்றில் மட்டும் புழங்கி வருகின்ற இத் தகவல்களைத் தொகுத்து நித்தியானந் தனைப் போல ஒரு இலக்கியப் பதிவாக வெளியரங்கப்படுத்தப் போவது யார்?

துங்கிந்த சாரல் தொடர் மலையக இலக்கிய ஆர்வலர்களிடையே ஒரு விழிப்புணர்வைத் தோற்றுவித்துள்ளது வெளிப்படை. அந்த விழிப்புணர்வு, ஓர் உத்வேகமாக உருப் பெற்று, மலையகத்தின் ஏனைய பிரதேசங் களில் நிகழ்ந்த இலக்கிய மறுமலர்ச்சி யுகத்தை பதிவு செய்வதாக அமைய வேண்டும். அப்போது தான் துங்கிந்த சாரலின் நோக்கம் முழுமை பெற்றதாக அமையும். இத் தொடரில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இதுதான்.

ஐம்பதுகள் முதல் 83 வரையிலான காலப் பகுதியில் மலையகத்தில் இடம் பெற்ற இலக்கிய, கலைத்துறை முயற்சிகள் பற்றித் தெரிந்தவர்கள், அவற்றில் ஈடுபட்ட வர்கள், எதிர்கால சந்ததியினரின் தேவை களின் பொருட்டு இவற்றை ஆவணப்படுத்த, அச்சில் கொண்டு வர முன்வர வேண்டும். முன் வருவதற்கான முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும்.

செய்வார்களா? அதுதான் இன்றைய கேள்வி - மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறவிருக்கும் இச்சமயத்தில் இக்கேள்வி முக்கியத்துவம் பெறுகிறது. இம்மாநாட்டை ஏற்பாடு செய்தவர்கள், ஆய்வாளர்கள், கலந்து கொள்ளும் பிரதி நிதிகள் மற்றும் ஆர்வலர்கள் இவ் விடயத்தைக் கருத்திற்கொண்டு, மலை யகத்தில் மேற்கொள்ளப்பட்ட இலக்கிய முயற்சிகளை ஆவணப்படுத்தும் வழிவகைகள் பற்றி ஆராய நேரம் ஒதுக்க வேண்டும்.

இந்த யோசனை சம்பந்தப்பட்வர்களுக்கு சமர்ப்பணம்.

## மலையக தமிழாராய்ச்சி மகாநாடு சிறப்பு கருத்தரங்கு

மத்திய மாகாண இந்து கலாசார கல்வி அமைச்சின் இலக்கிய மதியுரைக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் மலையக தமிழாராய்ச்சி மாநாட்டின் முதலாவது சிறப்பு கருத்தரங்கு "மலையக சமூகம் ஒரு பன்முக ஆய்வு" என்ற தலைப்பில் ஏப்ரல் 28ம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் "19ம் நூற்றாண்டில் புலம் பெயர்ந்த இந்தியர்கள்" என்ற தலைப்பில் பேராதனைப் பல்கலைக்கழக பொருளியல் துறைப் பேராசிரியர் எம். சின்னத்தம்பி "வரலாற்று நோக்கில் மலையக சமூகம்" என்ற தலைப்பில் கவிஞரும் ஆய்வாளருமான திரு. வ.ஐ.ச. ஜெயபாலன், "மலையகத் தமிழரின் கல்வி பொருளாதார நிலை" என்ற தலைப்பில் வவுனியா இணைப்புக் கல்லூரி பணிப்பாளரும் புவியியல் துறை முது நிலை விரிவுரையாளருமான திரு. எம். எஸ். மூக்கையா "மலையகத் தமிழரின் அரசியல் நிலை" என்ற பொருளில் பேராதனைப் பல்கலைக்கழக அரச அறிவியல் துறை முதுநிலை விரிவுரையாளரான கலாநிதி அம்பலவாணன் சிவராஜா ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளை வாசிப்பார்கள்.

சிறப்பு கருத்தரங்குக்கு முன்னர் நடைபெறும் ஆரம்ப விழாவிற்கு மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சர் வீ. புத்திரசிகாமணி தலைமை வகிப்பார். யாழ் பல்கலைக்கழக நுண்கலைப்பீடத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி சிறப்புரையாற்றுவார்.

## மலர் வெளியிடாதது பெரும் குறை

"மலை முகடுகளில் மதுரத் தமிழ் முழக்கம்" என்ற தலைப்பில் சென்ற வாரம் மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு சம்பந்தமாக மஞ்சரியில் வெளிவந்த கட்டுரை தொடர்பாக இதை எழுதுகின்றேன்.

ஆரம்பக் காலங்களில் அத்திபூத்தாற் போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழ்ந்த மலையக இலக்கிய நிகழ்வுகள், இன்று ஒரு பெரும் மாநாடாக வியாபித்துள்ள மையையிட்டு புளங்காங்கிதம் அடைகின்றேன். இவ்வாறான ஒரு அரிய, மறக்க முடியாத இலக்கிய நிகழ்வுக்குக் காரண கர்த்தாவாகயிருந்த மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர். வி. புத்திரசிகாமணி அவர்களுக்கு எனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. நடந்து முடிந்த முதலாவது மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டு ஒழுங்கமைப்பிலேற்பட்ட சில தவறுகளையும் சுட்டிக் காட்டுவதோடு, இனிவரும் ம.த. மாநாடுகளுக்கான சில வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் கூற விளைகிறேன்.

2. இம் மாநாடு மலையக தமிழாராய்ச்சி மாநாடு என்பதால் மலையகப் பிரதேச புத்திஜீவிகளை இனங்கண்டு, அவர்களின் மூலம் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித் திருக்கலாம். ஏனெனில் ஒரு சமூகத்து இலக்கியத்தின் உள் நிலையானது அச் சமூகத்தோடொன்றியவர் களுக்குத்தான் உண்மையாகத் தெரிந்திருக்க நியாய முண்டு. இவ்வாறானவர்களைக் கொண்டு செய்யும் ஆய்வுதான் உயிரோட்ட மாயிருக்கும்.

3. வயதின் அடிப்படையில் மலையக எழுத்தாளர்களை இனங்காணாமல் திறமையின் அடிப்படையில் மலையக எழுத்தாளர்களை இனங்கண்டு, அவர்களையும் மலையகத தமிழாராய்ச்சி மாநாட்டு ஏற்பாட்டுக் குழு வுடன் சேர்ந்து பங்காற்ற வழிவகுக்க வேண்டும்.

4. நடந்து முடிந்த மாநாட்டில் அவை யோர்களாக குறிப்பிட்ட சிலர் மாத்திரமே கலந்து கொண்டதைக் காண முடிந்தது. மலையக தமிழாய்வு என்பது தனியே மலையக எழுத்தாளர்களுக்கு மாத்திரமான தொன்றல்ல. இத்தகைய ஆய்வுகள் ஒரு சமூகத்தின் அடிமட்டம் வரை சென்று ஒரு இலக்கியத் தெளிவை ஏற்படுத்துவதாயிருக்க வேண்டும்.

5. மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறுவதற்கு முன்பாக மலையகத் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஏனையோர்களுக்குத் தமிழ்த் திறன் போட்டிகளை நடாத்தி அதன் மூலம் சிறந்த ஆக்கத்தினைச் சமர்ப்பித்த எழுத்தாளர் களைத் தெரிவு செய்து அவர்களுக்குப் பாராட்டுகளையும் பரிசில்களையும் இம் மாநாட்டிலேயே வழங்கியிருந்தால் இம் மாநாடு இன்னும் சிறப்பாயிருந்திருக்கும்.

6. தமிழிலக்கியம் என்னும்போது, அது இயல், இசை, நாடகம் மூன்றினையும் உள்ள டக்கியதாகும். இவ்வகையில் மலையக தமிழாராய்ச்சி மாநாடுகளில் மலையக மக்களின் பாரம்பரிய பண்பாட்டுக் கலை களோடு தொடர்பு கொண்ட கலைஞர் களையும் இனங்கண்டு கௌரவிக்க வேண்டும்.

7. நடந்து முடிந்த மலையக தமிழா ராய்ச்சி மாநாட்டின் ஆரம்ப நாள் வைபவங் களை நோக்கும் போது, ஏதோ ஒரு குறிப்பிட்ட தொழிற்சங்கத்தின் விசேட வைபவம் போலிருந்தது. ஏனைய தொழிற் சங்க அரசியல்வாதிகளை காண முடிய வில்லை. மாநாடு ஒரு குறிப்பிட்ட தொழிற் சங்க சார்பானதாகக் காணப்பட்டதும் ஏனைய தொழிற்சங்க அரசியல் பிரமுகர்கள் கலந்து கொள்ளாததும் ஒரு வெறுமையைக் காட்டியது. எனவே இனிவரும் மாநாடுகளில் இத்தகைய குறைகளைக் காட்டாயம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

8. மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு களின் போது மலையகத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிந்தவர்களுக்குப் பட்டங்களையும் பரிசில்களையும் வழங்கி கௌரவிக்க வேண்டும். அதற்காக அன்று தொடக்கம் இன்றுவரை குறிப்பிட்ட ஒரு சிலரை மாத்திரம் கௌரவிக்கும் பண்பை விட்டுவிட்டு இளைஞர்களையும் பட்டியலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

9. நடந்து முடிந்த மாநாட்டில் பெருங் குறையாகத் தென்படுவது ஒரு சிறப்பு மலர் வெளியிடாமையாகும். மாநாட்டின் ஞாபகச்

சின்னமாக ஒரு சிறப்பு மலரை வெளியிட்டிருக்க வேண்டும். ஏனெனில் பிற்காலத்தல் இது ஒரு பெறுமதியான ஆவணமாக மதிக்கப்படக் கூடிய ஒன்று.

''முகமும் முகவரியும்'' என்ற நூலொன்றை வெளியிடுவதாக முன்னர் செய்திகள் வெளியாயின. குறைந்த பட்சம் இந்நூலையாவது இம் மாநாட்டில் வெளியிட்டிருக்கலாம்.

இவை போன்ற குறைகளையும் ஆலோசனைகளையும் அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் ஒன்றைச் சொல்வது சுலபம். செயலாக்கிக் காட்டுவது அத்தனை சுலபமல்ல. அந்த வகையில் முதலாவது மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு பல விமர்சனங்களுக்குட்பட்டிருந்தாலும். இனி வரும் மலையகத் தமிழாராய்ச்சி மாநாடுகளுக்கெல்லாம் இம் மாநாடு ஒரு வழி காட்டியாகும். என்பதில் சந்தேகமில்லை. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இம் மாநாட்டை நடத்திக் காட்டிய மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சருக்கும் மாநாட்டு மதியுரை குழுவினருக்கும் பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோ. ஸ்ரீதரன் பொகவந்தலாவ.

## மலையக தமிழாராய்ச்சி மகாநாடு

# தொடரும் ஆராய்ச்சிகளுக்கு ஒரு அடித்தளம் மட்டுமே

(கண்டி, செங்கடகல)

''முதல் தடவையாக நடைபெறும் இந்த மலையக ஆராய்ச்சி மாநாடு தொடர வேண்டிய ஆராய்ச்சிகளுக்கு ஒரு அடித்தளம் மட்டுமே'' என பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறினார்.

கொட்டகல பத்தன ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிக்கூட்டத்தில் கலந்து கொண்டு தொகுப்புரை வழங்கிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

மலையகத் தமிழாராய்ச்சி என்பது பெருந் தோட்டத்துறை சார்ந்த மக்களின் முழுமையான சமுதாய கட்டமைப்பை உள்ளடக்கிய தாக இருக்க வேண்டும். என்பதை எவரும் மறந்து விடக் கூடாது. முதல் தடவையாக நடைபெறும் இந்த மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடர வேண்டிய ஆராய்ச்சி களுக்கு ஒரு அடித்தளம் மட்டுமே. நாட்டாரியல் துறைகளிலெல்லாம் இம் மக்களின் உண்மையான வரலாற்றுப் பூர்வமான அடையாளங்களை காண முடிகிறது.

மலையக சமுதாயம் கட்டுப்பாடுகளிலிருந்தும் தடைகளிலிருந்தும் விடுபட மிக முதன்மையானதும் இன்றியமையாததாகவும் திகழ்வது கல்வி வளர்ச்சி ஒன்று தான் என்பதை எவரும் மறந்து விடக் கூடாது.

இத்துறையில் ஆக்கபூர்வமான பணிகள் ஆற்றிட அனைவரும் முன்வரவேண்டும்.

இம்மாநாடு மலையக தமிழ் மக்களின் தனித்துவங்களை மேலும் விரிவாக ஆராய்வதற்கு உதவியது என்றார்.

## கடந்த ஒரு நூற்றாண்டில்

# கல்வி வளர்ச்சி ஏற்படுத்திய நன்மைகளை மலையக மக்கள் முழுமையாக பெறவில்லை

மஸ்கெலியா - கண்டி

கடந்த ஒரு நூற்றாண்டு காலப்பகுதியில் கல்வி வளர்ச்சி இலங்கை சமூகத்தில் ஏற்படுத்திய சமூக, பொருளாதார அந்தஸ்து மேம்பாடு போன்ற நன்மைகளை மலையக மக்கள் சம அளவில் பெற்றுக் கொள்ளவில்லை. என்று கொழும்புப் பல்கலைக்கழக சமூக விஞ்ஞான கல்வித்துறைத் தலைவர் பேரா சிரியர் சோ. சந்திரசேகரன் கூறினார்.

"மலையக மக்களின் கல்விப் பிரச்சினை களும் எதிர் பார்ப்புகளும்" என்ற தலைப்பில் பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரியில் திங்கட்கிழமை நடைபெற்ற மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் ஆய்வுக் கட்டுரை சமர்ப் பித்து உரையாற்றுகையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது

"கல்வித்தகுதிகளும், பயிற்சியும் தேவைப் படாத பெருந்தோட்ட உடல் உழைப்புத் தொழில்களிலேயே அவர்கள் பெருமளவில் ஈடுபடுகின்றனர்.

ஏறத்தாழ 5 லட்சம் பேர் தோட்டத் தொழிலாளர் அவர்களை அண்டி வாழ் வோரையும் சேர்த்தால் 8 லட்சம் பேர் இன்று "பெருந்தோட்ட மக்கள்" என்று பேர் ஆகிறது. ஒரு சமூகமாக பெருந்தோட்டம் என்ற அலகை அடைமொழியாகக் கொண்ட ஒரு சமூகம் உருவாகக் காரணம் அவர்கள் பெருந்தோட்டத்தை விட்டு வெளியேறி பிற தொழில்துறைகளில் சேரும் முறையில் கல்வித் தகுதிகளைப் பெற்றுக் கொள்ளாகை யாகும்.

இவ்வாறு பேராசிரியர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகம் புவியியல் துறை முதுநிலை விரிவுரையாளரும், வவுனியா இணைந்த பல்கலைக் கழக தலை வருமான மா. செ. மூக்கையா இலங்கையில் மலையகத் தமிழ் மக்களின் கல்வி நிறை வளர்ச்சியும், போக்கும் என்ற பொருளில் ஆய்வுரை நிகழ்த்துகையில் கூறியதாவது.

"மலையக மக்களின் கல்வி நிலை பற்றி ஆராய்ந்த அறிஞர்களும் ஆணைக்குழு வினரும் அவர்களைக் கல்வியில் பின் தங்கிய பிரிவினராக்கிக் கொள்ள வேண்டும்." என்ற கருத்தை வெளியிட்டுள்ளனர். முக்கிய மாக 1977 ஆம் ஆண்டின் பின்னர் தோட்டப்

பாடசாலைகள் அனைத்தும் அரசாங்கப் பாடசாலைகளாக்கப்பட்டு அவற்றின் மேம் பாட்டுக்கு வெளிநாட்டு உதவிகள் பெறப் பட்டு பல செயல்திட்டங்கள் இடம் பெற்றும் கூட மலையக மக்களின் கல்வி நிலை பின்தங்கியுள்ளதென ஏற்றுக் கொள்ளப் பட்டிருப்பது குறப்பிடத்தக்கது.

1990 - 1991 க்குரிய யுனெஸ்கோவின் யாவருக்கும் கல்வி பற்றிய ஆய்வறிக்கை, கல்வியில் பின் தங்கிய ஆசிய இனச் சிறுபான்மையினர் பற்றிய குறிப்புகளில் மலையக சிறுபான்மையினரையும் இனங் கண்டுள்ளது.

"மலையக கல்வியின் தற்போதைய நிலைக்கு நீண்ட காலமாக கல்வி வசதி களை அலட்சியம் செய்து வந்த பெருந் தோட்ட நிருவாகத்தையே குறை கூறப் பட்டுள்ளது. இவ்வறிக்கை பற்றியும், மற்றும் தரவுகள் புள்ளி விபரங்கள் அடிப்படையிலும் மலையக மக்கள் ஆரம்பக் கல்வி ஆசிரியர் கல்வி தொழில்நுட்பக் கல்வி பல்கலைக் கழகக் கல்வி, முறைசாராக் கல்வி, வளர்ந்தோர் கல்வி முதலிய கல்வி நிலைகள் ஏற்பாடுகள் என்பவற்றால் இன்றைய தேசிய வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடும்போது பின்தங்கியவர்களாக உள்ளனர்.

"பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கல்வி கற்றுத் தேர்ச்சி பெற்றால் அவர்கள வேறு தொழில் தேடி தோட்டங்களை விட்டுச் சென்று விடலாம் என தோட்ட நிருவாகங்கள் அஞ்சியதால், அவர்களுக்குக் கல்வி அளிக்க முன் வரவில்லை. இதனை 1956 ஆம் ஆண்டிற்கு முன் பாடசாலைகள் இலங்கையில் தேசிய மயமாக்கப்படுவதற்கு முன்னரே நிலவிய முக்கிய காரணமாகக் கொள்ளலாம்.

1948 ஆம் ஆண்டு ஏற்பட்ட குடியுரிமை நீக்கம் காரணமாக மலையகத் தமிழ் மக்களுக்கு வாக்குரிமையும் இல்லா தொழிக்கப்பட்டது. எனவே தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தமது அபிவிருத்தி நடவடிக் கைகளில் தமக்கு வாக்களிக்கும் தகைமை இல்லாத சமூகத்தினரின் நலனுக்காக எவ்வித திட்டங்களையும் முன் வைக்கும் தேவையைக் கொண்டிருக்கவில்லை. எனவே குடியுரிமை பறிக்கப்பட்ட மக்களை அரசியல் தலைவர்கள் அனுதாபத்துடன் நோக்கி அவர்களுக்கு மீண்டும் அவ்வுரிமையை அளிப்பதற்கு மாறாக அதனை வசதியான காரணமாகக் கொண்டு ஓரங்கட்டும் ஒரு மனப்பான்மை யினைப் பின் பற்றினார்கள்".

இவ்வாறு மூக்கையா கூறினார்.

திறந்த பல்கலைக்கழ விரிவுரையாளர் மா. கருணாநிதியும் உரையாற்றினார். பேராசிரியர் சின்னத்தம்பி சார்பில் அவரது ஆய்வுக்கட்டுரை வாசிக்கப்பட்டது.

கண்டி நல்லாயன் கல்லூரி ஆசிரியையும் அகில இலங்கை சமாதான நீதவானுமான திருமதி. லலிதா நடராஜாவும் பேசினார்.

# மலையக தமிழாராய்ச்சி மாநாடு எதிர்கால ஆய்வுகளுக்கு நுழைவாயிலாக அமைய வேண்டும்

(கண்டி, செங்கடகல)

“மலையக வரலாற்றில் முதலாவதாக நடைபெறும் மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு எதிர்கால ஆய்வுகளுக்கு ஒரு நுழை வாயிலாகவும் மலையகத்தின் அனைத்து துறைக்ள சம்பந்தமான ஆய்வுகளை மேற் கொள்வதற்கு ஓர் உந்து சக்தியாகவும் அமைய வேண்டும் என்பதே எமது நோக்க மாகும். என மத்திய மாகாண தமிழ் கல்வி இந்து கலாசார வர்த்தக வாணிப சுற்றுலாத் துறை அமைச்சர் வி. புத்திரசிகாமணி கூறினார்.

கொட்டகல பத்தனை ஸ்ரீபாத கல்வியில் கல்லூரியில் கடந்த மூன்று தினங்களாக நடை பெற்ற முதலாவது மலையகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் இறுதி கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

மேற்படி இறுதிநாள் ஆய்வரங்கு பேராசிரியர் சோ. சந்திரசேகரன் தலைமையில் ஆரம்பமாகியது.

இவ்வாய்வரங்கில் ஏ.எஸ். சந்திரபோஸ், பி. முத்துலிங்கம் சட்டத்தரணி வி.டி. தமிழ் மாறன், ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தனர். அவைகள் தொடர்பாக பலரது கருத்துரைகளும் அதனைத் தொடர்ந்து பேராசிரியர் சிவத்தம்பியின் தொகுப்புரையும் இடம் பெற்றது.

மாகாண அமைச்சர் வி. புத்திரசிகாமணி மேலும் பேசுகையில் கூறியதாவது நமது நாட்டு அரசியல் சட்டத்தின் 16 ஆவது விதியின்படி தமிழ் மொழிக்கு அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது என்றாலும் தமிழ் மொழிக்கு உரிய இடத்தை வழங்குவதில் செயல்ரீதியாக எதுவுமில்லை. இதேவேளை எமது அரசியல் சாசனத்தில் 6 ஆவது விதிகளின கீழ் அவசரகால சட்டத்தை அமுல நடத்துவதும் நாட்டு பிரிவினைக்கு எதிராக சமாதான நீதவான்களிடம் கூட சத்தியப் பிரமாணம் வாங்குவதுமான செயல் பாடுகள் தீவிரமடைந்து வருகின்றன. இதே தீவிர போக்கு தமிழ் மொழிக்கான அரசியல் உரிமையை வழங்குகின்ற 16 வது சட்ட விதிக்கு அமைவதில்லை.

இன்றைய கல்வி முறை, பரீட்சைகளில் சித்தியடைவதற்கான ஒரு முறையாக மட்டுமே திகழ்கின்றதே தவிர எதிர்காலத்தில் அவர் களுக்கெல்லாம் அரசதுறை தொழிலகளிலோ அல்லது வேறுதுறை தொழில்களிலோ ஈடுபடுகின்ற ஒரு வாய்ப்பும் உத்தரவாதமும் இல்லை. மேலும் சர்வதேச மொழி பாடசாலைகள் ஆங்காங்கே பெருகி வருவதும் வசதியும் வாய்ப்பும் உள்ளவர் களது பிள்ளைகள் இவற்றில் கல்வி கற்பதும் எதிர்காலத்தில் சர்வதேச அந்தஸ்தோடு சர்வதேச வாய்ப்புக்களை பெறுவதற்காகத் தான். இந்நிலையில் மலையக சமுதாயம் எதிர்கால வளர்ச்சிப் போக்குகளோடு முகம் கொடுப்பதும் முன்னேறுவதும் எவ்வாறு எனும் வினாவிற்கும் விடையளிப்பதும் எப்படி? என்று சிந்திக்க வேண்டும். ஆங்கில கல்வியும் கம்பியூட்டர் கல்வியும் மட்டுமே சர்வதேச ரீதியிலான உத்தியோக வாய்ப்பு களுக்கு வழிவகுக்கும் என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. ஆகவே மலையக சமு தாயத்தின் எதிர்கால சந்ததிகளின் அறிவு வளர்ச்சியில் நமது நோக்கும் போக்கும் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கும் நாம் வழி வகைகளை காண வேண்டும் என்றார்.

# தேசிய மட்டத்தில் சமவாய்ப்பு கிடைக்கும் வரை சவால்களை எதிர்நோக்குவதில் சளைக்கக்கூடாது

## மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பேராசிரியர் சிவத்தம்பி

(மஸ்கெலியா - கண்டி)

தேசிய மட்டத்தில் சமவாய்ப்புகள் கிடைக்கும் வரை மலையகத்தில் சவால்களை எதிர் நோக்க வேண்டியிருக்கும். எத்தனை சவால் களை எதிர்நோக்க வேண்டியிருந்தாலும் அதனால் நாம் சளைத்துவிடக் கூடாது.

பத்தனை, ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற மலையகத் தமிழா ராய்ச்சி மாநாட்டின் ஆய்வரங்கினை ஆரம் பித்து வைத்து உரை நிகழ்த்திய பேராசிரியர் கா. சிவத்தம்பி இவ்வாறு தெரிவித்தார்.

இவ்வாய்வரங்கிற்கு பேராசிரியர் சோ. சந்திரசேகரன் தலைமை வகித்தார். மத்திய மாகாண இந்து, கலாசார, தமிழ்க் கல்வி அமைப்பின இணைப்பதிகாரியும், மதியுரைக் குழுத்தலைவருமான டி.வி. மாரிமுத்து வரவேற்புரை நிகழ்த்தினார்.

பேராசிரியர் சிவத்தம்பி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

"மலையக தமிழாராய்ச்சி மாநாடு பல்வேறு வளர்ச்சிப் படிகளைக் கொண்டது. மலையக சமூகத்தைப் பற்றி வரலாற்று ரீதியான மேற்கோள்கள், புலமை, சிந்தனை மட்டு மல்லாமல், அரசியல், சமூக, பொருளாதார ரீதியான அபிவிருத்தி, இலக்கியம், கல்வி தொடர்பான கோட்பாடுகள், பண்பாடு, கலை, கலாசார அம்சங்கள் என்பன ஆய்வுக்கு உட்படுத்தப்படல் அவசியம், மானிடவியல் குறித்து தெளிவான நிதானமான பின்னணி ஆராயப்பட வேண்டியதும் இன்றைய தேவை யாகும். மலையக சமுதாயம் முழுமை பெற்ற மக்களாக வாழ வேண்டுமென்ற ஆசை எமது எதிர்கால சந்ததியினருக்கு ஏற்பட வேண்டும்.

"மலையக சமுதாயம் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான வரலாற்று, பண்பாட்டு, கலை, கலாசார பாரம்பரிய பின்னணியைக் கொண்ட இந்நாட்டின் பிரதான உழைக்கும் சமுதாயமாகும். இச்சமுதாயத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் இச்சமுதாயத்தின் மேம் பாட்டுக்காக சிந்தித்துச் செயல்படுதல் அவசியம் என்பதை இம்மாநாடு தொனிப் பொருளாகக் கொண்டிருக்கிறது. சமுதாய வளர்ச்சி குறித்து இவர்கள் அக்கறை கொள்ளாவிட்டால் இம்மாநாட்டால் பயன் ஏற்படாது.

"இந்நாட்டிலே தேசிய மட்டத்தில் சம வாய்ப்புகள் கிட்டும் வரை மலையகத்தில் எதிர்நோக்கும் சவால்கள் ஓயாது. முன்னர் எதிர்நோக்கிய சவால்களைவிட எதிர்கால சவால்கள் அதிகமாக இருக்கலாம். அதற் காகச் சளைத்துவிடக் கூடாது.

மலையகம் இன்று ஆய்வுக்கு உட்

பட்டுள்ளது. இந்த ஆய்வ தொடர வேண்டும் அதற்கான ஆளுமை, மனிதவளம் அதிகரிக்கப் படல் முக்கியமாகும்.

இவ்வாறு பேராசிரியர் சிவத்தம்பி தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா பேசுகையில் கூறியதாவது,

மலையக மக்களின் வரலாறு பன்னெடுங்காலப் பழைமை வாய்ந்த தென்பதை மறுக்க முடியாது. பெருந்தோட்டத் தொழிலாளர்களை மட்டும் கொண்டு மலையகத் தமிழரின் வரலாற்றையோ, மொழி, கலை, இலக்கிய பாரம் பரியங்களையோ பாராமல் பழம்பெரும் பின்னணியையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அவ்வாறு ஆராயும் போது தான் ஒரு முழுமையான சமுதாய வளர்ச்சியை நிர்ணயிக்க முடியும்'' என்றார்.

லெனின் மதிவாணம் தொகுப்புரை நிகழ்த்தினார்.

### மலையக தமிழாரய்ச்சி மகாநாடு

## மலையக மக்கள் கல்வித்துறையில் பின்தங்கியிருப்பது தேசிய வளர்ச்சிக்கு பாதகமாக அமையும்

(கொட்டகல மத்திய தினகரன் நிருபர்)

இலங்கைப்போன்ற நாடுகளில் கல்வித் துறையில் மலையக மக்கள் பின்தங்கிய பிரிவினர்களாக இருப்பது அவர்களுக்கும் தேசியவளர்ச்சிக்கும் பாதகமாகும். மலை யகத் தமிழர்கள் கல்வித் துறையில் பின் தங்கியவர்களாக இருக்கும் வரை "யாவருக்கும் கல்வி'' என்ற இலச்சியத்தை அடைய முடியாது. இது ஒரு பாகுபாடு என்ற ஐயத்தை உருவாக்கும்.

தென் ஆசிய நாடுகள் வளர்முக நாடுகள் என்ற ரீதியில் நோக்கும் இடத்து, பாட சாலைக் கல்வி வளர்ச்சி பெற சாதகமான கொள்கைகள் இலங்கையிலேயே கடைப பிடிக்கப்பட்டன. இதன் கல்வி வளர்ச்சியில் ஆசியப் பிராந்தியத்தில் இலங்கை ஜப் பானுக்கு அடுத்து இடம்பெற்றாலும், அரசாங்கத்தின் கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகள், திட்டங்கள், கொள்கைகள் மலையகத்துக்கு முறையாக சென்றடைய வில்லை. இந்த அடிப்படை ஜனநாயக உரிமைகளைப்பெற வேண்டும்.

மலையக தமிழாராய்ச்சி மாநாட்டில் "மலையக சமூகம் ஒரு பன்முக ஆய்வு என்னும் கருத்தரங்கு பத்தனை ஸ்ரீபாத என்னும் கருத்தரங்கு நடைபெற்றது. இக்

கருத்தரங்கிற்கு தலைமை வகித்து சிறப்புரை ஆற்றிய பேராசிரியர் திரு. சோ. சந்திர சேகரன் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றி பேராசிரியர் திரு. சந்திரசேகரன் கூறியதாவது.

மலையக சமூக, பொருளாதார, கலாசார ரீதியாகப் பின்தங்கிய நிலையில் இருப் பதற்கு ஏழ்மை நிலையே அடித்தளம் ஆகும். இந்த நிலை மாற வேண்டும். கல்வி யியல் துறையில் முன்னேற்றம் கண்டால் தான் பெருந்தோட்டத்துறையில் வாழும் மக்களின் நிலையை உயர்த்த முடியும். இதற்காக கல்விமான்கள் தகுந்த முயற்சி களை எடுக்க வேண்டும் என்றார்.

பேராசிரியர் அம்பலவானர் சிவராஜா ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றும் போது, “இலங்கை வாழ் மலையகத் தமிழர் களின் வரலாறு எப்பொழுது ஆரம்பமாகியது என்ற கருத்து வேறுபாடுகள் அரசியல் தொழிற்சங்க, புத்திஜீவிகள், பத்திரிகை ஆசிரியர்கள் மத்தியில் தெரிவித்தார், மலை யகத் தமிழர்களின் வரலாறு பழமை வாய்ந்தது என்றும் மண் வளத்தோடு ஆரம்பமாகியது என்றும் கூறுகின்றனர். சில வரலாற்று ஆய்வாளர்கள் கண்டியில் இரண்டாவது மன்னன் இராஜசிங்கனுடன் ஆரம்பமாகிறது என்று கருதுகின்றனர். சிலர் டச்சுக்காரர் கால ஆட்சியில் இருந்தே ஆரம்பமாகின்றது என்றும் 1828 இல் என்றும் குறிப்பிடுகின்றனர்.

முதல் முதலாக கோப்பிச் செய்கை ஆரம்பித்ததில் இருந்து தென் இந்தியாவில் இருந்து தமிழர்கள் பானஸ் எனும் ஆங்கிலேயரினால் அழைத்து வரப்பட்டனர் என்று கூறுகின்றனர். எனினும் இந்திய வம்சாவழி மக்களின் வரலாற்றை பிழை யின்றி ஆய்வு செய்ய வேண்டும். எமது ஆய்வு ஒரு ஆரம்ப கட்டமாகவே கருது கிறேன் என்று கூறினார்.

இலங்கையில் மலையக தமிழ் மக்களின் கல்வி நிலை வளர்ச்சியும் என்னுடன் கட்டுரையை ஆய்வரங்கில் சமர்பித்து உரை யாடிய பேராசிரியர் மா.செ. மூக்கையா குறிப்பிட்டதாவது.

மலையக மாநாடு மக்களின் கல்வி நிலை பற்றி ஆய்வு செய்ய வேண்டும். இது ஒரு நீண்ட தொடர் கதையாகும். வெள்ளைகாரர்கள் காலத்தில் தோட்டப பாடசாலையில் 5ம் வகுப்பு வரை கல்விகற்க வாய்ப்பிருந்தது. அதற்கு மேல் படிப்பை தொடர வேண்டுமானால் பட்டனத்தில் சேர்க்க வேண்டும் இதனால் பொருளாதார பிரச்சனைகள் எழுந்து அவர்களின் கல்வி தடைப்பட்டது. அரசாங்கம் தோட்ட பாடசாலைகளை சுவீகரித்து அரசுடமையாக மாற்றிய பின் இப்போது கல்வி நிலை படிப்படியாக உயர்ந்து வருகின்றது. ஏனைய மாகாணத்தைப் போன்று கல்வி நிலையில் உயர்வு அடையாவிடினும் கல்வியில் ஒரு சில மாற்றங்கள் மறுமலர்ச்சி மலையகத்தில் தோன்றி வருகின்றன என்னு சொல்லலாம். மலையக கல்வி நிலை உயர்ந்து வருகின்ற பொழுது அவர்களின் வாழ்க்கை நிலையும் உயர்வடையும் என்றும் குறிப்பிட்டார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி குறிப்பிட்ட தாவது.

மலையக தமிழாராய்ச்சியில் உண்மை நிலையை ஆய்வு செய்வது மிகவும்

அவசியம் மலையகத்தில் தரமான எழுத்தாளர்கள் தோன்றியுள்ளார்கள். இன்னும் தோன்றி வருகின்றார்கள். கருத்து வளம் மிக்க கவிதைகள், கதைகள், கட்டுரைகள், நெடுங்கதைகள், நாவல்கள், எழும் ஆற்றல் உள்ளவர்கள் தோன்றியுள்ளார்கள். இவர்களுள் ஈழத்தில் வெளிரும் தின, வார, மாத இதழ்களில் துணை ஆசிரியர்களாகவும் பணியாற்றி வருகின்றார்கள். இவர்களின் இலக்கிய ஆற்றல்களையும் ஆய்வு செய்து விமர்சனம் செய்ய வேண்டும் என்று உரைத்தார். திரு எஸ்.எஸ். சந்திரபோஸ் (சமூகக்கல்வி பிரிவு). "மலையக தமிழரின் சமூக படையாக்கம்" என்று ஆய்வு கட்டுரையை சமர்பித்து உரையாற்றிய போது கடந்த 10 ஆண்டுகளில் மலையக தமிழரின் சமூக பொருளாதார நிலமைகளைப் பற்றி பல்வேறு ஆய்வு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் பல சமூகவியல் சிந்தனைகளை உள்ளடக்கமாக கொண்டவையாகும். இந்த ஆய்வு நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ள விடயங்களை மையமாக கொண்டு ஆழமான சமூகவியல் ஆய்வுகள் மேற்கொள்ளலாம் என்பது அறிஞர்களின் கருத்தாகும்.

சாதிமுறையையும், சமூக வகுப்பு முறைகளையும் உள்ளடக்கமாக கொண்ட சமூக படையாக்கம் சமூகத்தில் நிரந்தமான ஒரு அம்சமாக காணப்படுகின்றது. சமூக கட்டமைப்பு பற்றிய அணுகுமுறையாவது சமூக உறவுகள் எவ்வாறு ஒன்றுக்கொன்று தொடர்பு பட்டதாக காணப்படுகின்றது என்பதையும் சமூகத்தின் வளர்ச்சிக்கு இவை எவ்வளவில் துணைபுரிகின்றது என்பதனையும் ஆய்வு செய்ய வேண்டும். சமுதாயத்தில் பல்வேறு வடிவங்களான கட்டமைப்புகளை அவதானிக்க முடியும். இதில் அரசியல், பொருளியல், தொழிலியல் நுட்பம் ஆகியன பொருந்தும்.

19ம் நூற்றாண்டில் புலம்பெயர்ந்த இந்தியர்களும், வெளிநாடுகளில் இந்திய சமூகங்களும் ஓர் ஒப்பீட்டு கண்ணோட்டம் என்ற ஆய்வு கட்டுரையை வாசிக்கவிருந்த பேராசிரியர் திரு. கதிர்காம தம்பி சமூகமளிக்கவில்லை. அக்கட்டுரை வாசிக்கப் பட்டது.

# மலையக தமிழாராய்ச்சி மாநாடு நேற்று கோலாகலமாக ஆரம்பம்

## அரசியல், பொருளாதார, சமூக அந்தஸ்த்து வளர்வதற்கு உதவ வேண்டும் என அறிஞர்கள் ஆவல்.

(மஸ்கெலியா நிருபர் பா. தங்கம்)

மலையக மக்களின் அரசியல், சமூக பொருளாதார, வரலாற்று பின்னணிகளை ஆராய்வதற்கென கூட்டப்பட்டுள்ள முதலாவது மலையக தமிழாராய்ச்சி மாநாடு நேற்று ஆரம்பமாகியது.

தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும் ஆய்வு கட்டுரைகளை சமர்பிக்கவும் கருத்துரைகளை வழங்கவும் ஆய்வாளர்களும் கல்விமான்களும் கூடியுள்ளனர்.

பத்தனை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் நேற்று ஆரம்பமாகிய இம்மாநாட்டில் 600க்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழர் பாரம்பரியங்களுக்கு ஏற்ப மாநாடு நடைபெறும் மண்டபமும் சூழவுள்ள பகுதிகளும் வாழை, கமுகு மரங்கள் நாட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மத்திய மாகாண இந்து கலாச்சார தமிழ் கல்வி வர்த்தக வாணிப துறை அமைச்சர் வீ. புத்திரசிகாமணியின் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப விழாவில் இ.தொ.கா. தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் கண்டி இந்திய உதவி தூதுவர் அ. கருப்பையா ஆகியோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

பேராசிரியர் கா. சிவதம்பி கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞான கல்வித் துறை தலைவர் பேராசிரியர் சொ. சந்திரசேகரன் பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறை முதுநிலை விரிவுரையாளரும் வவுனியா இணைந்த பல்கலைக்கழக தலைவருமான மா.செ. மூக்கையா மற்றும் கல்விமான்கள் பாராளுமன்ற மாகாண பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். அமைச்சர் தொண்டமான் இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட அமைச்சர் எஸ். தொண்டமான் பேசுகையில் கூறியதாவது.

மலையக மக்களின் பிரச்சினைகள் சரியான முறையில் ஆராயப்பட்டு நிகழ் காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஏற்ற வகையில் ஆய்வுகள் சமர்பிக்கப்பட வேண்டும். மலையக தமிழ் மக்கள் உலக தமிழ் மக்களோடு தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தொடர்ந்து கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். நாம் சொந்த விருப்பு வெறுப்புகளை காட்டாமல் மக்களின் நலனை உணர்ந்து செயற்பட முன்வர வேண்டும்.

நுவரெலியா மாவட்டத்தின் அடுத்த ஆண்டில் நான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஏற்படுத்தப்படவுள்ளன. இவ்வாறு ஏற்படுத்தப்படும் போது தமிழ் மொழியில் கருமமாற்ற தமிழ் உத்தியோகத்தர்கள் நிறைய தேவைப்படுவார்கள். அதற்கு எமது இளைஞர், யுவதிகள் தயாராக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

மத்திய மாகாண (தமிழ்) கல்வி யமைச்சர் வி. புத்திரசிகாமணி பேசுகையில் கூறியதாவது

"மலையக தமிழாராய்ச்சி மாநாடு" நடைபெறும் என்று கடந்த ஆண்டு நடை பெற்ற சாதித்திய விழாவின் போதுஅறிவித்த நேரத்தில் ஆதரவும் கிடைத்தது. எதிர்ப்பும் வந்தது. மலையக மக்கள் தனி தேசிய இனமாக வாழ்ந்து வருகின்றனர். இத்தகைய ஆராய்ச்சி தேவை தான் என்பது உணரப் பட்டுள்ளது. எமது மக்களின் வரலாறு மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு அவர் களது பிரச்சினைகள் உரிமைகள் உழைப்பு நுண்கலை முதலானவை ஆராயப்பட வேண்டும். ஆராயப்பட்ட விடயங்களை அனைத்தும் "காப்பகம்" ஒன்று ஏற்படுத்தப் பட்டு பாதுகாக்கப்படும் அதற்கான ஒழுங்கு களை எமது அமைச்சு மேற்கொள்ளும்.

இந்த ஆண்டில் மாநாடு நின்று விடாது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை தொடர்ந்து நடத்தப்படும் அடுத்த ஆண்டு முற்பகுதியில் இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாடு நடத்தப்படவுள்ளது. 21ம் நூற் றாண்டை நோக்கி செல்கின்ற நேரத்தில் மலையக மக்களின் வாழ்க்கை முறை அவர்களின் எதிர்ப்பார்ப்பு பங்களிப்பு போன்ற வற்றையும் ஆய்வு செய்வது அவசியமாகும். அதற்கான ஆலோசனைகளை கல்விமான் களிடம் இருந்து பெற்றுக்கொள்வோம் என்றார்.

இந்திய உதவி தூதுவர்.

கண்டி இந்திய தூதுவர் அ. கருப்பையா பேசுகையில் கூறியதாவது

"மலையக தமிழ் சமூகத்திற்கு வரலாறு இருக்கின்றது அதை வெளிக்கொணர்வதன் மூலம் எதிர்கால சமூகத்திற்கு நாம் உதவ முடியும்.

மலையக மக்கள் மொழியால் மத்தால் உணர்வால மாத்திரமல்லாது பிரச்சினைகள் மூலமும் ஒன்றுபட்டுள்ளனர். மேலும் பல்வேறு துறைகளில் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள். ஆனால் தகுந்த வாய்ப்புகள் தான் இல்லை. எனவே வாய்ப்புகளை பற்றி கவலைப்படாமல் திறமைகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் வாய்ப்புகள் தானே தேடிவரும்" என்றார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி

மலையக சமூகம் ஒரு "சமூக ஆய்வு" என்ற தலைப்பில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்து பேசுகையில கூறியதாவது மலையக மக்கள் அரசியல் உரிமை களுக்காக போராடிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் இத்தகைய ஆராய்ச்சி மாநாடு நடத்தப்படுவது பொருத்தமான தாகும். மலையக மக்களின் மொழி பிரச்சினை நுண்ணிய முறையில் ஆய்வு செய்யப்பட வேண்டும் அவர்களின் பொரு ளாதார, சமூக வளர்ச்சிக்கு இந்த ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் பெருந்தோட்ட கோட்பாடுகளையும் முன்வைக்க வேண்டும்.

அதே நேரத்தில் பெருந்தோட்டத்தை அண்டியுள்ள கிராம, நகர மக்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். அதன் மூலமே மலையகப் பண்பாட்டையும் அரசியல் யாதார்த்தத்தையும் பேண முடியும் என்றார்.

இம்மாநாட்டில் மத்திய மாகாண இந்து கலாச்சார அமைச்சின் செயலாளர் எஸ்.பி. ராஜபக்ஸ மற்றும் பலரும் பேசினர்.

### எங்கள் கருத்து

# மலையக தமிழாராய்ச்சி மாநாடு

இலங்கையின் வரலாற்றிலேயே முதற் தடவையாக நடாத்தப்படும் மலையக தமிழா ராய்ச்சி மாநாடு இன்று கொட்டகலை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் ஆரம்ப மாகின்றது. மலையக தமிழ் பேசும் மக்களின் கலை, இலக்கிய பாரம்பரிய, பண்பாட்டு வடிவங்கள தனித்துவமானவை. கரகம், கும்மி, சிலம்பு, கோலாட்டம், காமன் கூத்து ஆகியவை மலையகத்தின் தனித்துவத்தை வெளிப் படுத்தும் கலாசாசார வடிவங்களாகும்.

அரசியல் பொருளாதார சமூக நிலை களை பொறுத்த வரை கூட வடக்கு, கிழக்கும் மலையகத்துக்கும் இடையில் பாரிய இடை வெளிகள் காணப்படுகின்றன. அன்றாடம் வயிற்றைக் கழுவதுடிக்கும் ஆத்துமாக்களே மலையக மண்ணில் அதிகம். வயிற்றோடும் வாழ்வோடும் பேராடும் அந்த மக்களின் பிரதான முரண்பாடு வித்தியாசமானது இதனால் தான் பிரிவினை போராட்ட நடவடிக் கைகள் மலையகத்து மண்ணை பிளந்து கொண்டு வெளிவரவில்லை.

கிட்டத்தட்ட 150 வருடங்களுக்கு முன்னே அடிமைகளாகவும் அநாதைகளாகவும் இழுத்து வரப்பட்ட இந்த மக்கள் கூட்டம் மிக கொடூரமான சூழ்நிலைகளுக்கு உட் படுத்தப்பட்ட போதிலும் அவர்களது கலை கலாச்சார செழுமைகள் மழுங்கடிக்கப் படவில்லை. “தோட்டக்காட்டான்” என்று பிரபுத்துவ தமிழர்களால் எட்டி உதைக்கப் பட்டவர்கள் இவர்கள் இந்த தமிழ் மக்களின் கலை கலாச்சார பண்பாட்டியல் செழுமை களை உலகிற்கு அறிமுகம் படுத்த மத்திய மாகாண இந்து கலாசார தமிழ் கல்வி அமைச்சு எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக் குரியதே. இதற்கென முன்முயற்சி எடுத்து உழைத்த அமைச்சர் வீ. புத்திரசிகாமணியும் பாராட்டுக்குரியவர். இன்றைய ஆரம்பம் இடையில் துவண்டுவிடாது தொடர வேண்டும் என்பதே எமது எதிர்ப்பார்ப்பாகும்.

# மலையக தமிழாராய்ச்சி மாநாடு கோலாகலமாக ஆரம்பம்

மலையக தமிழாராய்ச்சி மாநாடு நேற்று காலை 9.30 மணியளவில் கொட்டகலை ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியில் நாதஸ்வர இசை முழங்க ஆரம்பித்து வைக்கப்பட்டது. காலை 9.45 மணியளவில் மங்கள விளக்கேற்றும் நிகழ்ச்சிகள் முடிவடைந்ததை அடுத்து தமிழ் தாய் வாழ்த்தும் இடம் பெற்றது. பெரும் தொகையான மக்கள் அங்குரார்ப்பன நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மலையக தமிழாராய்ச்சி மாநாட்டின் செயற்பாட்டு குழு தலைவர் திரு. வே. மாரிமுத்து வரவேற்புரை நிகழ்த்தினார். தி. எஸ். பி. ராஜபக்ஸவின் செயலாளர் உரையை அடுத்து மத்திய மாகாண இந்து கலாசார தமிழ் கல்வி அமைச்சர் திரு. வி. புத்திரசிகாமணி சிறப்புரை தலைமையுரை நிகழ்த்தினார். மலையக மக்களின் கலை கலாச்சார பாரம்பரிய அம்சங்கள் பற்றி அமைச்சர் இங்கு எடுத்துரைத்தார்.

அமைச்சர் தொண்டமான் தனது வாழ்த்துரையில் மலையக தமிழாராய்ச்சி மாநாட்டை ஒழுங்கு செய்தவர்களைப் பாராட்டிப் பேசினார். இந்திய துணைத் தூதுவர் திரு. அ. கருப்பையாவும் அங்கு உரையாற்றினார். பேராசிரியர் சிவத்தம்பி சிறப்புரை நிகழ்த்தினார் அந்தனி ஜீவா நன்றியுரை நிகழ்த்தினார்.

# மலை முகடுகளில் மதுரத் தமிழ் முழக்கம்




மலையகத் தமிழ் ஆராச்சி பற்றிய பத்திரிக்கை செய்தி திரட்டு